தெய்வப் புலமைத்

திருவள்ளுவ நாயனரது

# திருக்குறளின் பாயிரமும்

அதற்குப்

பொன்னம்பலம் இராமநாதன்

இயற்றிய விருத்தியுரையாகிய

# இராமநாதீயமும்

யாழ்ப்பாணம்

நாவலர் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டன.

1919.

# பொருளடக்கம்

திருவள்ளுவர் சரித்திரம் ... ... ... பக்கம் 1—8
பிறப்பு ... ... ... ... ... 1
ஊர் ... ... ... ... ... 4
மனைவி ... ... ... ... ... 4
காலம் ... ... ... ... ... 5
நான்மறை ... ... ... ... ... 9—11
பால், இயல், அதிகாரம் ... ... ... 9
விஷயம் ... ... ... ... ... 11
புருஷார்த்தங்களைவிளக்கும் மூலநூல்கள்... ... 11–16
தர்ம விபாகங்கள் (அறத்தின் பிரிவுபாடுகள்) ... 16–17
சதுர் வர்ணங்களின் ஸூக்ஷ்மகதி ... ... 17–21
தர்மாஸ்ரமங்கள் ... ... ... ... 21

திருக்குறள், பாயிரம்
க—ம் அதி. கடவுள் வாழ்த்து பக்கம் 22–59
உ ,, வான்சிறப்பு ... 60–69
ங ,, நீத்தார் பெருமை ... 70–88
ச ,, அறன்வலியுறுத்தல் ... 87–120

அரும்பத அகராதி ... பக்கம் 121–129
அணிந்துரை ... ... 130–143

## பிழைதிருத்தம்.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 6 | 30 | பாண்டயர் | பாண்டியர் |
| 7 | 17 | AC | BC |
| 8 | 23 | முந்நிலை | முன்னிலை |
| 20 | 17 | பெரியோா | பெரியோர் |
| 23 | 19 | அமைக | அமையட்டும் |
| 26 | 19 | பாஶவி | பரஶிவ |
| 32 | 12 | ஓதப்படும் | ஓசத்தக்க |
| 45 | 23 | போருந்த | பொருந்த |
| ,, | 26 | நெருக்குண்டல் | நெருக்கப்படுதல் |
| 47 | 4 | நிஷகாம்ய | நிஷ்காம்ய |
| ,, | 18 | ஜிவிக்கின்றது | ஜீவிக்கின்றது |
| ,, | 26 | தொற்ற | தோற்ற |
| ,, | 30 | பிண்ணர் | பின்னர் |
| 48 | 8 | மமதையும் | மமதையையும் |
| ,, | 9 | இருள்வினை | இருவினை |
| ,, | 21 | என்ன | என |
| 49 | 6 | பாயிரு | பாயுரு |
| 54 | 6 | ஶதா | ஸதா |
| 58 | 5 | கரஹன | க்ரஹண |
| ,, | 25 | ஶருஷ்டி | ஸ்ருஷ்டி |
| 60 | 2 | மிஹ்மை | மஹிமை |
| 64 | 26 | வழர்ச்சி | வளர்ச்சி |
| 67 | 4 | ஸமரக்ஷணை | ஸம்ரக்ஷணை |
| 68 | 3 | சாந்தராயன | சாந்தராயண |
| 78 | 8 | ருஷியன் | ருஷியின் |
| ,, | 17 | மிகுக்த | மிகுந்த |
| 80 | 14 | துறத்தலைத் | துறத்தலைச் |
| ,, | 16 | காண்பற்குரிய | காண்பதற்குரிய |
| 84 | 1 | ௰எகூ | ௱எகூ |
| ,, | 33 | தொல்காப்யத்தில் | தொல்காப்பியத்தில் |
| 88 | 2 | செய்என்ற | செய்தல்என்ற |
| 89 | 37 | ஆத்மொதாரண | ஆத்மோத்தாரண |
| 90 | 1 | ஆதமோதாரணம | ஆத்மோத்தாரணம் |
| | 10 | அண்டரண்ட | அண்டாண்ட |
| 91 | 9 | பகவற்கீதை | பகவத்கீதை |
| 92 | 18 | விரரகம | விராகம் |
| ,, | 24 | இன்றியமையாது | இன்றியமையாத |
| 93 | 2 | லக்ஷிமி | லக்ஷ்மி |
| 94 | 1 | அறத்னூங் | அறத்தினூங் |

## பிழைதிருத்தம்.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 96 | 6 | இந்தகுறளில் | இந்தக்குறளில் |
| ,, | ,, | ஸூக்ஷம | ஸௌக்ஷ்ம |
| 98 | 10 | திருபு | திரிபு |
| ,, | 14 | நாட்டாமை | நாட்டாண்மை |
| ,, | 16 | பேறுலும் | பேற்றுலும் |
| 99 | 21 | வைசிதரயம் | வைசித்ரியம் |
| 100 | 31 | நாற்களுள் | நாட்களுள் |
| 102 | 1 | ஸூக்ஷம | ஸௌக்ஷ்ம |
| 103 | 18 | உத்தரணம | உத்தாரணம் |
| ,, | 21 | அநுஷடாணம் | அநுஷ்டானம் |
| ,, | 29 | இன்னுசொல் | இன்னுச்சொல் |
| 107 | 30 | சென்றல்கிவனது | செல்கின்றவனது |
| 112 | 3 | பீஜங்களை | பலன்களை |
| ,, | 6 | பழய | பழைய |
| 114 | 26 | தர்மஸக்தி | தர்மஶக்தி |

# திருக்குறள்.

## திருவள்ளுவர் சரித்ரமும் நூன்முறையும்.

தமக்குள் நின்றிலகும் மலங்களை அறுத்த ஆத்மாக்கள் பரிசுத்த ஆத்மாக்கள் என்றும், பரமாத்ம ஸ்வரூபிகள் என்றும், வேறு பலநாமங்களாலும் போற்றப்படுவார்கள். மலநீக்கம்பெற்ற ஆத்மாக்களின் ஸூக்ஷ்ம சரீரமும் ஸ்தூலசரீரமும் இயன்றபடி சுத்தப்பட்டிருப்பதால், அவற்றைத் திருமேனி என்றும், அத்திருமேனியிலிருந்து உதயமாகும் வாக்குகளைத் திருவாக்குகள் என்றும் விசேஷிப்பார்கள்.

இதுபற்றித் திருக்குறளை அருளிய திருவள்ளுவரது திவ்ய சரித்ரத்தைக் கூறவேண்டுமாயின், இவர் புண்ய பாப சிந்தனையோடுகூடி ஒரு காலம் இருந்தவர் எனவும், இவர்செய்த பூஜாபலன்களால் இவருக்கு ஸமத்வபுத்தியும் சித்தசுத்தியும் திருவருள்வாயிலாக அமைந்தன எனவும்; அப்பால், ப்ராணலய மனோலய யோகங்களால் ஸமாதியைப் (1) பெற்றுச் சுத்தாத்மாவாகிப் பரமாத்ம ஸ்வரூபியானார் எனவும்; இந்த ஸதேகமுக்தி நிலையில் போதனா சக்திமிகுந்து அறப்பாலையும் ஞானப்பாலையும் தக்கவர்களுக்கு அன்போடு ஊட்டிக்கொண்டே இருந்தார் எனவும்; இவ்வாறாய மெய்யறிவை ஊட்டும் வண்மை(2) யைப்பற்றி இவரைத் ''திருவள்ளுவர்(3)'' என்று இவரடியார்கள் அழைத்தனர் எனவும்; வேதாகமங்களில் அடங்கிய அறம் பொருள் இன்பம் வீடு என்னும் புருஷார்த்தங்களை எளிதில் அறியும் வண்ணம், குறள்வெண்பாக்களால் ஓர் அரிய பெரிய நூலைச் செய்தார் எனவும்; இந்த நூல் தமிழ்ச்சங்கத்தின்கண் அரங்கேற்றப்பட்ட சமயத்தில் அச்சங்கத்துப் புலவர்களால் ''திருவள்ளுவர் திருக்குறள்'' எனப் பூஜிக்கப்பட்டது எனவும் கூறி முடிப்பதே அறிவாளிகளுக்கு ஸம்மதமாகும்.

---

(1) ஸமாதி=''ஆதி'' என்ற மனதை விருப்பு வெறுப்பற்று ஸமப்படுத்தி, நினையாமலும் தூங்காமலும், இருத்தல்.

(2) வண்மை=வளம் (செழிப்பு) உடைமையின் தன்மை.

எவ்வகையாகிய செழிப்பைப் பெற்றாரோ எனின், மெய்யறிவாகிய செழிமையை என்க.

(3) வள்ளுவர்=மெய்ஞ்ஞான வளப்பத்தை உடையவர்.

ஆனால், ஸ்தூலதேகமே நான் என்று வாழும் லோகத்தாருக்குத் திருவள்ளுவரது ஸ்தூலசரீரத்தின் மாதா பிதா, பிறந்தவூர், வளர்ந்தவூர், தொழில், முதலிய விஷயங்களை விரித்தாலன்றி த்ருப்தி அடையார் என்பது பற்றி அவ்விஷயங்களையும் ஈண்டு விசாரிப்பது அவசியமாயிற்று.

## திருவள்ளுவர் ஸ்தூலதேகத்தின் பிறப்பு.

திருவள்ளுவரது ஸதூலதேகத்தைப்பற்றிச் சிலர் ஸித்தாந்த சாஸ்த்ரமாகிய ஞானாம்ருதநூலாசிரியரை ஆதாரமாகக்கொண்டு, யாளிதத்தன் என்னும் பராஹ்மணனும் ஒரு புலைச்சியும் கூடிப் பெற்றார் என்பர் வேறுசிலர் கபிலர் அகவல் என வழங்கிவரும் நூலை மேற்கோளாக எடுத்து, பகவன் என்னும் ப்ராஹ்மணனும் ஆதி என்னும் கருவூர்ப் புலைச்சியும் பெற்றார் என்பர்.

இவர்க்கு ஆறு ஸகோதரர் உண்டென்றும் சொல்வார்கள்.

தொல்காப்பியத்துக்கு உரைவகுத்த ஆத்ரேய கோத்ரப் பேராசிரியர் அவ் எழுவர்தம் பெயர்களை,—

கபிலர் அதிகமான் சாற்குறவர் பாவை
முகிலனைய கூந்தல் முறுவை—நிகரிலா
வள்ளுவ ரௌவை வயலூற்றுக் காட்டிலுப்பை
எள்ளில் எழுவ ரிவர்.

என்று கூறினார்.

இவ்வெண்பாவில் குறத்தியினால் எடுத்து வளர்க்கப்பட்ட வள்ளியம்மையைக் "காற்குறவர்பாவை" என்றார். உப்பை என்றவள் ஊற்றுக் காட்டிற் பிறந்தமையால், வயலூற்றுக்காட்டிலுப்பை என்றார். முறுவையைச் சிலர் உறுவை என்பர்.

புறநானூறு என்ற காவ்யத்தில், 89-ம் பாட்டில், ஔவை தம்மிளமையில், ஆடியும் பாடியும் ஜீவனஞ் செய்கின்ற விறலிகளுடன் சம்பந்தப்பட்டார் என்று சொல்லப்பட்டிருக்கின்றது.

சங்கநூலாகிய புறநானூறு 200-ம் பாட்டிலும் 201-ம் பாட்டிலும் கபிலர் "புலனழுக்கற்ற அந்தணாளன்" என்று கூறப்பட்டமையால், அவர் சித்தசுத்தியுடனிருந்து அழகிய உபசாந்தத்தைப் பெற்று வாழ்ந்த ஸ்வய ப்ராஹ்மணன் என்று அறியவேண்டியது.

திருவள்ளுவமாலையில், மாமூலனார் "வள்ளுவன் என்பான் ஓர் பேதை, அவன் வாய்ச்சொல் கொள்ளார் அறிவுடையார்" என்றமையால், திருவள்ளுவரை வள்ளுவ ஜாதிக்குரியவனென்று பழிப்பவன் மூடன் என்றும், அறிவாளிகள் வள்ளுவர் என்ற நாமத்திற்கு வேறோர் அர்த்தம் சாற்றுவார் என்றும் குறிக்கப்பட்டது.



எனவே, ஔவை போலவும் கபிலர் போலவும் எங்கள் நூலாசிரியரும் மேலான சாந்தியைப் பெற்றாரென்றும், அப்பேற்றால் அவர் ஸ்வய ப்ராஹ்மணனாகிக், கேட்டவர்க்கெல்லாம் அறத்தையும் ஞானத்தையும் கொடுத்தாரென்றும், அக்காரணம்பற்றியே அவரை வள்ளுவர் (மெய்யறிவு ஈகையாளர்) என்று சொல்லத்தகுமென ஸ்தாபிக்கப்பட்டது.

சிவஞானமுனிவர் அருளிச்செய்த சோமேசர் முதுமொழி வெண்பாவில்,—

"மெய்த் திருவள்ளுவனார் வென்று உயர்ந்தார், கல்வி நலம்
துய்த்த சங்கத்தார் தாழ்ந்தார், சோமேசா—உய்த்தறியின்
மேற்பிறந்தா ராயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்
கற்றா ரனைத்திலர் பாடு."

என்று கூறினமையால், திருவள்ளுவரது ஸ்தூலதேகம் வள்ளுவ ஜாதியில்நின்று தோன்றினது என்றும், பேரறிவாளிகள் ஸ்தூலதேக லக்ஷணங்களைக் கருதார் என்றும், ஆத்ம லக்ஷணங்களையே கருதுவார் என்றும், ஆத்மாவைப்பற்றிய மலங்கள் தேயத்தேய அதனறிவும் அன்பும் வளருமென்றும், அன்பும் அறிவும் விருத்தியடைவதால் மாத்ரம் ஒருவனைப் பெரியவன் என்று கூறலாமென்றும், திருவள்ளுவரது அறிவும் அன்பும் பூரணப்பட்டு ப்ரஹ்ம ஸ்வரூபமாகி, விரிவான போதனா சக்தியைப் பெற்றுப் பலருக்கும் அறத்தையும் ஞானத்தையும் உபகரித்துக்கொண்டிருந்தமையால், அவரே ஞானதாதா என்றும், அவருக்கே திருவள்ளுவர் என்ற நாமம் பொருந்துமென்றும், உபதேசிக்கப்பட்டது.

ஜீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, கம்பராமாயணம் என்னும் நூல்களில் வள்ளுவன் என்ற பதம் யானைமேல் ஏறி அரசன் அளித்த ஆஞ்ஞைகளைப் பறையறைந்து சாற்றுவோன் எனக்குறிக்கும்.

உலகவழக்கத்தில் வள்ளுவன் என்ற பதம் பறையர்களுடைய குரவர் எனப் பொருள்படும்.

பிங்கல நிகண்டில் "வள்ளுவர் சாக்கியர் என்னும் பெயர் மன்னர்க்குட்படுங் கர்மத்தலைவர்க்கொக்கும்" எனவும், "வருநிமித்திகன்பேர் சாக்கை வள்ளுவன் என்றுமாகும்" எனவும் கூறப்பட்டிருப்பதால், சிலர் திருவள்ளுவரை அவர்காலத்து ராஜாங்கத்துக்குரிய உயர்ந்த உத்தியோகஸ்தர் எனவும், சைவனன்று அர்ஹத் (ஆருகதன்) எனவும், கூறுவர்.

தேகம் எவ்விதக் கோலங்களைக்கொண்டாலும், அவற்றால் எங்கள் புத்தி மாறுபாடடையாமல் அத்தேகத்தினுள் இருக்கும் அறிவையும் அன்பையுமே நோக்கவேண்டும். பேரறிவையும் பேரன்பையும் சார்ந்த மனம் புத்தி சித்தங்கள் திருவருளால் ஏவப்பட்டுத், தமிழகத்தில் வாழும் ஆத்மாக்களுக்

கு முக்திநிலையைத் திருக்குறளிற் புகட்டின சக்திமானே திருவள்ளுவ நாயனார் என்றறிவது எங்கள் கடமை.

## ஊர்.

மெட்ராஸ் என்னும் ராஜதானியின் ஓர்பாகமாகிய மயிலாப்பூரில் இவரை அடக்கம்பண்ணி, ஆலயப் ப்ரதிஷ்டைசெய்து பரம்பரையாகப் பூஜித்துக்கொண்டு வருகின்றவர்கள், மயிலாப்பூரிலேயே இவர் பிறந்து வளர்ந்தார் என்பர்.

வேறுசிலர் திருவள்ளுவமாலையில் நல்கூர்வேள்வியார் கீழ்வருமாறு பாடிய பாட்டை ஆதாரமாகக்கொண்டு, திருவள்ளுவர் வைகையாறு சூழ்ந்த தென்மதுரையிற் பிறந்தார் என்று கூறுவர்,—

“உப்பக்க நோக்கி உபகேசி தோண்மணந்தான்
உத்தர மாமதுரைக் கச்சென்ப—இப்பக்கம்
மாதானு பங்கி மறுவில் புலச்செந்நாப்
போதார் புனற்கூடற் கச்சு.”

இதன்பொருள்: உப்பக்கம் நோக்கி=வடபக்கத்தைப் பார்த்து.

உபகேசி தோள் மணந்தான்=லக்ஷ்மி அம்சமாகிய ருக்மிணியை விவாஹம் செய்த ஸ்ரீ க்ருஷ்ண பகவான்.

உத்தரம் மா மதுரைக்கு அச்சு என்ப=பரதகண்டத்து உத்தரதேசத்திலுள்ள பெருமை பொருந்திய வடமதுரைக்கு ஆதாரம் என்பார்கள்.

இப்பக்கம்=இந்தப்பக்கமாகிய தக்ஷிணத்தில்.

மாதாநுபங்கி=(அன்பிற் சிறந்த தாயார் போன்ற ஒழுக்கத்தையுடையவள் எனப் பொருள்படும்) மாதாநுபங்கி என்று அழைக்கப்பட்ட மாதைத் (தன் மனைவியாக) உடையவரும்.

மறுவில் புலம் செந்நாப் போதார்=குற்றமற்ற வித்வத்தனம் பொருந்திய, தீமைக்குப் பாத்ரம் ஆக்காது சீர்மையைச் செய்கின்ற நாவை உடையவருமாகிய ப்ரஹ்மாம்சத் திருவள்ளுவர் (போதன்=ப்ரஹ்மா.)

புனற் கூடற்கு அச்சு=நீர் சூழ்ந்த தென்மதுரைக்கு ஆதாரம் என்பார்கள்.

## மனைவி.

நல்கூர் வேள்வியார் பாடற்படி திருவள்ளுவர் பத்நியின் பெயர் மாதாநுபங்கி என்றாயிற்று. ஆனால், கபிலர் அகவல் என்று வழங்கிவரும் நூலில் அவர் பெயர் வாசுகி எனக் கூறப்பட்டது.

இவர் இறந்தபொழுது திருவள்ளுவர் மனம் உருகிப் பாடியதாக நச்சினார்க்கினியர் தொல்காப்பிய உரையில் பின்வரும் வெண்பாவைக் காட்டினார்,—



“அடிசிற் கினியாளை யன்புடை யாளைப்
படிசொற் பழிநாணு வாளை—அடிவருடிப்
பின்றூங்கி முன்னுணரும் பேதையை யான்பிரிந்தால்
என்றூங்கு மென்கண் ணெனக்கு.”

இதில், தமது பத்நியின் பதிவ்ரதத்தையும், தமது மனசின் ஆற்றாமையையும் கூறினார். இதன்பொருளாவது,—

அடிசிற்கு இனியாளை=சாதம் முதலிய உணவுகளை அறுசுவையோடு பாகஞ்செய்தவளை.

அன்புடையாளை=என்னை ஸதாகாலமும் நினைந்து உருகினவளை.

சொல்படி பழி நாணுவாளை=என்சொற்படி நின்று பாபத்துக்கு அஞ்சினவளை.

அடி வருடி=என்பணியை எப்பொழுதும் தழுவி.

பின் தூங்கி=நான் தூங்கும் வரைக்கும் காத்திருந்து அதன்பின் நித்திரை செய்து.

முன் உணரும்=நான் விழிக்கு முன் தான் விழிக்கும்.

பேதையை=பதிவ்ரதத்துக்குரிய விஷயங்களைத் தவிர வேறொன்றில் மனசைச் செலுத்தாமற் காத்த பெண்ணை.

யான் பிரிந்தால்=நான் இழந்தால்.

எனக்கு என் கண் என் தூங்கும்=எனக்கு அநுகூலமாய் அருளப்பட்ட மனசும் புத்தியும் எவ்விதம் ஆறி நிற்கும்.

## காலம்.

திருவள்ளுவர் காலம் பல விஷயங்களைக் கொண்டே நிதானிக்க வேண்டியது.

மணிமேகலை என்னும் பழைய நூலை இயற்றிய கூலவாணிகன் சாத்தனாரும், சிலப்பதிகாரம் என்னும் நூலை இயற்றிய இளங்கோவடிகளும் ஒருவர்நூற்கொருவர் சிறப்புப்பாயிரம் பாடினராதலின், இருவரும் ஒருகாலத்தவராயிற்று.

இவர்களில், மணிமேகலை பாடிய சாத்தனார் தமது நூலில் திருவள்ளுவர் திருக்குறளில் ஒன்றாகிய,—

“தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை”

என்னும் பாட்டையும் அவர் பெயரையும் ஸ்பஷ்டமாக எடுத்துக்காட்டியபடியால், சாத்தனாருக்கும் இளங்கோவடிகளுக்கும் திருவள்ளுவர் முற்பட்டவர் என்பது தெளிவாகும்.

மேலும் இளங்கோவடிகள் சேர ராஜனாகிய செங்குட்டுவனுக்குத் தம்பியாதலாலும்; சேரன் செங்குட்டுவனும், சோழன் நலங்கிள்ளியும், பாண்டியன் நெடுஞ்செழியனும், இலங்கை ஆண்ட கஜபாகுவும் ஒருகால்த்தவரென்று சிலப்பதிகாரத்தில் விளக்கப்பட்டிருப்பதாலும், திருவள்ளுவர் கஜபாகுக்கும் முற்பட்டவரென்று சித்திக்கின்றது.

கஜபாகுவின் காலம் இலங்கைச்சரித்ரத்தை விரிக்கும் மஹாவம்சம் என்னும் நூலில் வகுத்திருக்கின்றது. இப்படிக் குறிக்கப்பட்ட கஜபாகுவின் காலத்தை க்ரீஸ்தவ காலமாக்கினால், இவர் யேசுநாதர் பிறந்து நூற்றுப் பதின்மூன்றாம் ஆண்டுதொட்டு நூற்றிருபத்தைந்தாம் ஆண்டுவரையில் இலங்கையில் அரசுபுரிந்தாரென்று முடியும்.

எனவே, திருவள்ளுவர் காலம் (1917–117,AC) ஆயிரத்தெண்ணூறு வருஷங்களுக்கு முற்பட்டதென்று நிச்சயமாகக் கொள்ளத்தக்கது.

இதன்மேல் எவ்வளவு காலத்துக்குட்பட்டுத் திருவள்ளுவர் வாழ்ந்தார் என்று வினவின், கடைச்சங்கத்துப் புலவராகிய நக்கீரர் இறையனாரகப் பொருளுக்குத் தாமெழுதிய உரையைக்கொண்டு அக்காலத்தைக் குறிப்பிட வேண்டும்.

இந்த உரையில் தலைச்சங்கம் 4440 வருஷங்கள் இருந்ததென்றும், இது அழிந்தபின் இடைச்சங்கத்தை வெண்டேர்ச்செழியன் என்ற பாண்டியன் ஸ்தாபித்தான் என்றும், இது 3700 வருஷம் கபாடபுரத்தில் நிலைநின்றதென்றும், அப்பட்டினம் முடத்திருமாறன் என்ற பாண்டியன் காலத்தில் கடல்கொள்ளப்பட்டு அழிந்ததென்றும், அதன்மேல் முடத்திருமாறனே கடைச்சங்கத்தை ஸ்தாபித்தான் என்றும், இது 1850 வருஷம் நிலைநின்றதென்றும், இதற்குக் கடையாயபாண்டியன் உக்கிரப்பெருவழுதி என்றும், அவர்காலத்துக்குப்பின் கடைச்சங்கம் நடைபெறவில்லை என்றும் கூறப்பட்டிருக்கின்றது.

தலை இடை கடைச் சங்கங்கள் முறையாக 4440, 3700, 1850 வருஷங்கள் இருந்தன என்று திடமாகக் கூறின கடைச்சங்கத்து நக்கீரரை விசுவாசிப்பதற்கு நியாயங்களுண்டு.

இவர் காட்டிய கணக்கின்படி அம்மூன்று சங்கங்களும் நடைபெற்று வந்த 9950 வருஷங்களுக்குச் சங்கம் இரீஇயின பாண்டியர்கள் 197 வர் என்றமையால், சராசரி ஓரோர் அரசனுக்கு ஐம்பது வருஷ செங்கோன்மை வகுக்கப்பட்டது. இது பாழ்பற்றிய இக்காலத்து அரசர்களுக்கு ஒவ்வாதாயினும், அக்காலத்தவர்களுக்கு ஒவ்வும். பண்டைக் காலத்தில் எவ்வெச்சாதியாரும் மனிதருக்கு மிக நெடிய வயது கூறியிருப்பதாலும், நெடும் வயது புண்ய கர்மத்தாலும் சித்தசுத்தியாலும் ப்ராணாயாம மனோலயப் பழக்கங்களாலும் வித்திக்கும் என்று வேதாகமங்கள் விளக்குவதா



லும், தேகத்தை ஸ்திரப்படுத்தும் பொருட்டுக் காயகல்பம் என்ற அரிய மருந்தை முற்காலத்து அரசர் யோகிகளிடம் பெற்றுண்டு வந்தமையாலும், நக்கீரரின் கால நிர்ணயம் முற்றாக நம்பற்பாலது.

இக்கணக்கையும், முன்னர்க் குறிப்பிட்ட பாண்டியன் நெடுஞ்செழியன், சேரன் செங்குட்டுவன் முதலியோர் கணக்கையும், கலியுக ஆரம்பத்தையும் ஸம்பந்தப்படுத்தினால்,—

இடைச்சங்க ஆரம்பம் இற்றைக்கு 7500 வருஷங்களுக்கு முன் என்றும்,

மஹாபாரத யுத்தம் இற்றைக்கு 5100 வருஷங்களுக்கு முன் என்றும்,

கலியுக ஆரம்பம் இற்றைக்கு 5018 வருஷத்துக்கு முன் என்றும்,

முடத்திருமாறனாற் றொடங்கப்பட்ட கடைச்சங்க ஆரம்பம் இற்றைக்கு 3800 வருஷங்களுக்கு முன் என்றும்,

இதன்முடிவு இற்றைக்கு 1950 வருஷங்களுக்கு முன் என்றும், அவ்வருஷமே உக்கிரப்பெருவழுதியின் உலகவாழ்க்கை பூர்த்தியாயிற்று என்றும் கொள்ளவேண்டியது.

எனவே, ப்ரிடிஷ் அரசுக்குரிய க்ரீஸ்தவ காலவகுப்பின்படி, திருவள்ளுவர் காலம் AC 30 க்கு முன்பின்னாய் இருக்கும் என்பது தெள்ளிதிற் புலப்படும்

---

## நூல்.

திருவள்ளுவர் இயற்றியநூல் **குறள்வெண்பா** ரூபமாக உள்ளது. இதில் 133 அதிகாரங்களும் 1330 குறள்களும் உண்டு.

மாச்சீர் விளச்சீர் காய்ச்சீர் ஒழிந்த ஏனைய சீர்கள் பொருந்தப்பெறுதாய், வெண்டளை பிழையாது, மூன்று சீரால் முடியும் இறுதியடி ஒழிந்த மற்றைய அடி நான்கு சீருடையதாய், காசு பிறப்பு நாள் மலர் என்னும் வாய்பாடுகளில் ஒன்றால் முடிவது **வெண்பா** எனப்படும்.

இது இரண்டடியோடு வரும்பொழுது, **குறள்வெண்பா** எனப்படும். இதில் முதலடி நான்கு சீராயும், இரண்டாம் அடி மூன்று சீராயும் இருக்கும்.

நாயனார்பாடிய ஆயிரத்து முந்நூற்று முப்பது குறள்களும் பரமேசுவரனது அருட்சக்தியில்நின்று தோன்றினமையால், இந்நூல் "**திருக்குறள்**" என்று ஆதியிலேயே விசேஷிக்கப்பட்டது.

இது கடைச்சங்கத்தில் அரங்கேற்றப்பட்ட நூல்களில் ஒன்று.

தமிழ்ச்சங்கம் என்பது தமிழ்நாட்டை ஆண்டுவந்த பாண்டியர்களால் சங்கமிருந்து நூலாராய்வதற்கு நியமிக்கப்பட்ட புலவர்களது அவை (குழாம், ஸபை).

புலவர் என்பது கல்வியைக் கற்றுணர்ந்த பாவலரும் நாவலரும்.

இவர்களைச் சங்கத்துக்கு அழைத்த அரசன் சங்கம் இரீஇயின அரசன் எனப்படுவான்.

தமிழ்ச்சங்கங்களைப்பற்றித் திருவிளையாடற் புராணத்திலும், முற்கூறிய இறையனார் அகப்பொருளுக்கு நக்கீரர் சாற்றிய உரையிலும், தொல்காப்பியப் பொருளதிகாரத்துக்கு நச்சினார்க்கினியர் சாற்றிய உரையிலும், சிலப்பதிகாரத்துக்கு அடியார்க்கு நல்லார் சாற்றிய உரையிலும் அறியலாம். மாணிக்கவாசக ஸ்வாமி அருளிய திருக்கோவையாரினும் தமிழ்ச் சங்கத்தைக் குறித்திருக்கின்றார்.

தமிழகத்தில் நடைபெற்று வந்த தலைச்சங்கம் காய்சினவழுதி என்னும் பாண்டியராஜன் காலத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. இதற்கு அக்ராஸனாதிபதி அகஸ்த்யமாமுனிவர், இரீஇய இடம் கந்யாகுமரிக்கப்பால் பாண்டியர்களுக்கு ராஜதானியாக வெகுகாலம் விளங்கிக் கடல்கொள்ளப்பட்ட தென்மதுரை.

இடைச்சங்கம் இரீஇய இடம் ஸுப்ரஹ்மண்ய ஸ்தலமாகிய திருச்செந்தூருக்குத் தென்மேற்றிசையில் இருந்த கபாடபுரம். இதனையும் இதற்குரிய பல நூல்களையும் கடல்கொண்டுபோயிற்று.

அதன்பின் முடத்திருமாறன் மீனாக்ஷி சுந்தரேசுவரர் திருக்கோயிலைச் சூழ்ந்திருக்கும்படி ஓர் நகரை உண்டாக்கி அதற்கு மதுரை எனப் பெயரிட்டான்.

இந்தத் திருக்கோயிலிலே இவன் ஸ்தாபித்த கடைச்சங்கம் உக்கிரப் பெருவழுதி என்ற பாண்டியராஜன் காலம்வரையும் நடைபெற்று ஒழிந்தது

இவ்வரசன் முன்னிலையில் திருக்குறள் அரங்கேற்றப்பெற்றது

அரங்கேற்றல்=ரங்கத்தின்கண் ஏறச்செய்தல். (ரங்கம்=அரங்கம், சபை.)

ஏறச்செய்தல் என்றது வித்வான்களின் வினாக்களுக்கு விடை அளித்து அங்கீகரிக்கும்படி செய்தல்.

தமிழ்ச்சங்கத்தில் ஏற்றிய நூல்களுக்குச் சாற்றுக்கவி சங்கத்துப் புலவர்களால் கொடுப்பது வழக்கம்.

அரங்கேற்றப்பெற்ற நூல்களுக்குச் சாற்றுகவிகள் சிறப்புப்பாயிரமாகும். திருக்குறளுக்குச் சிறப்புப்பாயிரமான பாக்கள் ஐம்பத்துநான்கு. இவையெல்லாம் திரட்டிச் சேர்த்துத் திருவள்ளுவர்மாலை எனப்பட்டது.

சங்கத் தலைவனாகிய உக்கிரப்பெருவழுதி என்னும் பாண்டியராஜன் சாற்றிய வெண்பா கீழ்வருமாறு காண்க,—



"நான்மறையின் மெய்ப்பொருளை முப்பொருளா நான்முகத்தோன்
தான்மறைந்து வள்ளுவனாய்த் தந்துரைத்த—நூன்முறையை
வந்திக்க சென்னி, வாய் வாழ்த்துக, நன் னெஞ்சஞ்
சிந்திக்க, கேட்க செவி."

ப்ரஹ்மாவே தமது நான்முகத்தையும் சதுர்புஜத்தையும் மறைத்து' வள்ளுவனாகத் தோன்றி, வேதங்களின் உண்மையான பொருள்களை மூன்று பாலாகப் பிரித்துக், கூறிய திருக்குறள் என்று விரிக்கப்பட்ட நூலைத் தலை வணங்கக்கடவது, வாய் போற்றக்கடவது, நல்லமனம் நினைக்கக்கடவது, காது கேட்கக்கடவது, என்று மஹா பாண்டித்யம் பெற்று அரசனாய் வாழ்ந்த உக்ரப்பெருவழுதி போற்றினார்.

அவ்வாறே, கூலவாணிகன் சாத்தனாருக்கு முற்பட்டவரும், உக்ரப் பெருவழுதி காலத்தில் வாழ்ந்தவருமாகிய சீத்தலைச் சாத்தனார் கீழ்வருஞ் சாற்றுகவியைப் பாடினார்,—

"மும்மலையு முந்நாடு முந்நதியு முப்பதியு
மும்முரசு முத்தமிழு முக்கொடியு—மும்மாவுந்
தாமுடைய மன்னர் தடமுடிமேற் றாரன்றோ
பாமுறைதேர் வள்ளுவர்முப் பால்."

இந்த அழகிய வெண்பாவின் பொருளை விரித்துக் கூறுவது மாணவர்கட்கு நன்று.

மூன்று மலைகளாகிய நேரி கொல்லி பொதிய மலைகளையும், மூன்று நாடுகளாகிய சேர சோழ பாண்டிய நாடுகளையும், மூன்று நதிகளாகிய பொருனை காவிரி வைகை நதிகளையும், மூன்று ராஜதானிகளாகிய கருவூர் உறையூர் மதுரை என்ற பட்டினங்களையும், மூன்று பேரிகளாகிய வில்முரசு புலிமுரசு மீன்முரசுகளையும், இயல் இசை நாடகம் என்னும் மூவிதத்தமிழின் சேரநாட்டு நடையையும் சோழநாட்டு நடையையும் பாண்டியநாட்டு நடையையும், மூன்று கொடிகளாகிய வில் புலி மீனக்கொடிகளையும் மூன்று பட்டத்துக் குதிரைகளாகிய பாடலம் கோரம் கனவட்டம் என்ற குதிரைகளையும், முறையாக உடைய சேர சோழ பாண்டியர் என்னும் மூவரசரினது மஹாமுடிகளின்மேல் தரிக்கத்தக்க மாலை அன்றோ, பாக்களின் முறை தேர்ந்த வள்ளுவரது முப்பால், என அவ்வெண்பா பொருள்படும்.

## பால், இயல், அதிகாரம்.

திருக்குறளினுள்ள நூற்றுமுப்பத்துமூன்று அதிகாரங்களையும் மூன்று பால்களாகப் பிரித்து, அறத்துப்பாலில் முப்பத்தெட்டு அதிகாரங்களை

யும், பொருட்பாலில் எழுபது அதிகாரங்களையும், காமத்துப்பாலில் இருபத்துநான்கு அதிகாரங்களையும் அடக்குவது வழக்கம்.

இவ்வழக்கப்படி அடக்கின முறை கீழ்வருமாறு காண்க:—

| | | | |
|---|---|---|---|
| க. **அறத்துப்பால்,—** | | | |
| | பாயிரம் | அதிகாரம் | ௧—௪. |
| | இல்லற இயல் | ,, | ௫—௨௪. |
| | துறவற இயல் | ,, | ௨௫—௩௭. |
| | ஊழ் | ,, | ௩௮. |
| உ. **பொருட்பால்,—** | | | |
| | அரசியல் | ,, | ௩௯—௬௫. |
| | அங்கவியல் | ,, | ௬௬—௯௫. |
| | ஒழிபியல் | ,, | ௯௪—௧௦௮. |
| ௩. **காமத்துப்பால்,—** | | | |
| | களவியல் | ;, | ௧௦௯—௧௧௫. |
| | கற்பியல் | ,, | ௧௧௬—௧௩௩. |

திருவள்ளுவர் தமது குறள் வெண்பாக்களைக் கடைச்சங்கத்தில் அரங்கேற்றிய சமயத்தில் உடனிருந்த புலவர்களுள், சங்கத்தலைவனாகிய உக்ரப்பெருவழுதி என்னும் பாண்டியராஜனும், கல்லாடனார் சீத்தலைச்சாத்தனார் மருத்துவன்தாமோதரனார் நாகன்றேவனார் கோதமனார் ருத்ரஜந்மகண்ணனார் களத்தூர்க்கிழார் தேனீக்குடிக்கீரனார் ஆலங்குடிவங்கனார் என்னும் சங்கப்புலவர்களும் திருக்குறள் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது என்று கூறினார்கள்.

மேலும் அறத்துப்பாலில் பாயிரம் இல்லறம் துறவறம் ஊழ் என நான்குபிரிவுகள் உள என்றும், பாயிரத்தில் அதிகாரம் நான்கும், இல்லற இயலில் இருபதும், துறவற இயலில் பதின்மூன்றும், ஊழில் ஒன்றும் உள என்றும், கடைச்சங்கப் புலவருள் ஒருவராகிய மலாடனார் கூறினர்.

பொருட்பாலில் அரசியல், அமைச்சியல், அரணியல், பொருளியல், படையியல், நட்பியல், குடியியல் என எழு பிரிவுகள் உள்ளனவென்றும், அவற்றுள் அரசியலுக்கு அதிகாரம் இருபத்தைந்தும், அமைச்சியலுக்கு பத்தும், அரணியலுக்கு இரண்டும், படையியலுக்கு இரண்டும்,நட்பியலுக்கு பதினேழும், குடியியலுக்கு பதின்மூன்றும் உள்ளன என்றும் கடைச்சங்கப் புலவருள் ஒருவராகிய போக்கியார் கூறினர்.

காமத்துப்பாலில் ஆண்பாற்கூற்றியல், பெண்பாற்கூற்றியல், இருபாற்கூற்றியல் என மூன்று பிரிவுகள் உள்ளன என்றும், அவற்றுள் ஆண்



பாற்கூற்றியலுக்கு அதிகாரம் எழும், பெண்பாற்கூற்றியலுக்கு பன்னிரண்டும், இருபாற்கூற்றியலுக்கு ஆறும் உள்ளன என்றும் கடைச்சங்கப்புலவருள் ஒருவராகிய மோசிகீரனார் கூறினர்.

இக்கூற்றுக்கள் எல்லாம் திருக்குறளுக்குச் சிறப்புப்பாயிரமாகச் சங்கப்புலவர்கள் பாடிய திருவள்ளுவமாலையிற் காண்க.

இப்புலவர்கள் நாயனார் நூலரங்கேற்றிய சமயத்து உடனிருந்து கேட்டவர்களாதலின், இவர்கள் கூறிய பால் இயல் அதிகாரப் பிரிவுகளே நாயனால் வகுக்கப்பட்டன என்பது எவரும் மறுக்கொணாத முடிவு.

எனவே, இடையிற் பிறந்த வழமைப்படி பொருட்பாலில் காட்டப்பட்ட அங்கவியல் ஒழிபியல் என்ற பிரிவுகளும், காமத்துப்பாலில் காட்டப்பட்ட களவியல் கற்பியல் என்ற பிரிவுகளும் பிற்காலத்தாரால் ஏற்படுத்தப்பட்டன என்பது நன்கு சித்திக்கின்றது

இவ்வாறாய்க் கீழே குறிக்கப்பட்ட பால் இயல் அதிகாரப் பிரிவுகளே நாயனாரால் இயற்றப்பட்டன என்றறிக:—

க. **அறத்துப்பால்,—**
- பாயிரம்
- இல்லறவியல்
- துறவறவியல்
- ஊழ்.

உ. **பொருட்பால்,—**
- அரசியல்
- அமைச்சியல்
- அரணியல்
- பொருளியல்
- படையியல்
- நட்பியல்
- குடியியல்.

௩. **காமத்துப்பால்,—**
- ஆண்பாற்கூற்றியல்
- பெண்பாற்கூற்றியல்
- இருபாற்கூற்றியல்.

## திருக்குறளின் விஷயம்.

முற்கூறிய பிரிவுபாட்டின்படி அறம் பொருள் காமம் என்ற மூன்று விஷயங்களே திருக்குறளில் விரிக்கப்பட்டன என்று துணிவார் சிலர். ஆனால், பேரறிவாளிகள் அறம் பொருள் காமம் என்றவற்றோடு வீடு என்பதையும் கூட்டி மானுடர்களால் தம்தம் ஆசைக்கேற்றபடி தேடப்படும்

பொருள்களை நால்வகை எனக் கூறுவர். ஸம்ஸ்க்ருத பாஷையில் இப்பொருள்கள் **புருஷார்த்தங்கள்** என்றும், இவற்றின்பெயர் **தர்மம் அர்த்தம் காமம் மோக்ஷம்** என்றும் கூறப்படும்.

**புருஷார்த்தங்கள்** (புருஷ அர்த்தங்கள்)=புருஷர்களால் தேடப்படும் பொருள்கள்.

வேதத்தின் ஞானகாண்டமாகிய உபநிஷத்களில் **புருஷன்** என்ற பதம் சரீரத்தினுள் வாழும் ஆத்மா (சரீரி) என்று விளக்கியிருக்கின்றது.

ஆசையால் ஏவப்படும் ஆத்மாக்கள் அர்த்தங்களை (பொருள்களை)த் தேடுவார்கள் என்றும், தத்தம் அறிவுக்கு ஏற்றபடி ஒருபாலார் ஸ்த்ரீ புருஷ சேர்க்கையால் வரும் இன்பத்தை முக்யமாகத் தேடுவார்கள் என்றும், வேறொருபாலார் பொன் நிலம் மனை கல்வி ராஜாங்கம் வெற்றி கீர்த்தி முதலியவற்றை முக்யமாகத் தேடுவார்கள் என்றும், வேறுசிலர் பெண்ணாசை பொருளாசைகளால் வரும் துன்பங்களை உணர்ந்து இவற்றிற்கோர் பரிகாரம் உண்டோ என்று விசாரித்து, அப்பொருள் அறமே என்று அறிந்த பக்வத்தில் அறத்தைத் தேடுவார்கள் என்றும், வேதாகமங்களும் **ஸ்ம்ருதிகளும் புராணங்களும் இதிகாசங்களும்** கூறுகின்றன.

இவ்வாறு மானுடர்கள் தேடும் இன்பமும் பொருளும் அறமும் ஆசையைப்பற்றி நிற்கும் என்றும், மோக்ஷம் என்ற புருஷார்த்தம் ஆசை என்னும் பாசத்தை விட்டு நிற்கும் என்றும் இந்நூல்கள் உணர்த்துகின்றன.

இன்பத்திலும் பொருளிலும் உள்ள ஆசைகளை அறம் புண்யவழியிற் செலுத்தி, ஆசைவைத்துச் செய்யப்பட்ட புண்ய கர்மங்களின் ஸ்வர்க்காதி சுகபலன்கள் மாறுதலையும் அழிவையும் பெற்றிருப்பதால், அவற்றிற்கு மேலான சுகத்தைத் தேடவேண்டும் என்றும், இதற்கான வழி துறவு என்றும், ஆசையை முற்றும் துறந்தவர் மோக்ஷம் என்ற அழிவற்ற பரம சாந்தியைப் பெறுவார்கள் என்றும், முற்கூறிய நூல்கள் போதிக்கும்.

புருஷார்த்தங்களில், **தர்மம்** (அறம்), பரமேச்வரனது பேரறிவில்நின்று தோன்றி, வேதாகம வாக்யங்களாகி, அவற்றில் விதிக்கப்பட்ட கர்மங்களை அநுஷ்டித்தமையாலும், நிஷேதிக்கப்பட்ட கர்மங்களை விலக்கியமையாலும், மெல்லமெல்ல விளைந்த ஓர் அபூர்வ அதிசய ஆத்மகுணமாம். இது மேலான அறிவாயும் அன்பாயும் துலங்கும்.

**அர்த்தம்** (பொருள்) என்றது, தர்மத்தை லோகத்தில் காப்பதற்கு ஸ்ருஷ்டிக்கப்பட்ட ராஜாங்கம் முதலிய விசேஷ த்ரவ்யங்களாம்.

**காமம்** என்றது ஒன்று கூடிய ஐம்பொறி விஷய சுகங்களால் ஏவப்பட்ட மாதர் ஆடவரது மனம் வாக்குக் காயங்களாற் செய்யப்படும் கர்மங்களுக்குக் காரணமான இன்பம்.



“இவ்வுலகில் எவன் அறம் பொருள்களை விட்டுக் காமத்தையே பற்றி ஜீவிப்பானோ, அவன் அறிவின் நாசத்தை இம்மையிலே அடைவான்” என்று தர்மசாஸ்த்ரங்கள் கூறும்.

**மோக்ஷம்** என்பது அஹந்தை மமதை என்ற மல பந்தங்களில் நின்று விடுபடுதல். இதுவே ஜீவன்முக்தி, துக்க நிவிர்த்தி, இனிப்பிறவா நிலை, நிர்வாணம்.

புருஷார்த்தங்கள் நான்கானால், நாயனார் அறம் பொருள் காமம் என்னும் மூன்றனையும் விளக்கி, மோக்ஷத்தை விளக்காமல் விட்டாரோ என வினவின், அறத்துப்பாலில் வீட்டைப்பற்றியும் கூறியிருக்கின்றார் என்று விடை இறுக்க.

தமது நூன்முகத்தில் விரிக்கப்பட்ட பாயிரத்திலும் துறவற இயலிலும், கடவுளைப்பற்றியும் ஞானத்தைப்பற்றியும், ஸ்வாநுபூதிமான்களைப்பற்றியும், பேரறிவு பேரின்பங்களைப்பற்றியும், துக்கநிவிர்த்தியைப்பற்றியும், துக்கநிவிர்த்தி பெறுதற்குரிய உபாயங்களைப்பற்றியும் திருவள்ளுவர் கூறியிருப்பதால், நாலாம் புருஷார்த்தமாகிய மோக்ஷமும் திருக்குறளிற் கூறப்பட்டது என்பதற்கு ஐயமில்லை.

திருவள்ளுவர் காலத்தில் சங்கத்துப் புலவர்களாகிய மாமூலனார் நரிவெருத்தலைவனார் கீரந்தையார் இழிகட்பெருங்கண்ணார் என்பவர்களும் திருக்குறளில் தர்மார்த்த காம மோக்ஷங்களாகிய புருஷார்த்தங்கள் நான்கும் போதிக்கப்பட்டன என்று கூறியிருப்பதும் காண்க.

ஆகவே, திருக்குறளுக்கு விஷயம் புருஷார்த்தங்கள் நான்குமேயாம்.

## புருஷார்த்தங்களை விளக்கும் மூல நூல்கள்.

ஸ்வாநுபவத்தால் மாத்ரம் அறியப்பட்ட நிர்க்குணவஸ்துவைக் கர்மாநுஷ்டானங்களாலும் ஞானோபதேச அநுசரணைகளாலும் வழிபட்டு ஸமீபிக்கும் முறையை விளக்கும் கருவி **வேதம்** எனப்படும்.

வேதம் வேத்யப் பொருளாகிய நிர்க்குண வஸ்துவை எவ்வுபாயங்களால் அறியலாம் என்று கூறும்.

**வேதம்**=நிர்க்குண வஸ்துவை அறிவிக்கும் நூல்.

**வேத்யம்**=வேதத்துக்கு விஷயமான நிர்க்குண வஸ்து.

கர்ம ஞான பாதைகளை விரிக்கும் வேதம் அநாதி நித்யமாகப் பரமேச்வரனில்நின்று ப்ரஹ்மா மூலமாக வெளிவந்தது.

ஒன்றாயிருந்த வேதம் த்வாபர யுகத்தில் ருக் யஜுர் ஸாமம் அதர்வணம் என்று வ்யாஸ பகவானால் பிரிக்கப்பட்டுச் சதுர் வேதங்களாயின. இவற்றுள் ருக் யஜுர் ஸாமங்கள் ப்ரஹ்ம ஞானத்திற்கு உரியன. கர்ம

காண்டத்தில் ஸ்வர்க்காதி கர்மங்களை மிகப் பாராட்டி, இவற்றைப் பெறுதற்கு வழிகளையும் கூறி, பின்னர் ஞானகாண்டத்தில் அவ்வின்பங்கள் எல்லாம் தோன்றி அழிவதால் துன்பங்களே என்று உபதேசித்து, இவைகட்கு அப்பாற்பட்டது அழிவற்ற மோக்ஷம் என்று விளக்கி, இந்த முக்தி நிலையிலேயே ஜீவாத்மா பரமாத்மாவாகும் என்று முடிக்கும்.

வேதம் **சுருதி** எனவும் கூறப்படும்.

சுருதியாவது சுரோத்ரத்தால் (காதால்) கேட்டு அறியப்படும் கர்ம ஞான காண்டங்கள். ஆதியில் சப்தரூபமாக ப்ரஹ்மாவின் காதில் விழுந்து அவரது திருவாக்கால் அவரது மானஸ புத்ரர்களாகிய ப்ரஜாதிபதிகளுக்குப் போதிக்கப்பட்டது. அன்று தொட்டு லோகம் அழியும் வரையில் கர்ணோபதேச வஸ்துவாயிருக்கும்.

எவ்விதம் தமிழ்த் தேவாரங்களுக்குப் பண் என்ற இசை அமைத்திருப்பதால் ஓதுவான் மூலமாக மாணவன் தேவாரங்களைக் கேட்டு ஸ்வாமியைத் துதிப்பானோ, அவ்விதம் வேதத்துக்கும் சந்தஸ் என்னும் அக்ஷர மாத்ரை நியமங்கள் அமைந்திருப்பதால், அத்யயந பட்டர் வாய்மூலமாகக் கேட்டுப் பாராயணம் பண்ண வேண்டும். ஞானகாண்டப் பொருள்களையும் ஞானகுருவாயிலாகவே கேட்டறியவேண்டும். ஆதலால் வேதம் **சுருதி** எனப்பட்டது.

வேதத்தில் விஸ்தாரமாகக் கூறப்பட்ட உண்மைகளைக் குறிப்பாகவும் தெளிவாகவும் ஆகம சாஸ்த்ரங்கள் கூறும்.

**ஆகமம்**=வேத வழி. இது பதி பசு பாசம் என்ற த்ரிபதார்த்தங்களை (முப்பொருள்களை), வேத லக்ஷ்யார்த்தப்படி, விளக்கும்.

சிவாகமங்கள், வேதங்களைப்பற்றியே நின்று, கர்ம ஞான காண்டங்களால் ஜீவாத்மா எவ்வாறு சுத்தப்பட்டுத் தனது பதியோடு ஐக்யப்படும் என்று போதிக்கும்.

தாயுமானஸ்வாமி, ஆரணம் என்ற பதிகத்தில், ஆகமத்தை வேதம் என்ற மார்க்கத்தில் அற்புதமாய் நடந்து அந்தத்தை அணுகும் வாசி (குதிரை) என்று விசேஷித்தார்.

நெடும் ப்ரயாணத்தை உத்தேசித்தவன் கால் நடையாய்ச் சென்றால் ச்ரமப்பட்டும் தாமஸமாகவும் அந்தத்தைச் சேருவான். ஆனால், அப்பாதையிலேயே குதிரைமேல் ஏறிச் சென்றால், சுகமாகவும் சீக்ரமாகவும் ப்ரயாணத்தை முடிப்பான். அதுபோல, ஆகம விளக்கத்தைக் கொண்டு வேதத்தின் லக்ஷ்யார்த்தப் பொருளாகிய பரசிவத்தை (நிர்க்குண வஸ்துவை) லகுவாக அறியலாம் என்பது பற்றி, அவர் ஆகமத்தை வேதவழியில் ஓடும் அச்வம் என்றார்.



சுருதியைக் கற்றறிந்த மஹான்களின் மனவிற் படிந்த வேதார்த்தங்கள் ஸ்மரணங்கள் அல்லது **ஸ்ம்ருதிகள்** எனப்படும்.

பேரறிவாளிகளது ஸ்ம்ருதிகள் **தர்ம சாஸ்த்ரங்கள்** எனப்படும்.

**தர்மசாஸ்த்ரம்**=தர்மத்தைப்பற்றிய சாஸநங்கள்; வேதார்த்தத்தை முற்றும் அறிந்த ருஷிகளின் கட்டளைகள்.

இவர்கள் **தர்ம சாஸ்த்ர கர்த்தாக்கள்** எனப்படுவோர்கள். மநு, வஸிஷ்டர், காச்யபர், கர்க்கர், கௌதமர், உமநர், அத்ரி, விஷ்ணு, சம்வர்த்தர், தக்ஷர், அங்கிரஸ், ஸதாதபர், ஹாரீதர், யாஜ்ஞவல்க்யர், ஆபஸ்தம்பர், காத்யாயநர், ப்ராசேதஸர், பராசரர் என்பவர்கள் அத்**தர்ம சாஸ்த்ர கர்த்தாக்களாம்.**

இவர்களின் ஸ்மிருதிகள் விதிவிலக்கு ரூபமாய் இருக்கும். இவற்றில், சில ஒரு யுகத்துக்கும், சில வேறொரு யுகத்துக்கும், உபயோகமாய் இருக்கும்.

வேதாகம ஸ்மிருதிகளோடு ஸ்கந்தமுதலிய **புராணங்களும் இதிகாசங்கள்** என்ற **ராமாயணமும் மஹாபாரதமும்** புருஷார்த்தங்களைக் கூறும்.

**இதிகாசம்** என்ற தொடர்மொழியுள் இவ்விதம் ("இதி") சொல்லுகிறார்கள் ("காச") என்று பொருள்படும். பூர்வகாலத்தில் கண்டறிந்த ஸாதுக்களால் சொல்லப்பட்டுத் தலை தலை முறையாக வந்த கதைகளே இதிகாசங்கள்.

மஹாபாரதத்தில் உள்ள சாந்திபர்வத்தில் 58, 122 வது அத்யாயங்களில் பீஷ்மாசாரியார் யுதிஷ்டிர மகாராஜனுக்குப் **புருஷார்த்த சாஸ்த்ரங்களின் சரித்ரத்தை** விஸ்தாரமாகக் கூறியிருக்கின்றார். ஆதியில் ப்ரஹ்மாவானவர் ஒருலக்ஷம் அத்யாயங்களுள்ள சாஸ்த்ரத்தில் **த்ரிவர்க்கம்** என்னும் முப்பாலாகிய அறம் பொருள் இன்பங்களை விளக்கினார் என்றும், அதன்பிறகு சிவாம்ச புருஷராகிய விசாலாக்ஷர் **வைசாலாக்ஷ்யம்** என்ற த்ரிவர்க்க நூலைச் செய்தார் என்றும், அஃது அழிந்தபின் அந்நூலைச் சுருக்கி இந்திரன் **பாகுதந்தம்** என்ற சாஸ்த்ரத்தைக் கூறினார். என்றும், அதன் பின்னர் ப்ரகஸ்பதி அதனினும் சுருக்கமாகப் **பார்ஹஸ்பத்யம்** என்ற நூலைச் செய்தார் என்றும், அதன்பின்னர்ச் சுக்ர பகவான் ஆயிரம் அத்யாயங்களாகத் த்ரிவர்க்க நூலைக் கூறினார் என்றும், இவை மஹாபாரத யுத்தகாலத்திற்கு முன்னர் காணாமற் போயின என்றும், அவற்றின் ஸாரங்களைத் த்ரிமூர்த்திகளின் அனுக்ரஹத்தால் தாம் அறிந்தார் என்றும், அவ்வண்ணமே தாம் யுதிஷ்டிரருக்கு உபதேசித்தார் என்றும் கூறியிருக்கிறார். இவர் காலஞ்சென்று மூவாயிரம் வருஷத்துக்குப்பின் சாணக்யர் **சாணக்யம்** (BC. 320) என்றஅர்த்த சாஸ்த்ரத்தையும், அவர் சிஷ்யனாகிய காமந்தகன் **காமந்தகம்** என்ற நீதிசாஸ்த்ரத்தையும்,

செய்தார். ஈதெல்லாம் வடமொழியிலுள்ள முந்தைப் **புருஷார்த்த நூல்களின் சரித்ரம்.**

நமது தென்மொழியில் இடைச்சங்கத்து நூலாகிய தொல்காப்பியத்திலும், கடைச் சங்கத்து நூல்களாகிய நற்றிணை முதலாய எட்டுத்தொகைகளிலும், நாலடியார் முதலாய பதினெண் கீழ்க்கணக்குகளிலும், அறம், பொருள், இன்பம் என்ற முப்பால்கள் விளக்கப்பட்டிருக்கின்றன.

வேதாகமங்களையும் ஸ்மிருதிகளையும் புராணங்களையும் இதிகாசங்களையும் தமிழ்நாட்டுப் பண்டைப் பனுவல்களையும் (நூல்களையும்) திருவள்ளுவ நாயனர் கற்றறிந்து, அவற்றில் அறப் பகுதியுள் பொருட் பகுதியும் இன்பப் பகுதியும், பொருட்பகுதியியுள் அறப்பகுதியும் இன்பப் பகுதியும், இன்பப் பகுதியுள் அறப் பகுதியும் பொருட்பகுதியும், விரவி வருவதால், அறம் இவ்வளவுதான், பொருள் இவ்வளவு தான், இன்பம் இவ்வளவுதான் என்று காணுதல் மாணவர்கட்கு இயலாது என்பது பற்றி, உள்ளங்கை நெல்லிக்கனிபோல், அறம் பொருள் இன்பம் என்ற முப்பால் ஒவ்வொன்றுக்கும் இன்றியமையாத இயல் அதிகாரங்களை முறையாகக் கோத்துத் திருக்குறள் என்ற நூலை இயற்றி அருளினர்.

## தர்ம விபாகங்கள்.

(அறத்தின் பிரிவுபாடுகள்.)

தர்மசாஸ்த்ரிகள் தர்மத்தை ஸாமான்யம் (பொது) என்றும், விசேஷம் (சிறப்பு) என்றும், பிரித்துக் கூறுவார்கள்.

**ஸாமான்ய தர்மங்கள்** ப்ராஹ்மணர், க்ஷத்ரியர், வைசியர், சூத்ரர் எனக் கூறப்பட்ட சதுர்வர்ணிகள் யாவர்க்கும் பொதுவான தர்மங்கள்.

ஸாமான்ய தர்மங்கள் வஞ்சனை, லோபமில்லாமை, பொறுமை, தேஹசுத்தி, சித்தசுத்தி, தயாளம், கொடை, ஐம்பொறியடக்கம், தீர்த்தயாத்திரை, தேவவழிபாடு முதலிய கர்மங்களாம்.

**விசேஷ தர்மங்கள்** ப்ராஹ்மணனுக்கும், க்ஷத்ரியனுக்கும், வைசியனுக்கும், சூத்ரனுக்கும் உரிய வெவ்வேறு கர்மங்களாம். இவை பின்னர்க் கூறப்படும்.

ஒவ்வொரு வர்ணத்தானுக்குரிய கர்மங்கள் அந்தந்த வர்ணத்தானுக்குச் சொந்தமாயிருப்பதால் **ஸ்வதர்மம்** எனப்படும்.

ஓர் வர்ணத்தானுக்குரிய கர்மம் வேறோர் வர்ணத்தானுக்கு அன்யமாயிருப்பதால் இவனுக்கு அது **பரதர்மம்** ஆகும்.

**ஸ்வதர்மம்**=ஒருவனது ஜன்யகுணத்துக்கு அநுகூலமாக விதிக்கப்



பட்ட கர்மம். **ஜன்யகுணம்** ஆவது மாதாவின் கர்ப்பத்தில் ஒருவனுக்கு பரமேச்வரனல் அமைக்கப்பட்ட புத்திநிலை

**பரதர்மம்**=ஒருவனுடைய ஜன்யகுணத்துக்கு மாருக அனுஷ்டிக்கப்பட்ட கர்மம்.

ஸ்வதர்மம் ஒருவனை உத்தாரணஞ் செய்யும் (இருந்த நிலையில்நின்று மேலான நிலையில் செலுத்தும்) என்றும், பரதர்மம் அவனைக் கீழே தள்ளும் என்றும், தர்ம சாஸ்த்ரங்கள் உறுதியாகக் கூறுகின்றபடியால், **சதுர் வர்ணங்களின் ஸூக்ஷ்ம கதிகள்** செவ்வையாக ஆராயத்தக்கன.

## சதுர் வர்ணங்களின் ஸூக்ஷ்ம கதி.

**வர்ணம்** என்ற பதம் "வரன்" (போற்றுதல், புகழ்தல்) என்ற ஸம்ஸ்க்ருத தாதுவில்நின்று ஜனித்துப், போற்றத்தக்கது, மதிக்கத்தக்கது என்று பொருள்படும். இது ஜன்ய குணத்தையும் அக்குணங்களுக்கேற்ற கர்மங்களையும் குறிக்கும்.

எனவே, **சதுர்வர்ணம்** என்ற தொடர்மொழிகள் லோகத்தாரால் மதிக்கத்தக்க நான்குவித மனோதர்மங்களும் (புத்தி தாரணைகளும்), இவற்றிற்கேற்ற நான்குவித நற்கர்மங்களும், என்று பொருள்படும்.

ஆங்க்லேய பாஷையில் **சதுர்வர்ணிகள்** என்ற பதங்கள் "four kinds of good and true men" என்று அர்த்தமாகும்.

தர்மாதர்ம விவேகமுள்ள ஜீவர்களைப்பற்றியே சதுர்வர்ணம் இருக்கும். இது தர்மம் இது அதர்மம் என்ற அறிவு இல்லாதவர்களும், தர்மாதர்ம அறிவு இருந்தும் நன்முயற்சியைப் பற்றாமல் வீண்ஆசைகளால் ஏவப்பட்டு ஐம்பொறிவழிகளில் ம்ருகங்களைப்போல நாடோடுகின்ற மூர்க்கர்களும் சதுர்வர்ணம் என்ற சோபானத்தில் (படிகளில்) ஏற்றப்படமாட்டார்கள். இவர்களைப் பகவான் துன்பம் என்ற அக்நியால் வாட்டிப் பக்வப்படுத்தித்தான் இவர்களின் புத்தியில் தர்மசிந்தனைகளைத் தரிக்கச் செய்வார்.

மாதாவின் கர்ப்பத்திலேயே ஜீவாத்மாவின் பக்வத்திற்குத் தக்கபடி **சூத்ரகுணம்** என்றும், **வைசியகுணம்** என்றும், **க்ஷத்ரியகுணம்** என்றும், **ப்ராஹ்மணகுணம்** என்றும் கூறப்பட்ட **நியம குணங்கள்** அருளப்படும். இவை **ஜன்யகுணம்** அல்லது **ஸ்வகுணம்** எனப்படும்.

இவ்விதம் அருளப்பட்ட நியம குண விபாகங்களுக்குரிய கர்மங்களும் விதிக்கப்பட்டதால், ஒவ்வொரு வர்ணியும் அவனுக்குரிய கர்மத்தையே அநுஸரிக்க வேண்டும். இக்கர்மம் **ஸ்வகர்மம்** எனப்படும்.

**ஸ்வகர்மம் ஸ்வகுணத்தை மேற்படியில் ஏற்றும்.**

சூத்ர குணமுள்ளவன் ஸ்வதர்ம அநுசரணையினால் வைசிய குணத்தைப் பெறுவான். வைசிய குணசாலி தனது ஸ்வதர்மத்தை அனுஷ்டித்துவந்தால், க்ஷத்ரிய குணத்தைப் பெறுவான். க்ஷத்ரிய குணசாலி தனது ஸ்வதர்மத்தை அனுஷ்டித்து வந்தால், ப்ராஹ்மண குணத்தைப் பெறுவான். ப்ராஹ்மண குணசாலி தனது ஸ்வதர்மத்தை அநுசரித்துவந்தால், ப்ரஹ்மம் என்ற நிர்க்குண வஸ்துவோடு ஐக்யமாவான்.

இவ்வாறு ஒருவகைக் குணவான் தனக்கு மாறான கர்மங்களை அனுஷ்டித்தால், பகவான் விதித்த சோபான வாழ்வை இழந்து கீழ்கீழாகச் சென்று கெடுவான்.

இனி, **சதுர்வித குணங்களும்** இவற்றிற்குரிய **சதுர்வித கர்மங்களும்** விரிக்கப்படும்.

**சூத்ர குணவான்** என்பவனுக்குப் பிரித்துப் பார்க்கிற சக்தியும் ஆரம்ப சக்தியும் கூட்டி முடிக்கிற சக்தியும் மிகக் குறைவாக இருக்கும்.

தனது குறைவுபாடுகளை உணர்ந்து துக்கப்பட்டுத் தாழ்மையுடன் அவற்றையெல்லாம் ஸமாதானமாக ஒப்புக்கொண்டு, எவ்விதம் இந்த மூடநிலையில் நின்று நான் தப்பலாமென்று யோசிப்பான். அதர்மிகளோடும் மூர்க்கர்களோடும் கூடாமல், ஒரு நல்ல ஸ்திதியில் உள்ள புண்யவானை எஜமானாகக் கொண்டு, அவர் பணிவிடைகளைச் செய்து, அவர் வழிபடுந் தெய்வத்தையும் அவருடைய அன்பையும் நல்லொழுக்கங்களையும் பெற வேண்டுமென்று உறுதியான புத்தியுடன் வாழ்வான். அங்கிங்கு ஓடாமல், தன் எஜமானனை எதிர்பார்த்தே ஓரிடத்தில் அடங்கிநிற்பான். இப்படித் தன் மூடநிலையைப்பற்றித் துக்கித்தும், தனது எஜமான் ஏவலிலும் நல்லொழுக்கத்திலும் ப்ரதிஷ்டைபெற்று ஸந்தோஷித்தும், தெய்வத்தைத் தொழுதும் இருக்கும் புருஷன் புகழுக்குரிய **சூத்ரன்** எனப்படுவான்.

**சூத்ரன்** என்ற பதம் ''சுச்'' (துக்கித்தல்) என்ற தாதுவில் நின்று ஜனித்துத் துக்க சொரூபி என்று பொருள்படும். இவனுக்குப் பிரித்தறியும் சக்தியும் ஆரம்பிக்கும் சக்தியும் கூட்டி முடிக்கும் சக்தியும் மிகக் குன்றியிருப்பதால் இவனுக்குரிய ஜீவனோபாயத்தொழில் பரிசாரகம் 'மேலோர் சொன்ன எடு பிடி ஏவல் வேலைகளைச் செய்தல்'. ஆத்மோபாயத் தொழில்கள் தானம் ஜபம் ஸ்தோத்ரம்.

இவனுக்கும் மேற்பட்ட புத்தியுடையவன் **வைசியன்**. தன்னுடைய நன்மையைக் கருதியே ஜீவிப்பான். கடை வைத்துப் பண்டம் மாற்றிப் பணம் சம்பாதிப்பதில் மிகப் ப்ரீதியும் முயற்சியும் உள்ளவன். தேவதைகளையும், நல்ல மானுடர்களையும் வழிபட்டு, தனம் தான்யம் முதலியவற்றைத் தர்மமுறையாகச் சம்பாதித்து வாழவேண்டும் என்று இரு



ப்பான். இந்தப் புத்திகளுக்கு ஸஹாயமான ஜீவனார்த்த கர்மங்கள் பசுக்களை வளர்த்து வ்ருத்தி செய்தல், க்ருஷித் தொழில் நடத்தல், தான்யம் முதலிய பொருட்களை வாங்கியும் விற்றும் வருதல். இவனுக்குரிய ஆத்மார்த்த கர்மங்கள் வேதம் ஓதுதலும் யாகம் செய்தலும் தானம் கொடுத்தலுமாம்.

இவன் வர்த்தக சித்திக்காக எங்கும் திரிந்து வசிப்பவனாதலால் **வைசியன்** எனப்பட்டான்.

பண்டங்களைக் கைமாறி மண் பொன் பெண் என்றவற்றைத் தர்மவழியில் நின்று ஸம்பாதித்துச் சுகத்தை அடைய வேண்டும் என்ற வைசியனுக்கும் உயர்ந்த புத்திமான் **க்ஷத்ரியன்**. இவன் ஜனபரிபாலனத்தையும் துஷ்ட நிக்ரஹத்தையும் கருதுவான். ஆபத்தில் கலங்கான், சத்ருவுக்கு அஞ்சான், ஸமயத்துக்கு ஏற்ற ஸாமர்த்யத்தைக் காட்டுவான். க்ராம தேச அதிகாரத்தை விரும்புவான். இந்த ஜந்ய குணங்களுக்கு அனுகூலமான கர்மங்கள் க்ராம தேச அதிகாரம், துஷ்டர்களைக் கண்டித்தல், சிஷ்டர்களைப் பரிபாலித்தல், வேதமோதுதல், யாகம் தானஞ் செய்தலாம்.

இந்த க்ஷத்திரிய வர்ணிக்கும் மேலானவன் **ப்ராஹ்மணன்**. இவனுக்குரிய குணம் விஷயசுக வெறுப்பு, ஆத்ம அனாத்ம விவேகம், சித்த சுத்தி, ஸமத்வபுத்தி, நேர்மை, பொறுமை, ஈச்வரநிச்சயம் முதலியனவாம்.

ப்ராஹ்மண குணத்தை வ்ருத்தி செய்யும் தொழில்கள் வேதமோதலும், பிறர்க்கு வேதமோதுவித்தலும், யாகஞ் செய்தலும் செய்வித்தலும் தானம் வாங்கலும் தானங் கொடுத்தலுமாம்.

ஜன்ய குணங்களும் அவைகளுக்கு அனுகூலமான கர்மங்களும் சேர்த்து ஸ்ருஷ்டிக்கப்பட்ட சதுர் வர்ணங்களைத் திருவள்ளுவநாயனார் தமது திருக்குறளில் எடுத்துக் காட்டவில்லை. ப்ராஹ்மணர்களுக்கும் க்ஷத்ரியர்களுக்கும் வைசியர்களுக்கும் சூத்ரர்களுக்கும் பொதுவான (ஸாமான்ய) தர்மத்தை அறத்துப்பாலிற் கூறி, பொருட்பாலில் சதுர் வர்ணிகட்கும் ஏனையோர்க்கும் தலையாய அரசன் என்று அழைக்கப்பட்ட ப்ரதம க்ஷத்ரியனுடைய ராஜ லக்ஷணங்களைக் கூறி யொழிந்தனர்.

எக்காரணத்தால் நாயனார் சதுர் வர்ணங்களைப் பற்றிக் கூறவில்லையெனின், பூர்வகாலந்தொட்டு சதுர் வர்ணத்தைப் பற்றி ஸ்வாநுபவிகளும் விசால புத்திமான்களும் தவிர்ந்த கற்றோரும் மற்றோரும் விபரீதமாக அறிவதால் என்க. மஹான்கள் சதுர் வர்ணம் புத்திதாரணை நிலைகளைக் குறிக்கின்றன என்று எவ்வளவு உபதேசித்தாலும், மூடலோகத்தார் அவற்றின் சூக்ஷ்ம கதியை க்ரஹிக்க வல்லமையற்று, ஸ்தூல தேகத்தைப்

பற்றியே நிற்கின்றன என்று மயங்குவார்கள். ப்ராஹ்மண புத்தியுள்ளவனையும், க்ஷத்ரிய புத்தியுள்ளவனையும், வைசிய புத்தியுள்ளவனையும், சூத்ர புத்தியுள்ளவனையும் எவ்விதம் சாதாரண மனிதர் நிதானிப்பார்கள்? ஒருவனுடைய ஸ்தூல தேகத்தைப் பார்த்து, அவனுடைய ஸ்வதர்மம் எது, பரதர்மம் எது, என்று எவ்விதம் பிரித்தறிவார்கள்? அவனுக்கே எட்டாதது இவர்களுக்கு எப்படி எட்டும்.? ஆகவே, சிற்றறிவாளிகள் சதுர்வர்ணத்தின் சூக்ஷ்ம கதியை அறியார். ஸ்தூல தேகத்தைப் பற்றி நான்கு வர்ணங்களும் உள்ளன என்று எண்ணி இருப்பது வலு மூடமாதலால், நாயனார் இவர்கள் ஒப்புக்கொண்ட ஸ்தூல ஜாதி பேதங்களைத் தமது நூலில் விரித்திலர்.

ஜனனம் என்ற ஸ்தூல தேகத்தின் பிறப்பைப்பெற்ற ஜீவர்களில் சிலர் நல்ல குணத்தோடும், பலர் கெட்ட குணத்தோடும் இருக்கக்கண்டதால், பேரறிவாளிகள் ஜாதி இரண்டே என்பார்கள். இதற்கு மேற்கோள் ஔவையார் நல்வழி, வெண்பா:—

“ஜாதி யிரண்டொழிய வேறில்லை, சாற்றுங்கால்,
நீதி வழுவா நெறிமுறையின்—மேதினியில்
இட்டார் பெரியோா, இடாதோர் இழிகுலத்தோர்,
பட்டாங்கி லுள்ள படி.”

இதன் அர்த்தம்: சாற்றுங்கால்=நிறையக் கூறுமிடத்து.

பட்டாங்கில் உள்ளபடி=பரமேச்வரனது பூர்வ சாஸனப்படி.

ஜாதி=குண ப்ராபல்யத்தால் வரும் ஜனனம், பிறவி.

இரண்டு ஒழிய வேறு இல்லை=இரண்டே இரண்டு என்றறிக.

மேதினியில்=பூலோகத்தில். நீதி வழுவா நெறி முறையில்=விதி விலக்குகள் தவறாத மார்க்கத்தில்நின்று.

இட்டார் பெரியோர்=அன்போடு தானங்களைச் செய்கின்றவர்கள் உத்தம பிறவிகள்.

இடாதோர் இழி குலத்தோர்=அன்போடு தானஞ் செய்யாதவர்கள் அதம பிறவிகள் (ஜாதியார்) என்றறிக.

தர்ம வழியில் நின்று த்ரவியத்தைத் தேடித் தர்ம விதிப்படி, தெய்வம் பிதிர்கள் அதிதிகள் உறவினர் தாம் என்னும் ஐவகையாரை உபசரித்து வருகின்றவர்கள் **உயர்ந்தசாதியார்**, ஏனையோர் **தாழ்ந்தசாதியார்** என்பது ஸத்யம்.

உயர்தர ஜாதியாராகிய நற்குணசாலிகள் சதுர்வர்ணத்தார் எனப் பிரிக்கப்படுவர்.

இதுவரையில் தர்மம் சதுர் வர்ணங்கள் என்ற குண பிரிவுபாடுகளாக



விளங்கும் என்றும், இந்த வர்ண பேதங்களைஅண்டி தர்மம் ஸாமான்யம் விசேஷம் எனவும், ஸ்வதர்மம் பரதர்மம் எனவும், விளங்கும் என்றும் கூறப்பட்டது.

இனி, தர்மத்துக்குச் சதுர் **ஆச்ரமங்கள்** உண்டென்பதையும் அறிய வேண்டியது.

## தர்மாச்ரமங்கள்.

ஆச்ரமங்கள்=இருப்பிடங்கள், ஆதரிக்கும் எல்லைகள். **தர்மாச்ரமங்கள்**=தர்மத்தை வ்ருத்தி செய்யத்தக்க இடங்கள், பீடங்கள்.

இவை ப்ரஹ்மசர்யம், கார்ஹஸ்த்யம், வானப்ரஸ்தம், ஸந்ந்யாஸம் என நான்குவகைப்படும்.

**ப்ரஹ்ம சர்யம்**=தக்க குருவினது ஆச்ரமத்துக்குச் சென்று, அவரோடு வசித்து, அவர் பணிகளைச் செய்து, அவர் ஸமுகத்தில் கடவுளை அடையும்பொருட்டுப் பாடங்கேட்டும் நற்கர்மங்களை அநுஷ்டித்தும்வருதல். இது குருகுலவாச வாழ்க்கை.

**கார்ஹஸ்த்யம்**=க்ருஹத்தில் (இல்லத்தில்) மனைவியோடு வாழ்ந்து இல்லறங்களை அன்போடு நடத்தி வருதல். இது இல்வாழ்க்கை.

**வானப்ரஸ்தம்**=வனத்திற் சென்று, கிழங்கு காய் காட்டரிசி பழம் முதலியவற்றைப் புசித்து, குளிர் கானல் முதலிய த்வந்த்வங்களைப் பொறுத்துக் கொண்டு, யாகம் தபஸ் முதலிய கர்மங்களைச் செய்தல். இது காட்டுறை வாழ்க்கை.

**ஸந்ந்யாஸம்**=மண், பொன், பெண் என்ற புறப்பொருள்களையும், தனது கர்மேந்த்ரிய ஞானேந்த்ரிய அகப்பொருள்களையும், பரமேச்வரனுக்கு ஒப்புக்கொடுத்து, ஸந்நியஸித்துப், பற்றற ஜீவித்தல். இது அஹந்தை மமதை நீத்த வாழ்வு, துறவு.

திருவள்ளுவ நாயனார் தமது நூலில் ஒவ்வொரு சதுர்வர்ணத்துக்குரிய விசேஷதர்மங்களைக் கூறாது, இவர்கள் யாவர்க்கும் பொதுவான ஸாமான்ய தர்மத்தை மாத்ரம் அறத்துப்பாலில் விரித்தார். இதற்கு நியாயம் ௧௧, ௨௰-ம் பக்கங்களில் காட்டப்பட்டது.

சதுர் ஆச்ரமங்களில், கார்ஹஸ்த்யமாகிய இல்லறத்தையும் ஸந்யாஸமாகிய துறவறத்தையும் அறத்துப்பாலில் விரித்து, ப்ரஹ்மசர்யமாகிய குருகுலவாச வாழ்க்கையையும் வானப்ரஸ்தமாகிய காட்டுறை வாழ்க்கையையும் கூறாது விட்டார். ஏனெனில், இவற்றின் பயன் இல்லத்திலும் தமிழ் நாடுகள்தோறும் பரந்துள்ள மடங்களிலும் ஆதீனங்களிலும் பெறத் தக்கதால், என்றறிக.

# திருக்குறள்.

## கம். அதிகாரம்,
## கடவுள் வாழ்த்து.

**கடவுள்** என்ற பதத்திற்குக் கடந்து உள்ள பொருள் என்று மெய்யறிவாளிகள் அர்த்தம் செய்வார்கள்.

கடந்து=ப்ரக்ருதி வஸ்துக்களிலிருந்தும் அவற்றால் தீண்டப்படாமலும்.

உள்ள=ஒரு பொழுதும் மாறாமலும் எக்காலமும் அழிவற்றும் இருக்கின்ற.

கடந்துள்ள பொருள்=அதீத அவ்யய வஸ்து; ப்ரக்ருதிக்குள்ளும் அதற்கப்பாலும் தன்னந்தனியாக நிற்கும் மெய்ப்பொருள்.

ஐம்பொறிகளாலும் மனஸாலும் அறியத்தக்க ப்ரக்ருதி சொரூபங்கள்தோறும் கைவல்யமாக இருந்து, அவற்றிற்குரிய அணுக்கள் ஒவ்வொன்றையும் அடக்கி ஆளும் கடவுள் **அந்தர்யாமி ஈஸ்வரன்** எனப்படும்.

**அந்தர்யாமி**=உள் ("அந்தஃ") இருந்து அடக்கின்றவர் ("யாமி").

**ஈஸ்வரன்**=ஆள்கின்றவர்.

அந்தர்யாமி ஈஸ்வரன் **மஹேஸ்வரன்** (மஹா ஈஸ்வரன்) எனப்படுவர். ஏனெனில், த்ரிமூர்த்திகளாகிய ருத்ரன் விஷ்ணு ப்ரஹ்மா முதலிய ஈஸ்வரர்கள் மஹேஸ்வரனில் நின்று தோன்றினராதலால்.

இந்த அந்தர்யாமி ஈஸ்வரனாகிய மஹேஸ்வரனைப், பின்வரும் குறள் ஒன்றில் (அதி. க, கூ இல்) நாயனார் "எண்குணத்தான்" என்றார்.

அகண்டாகார அருட்சக்தியோடு நிறைந்திருக்கும் கடவுளைத் தாயுமானஸ்வாமி திருவருள்விலாசப் பரசிவ வணக்கத்தில்,—

"அங்கு இங்கு எனாதபடி, எங்கும் ப்ரகாஸமாய் ஆனந்த பூர்த்தியாகி அருளொடு நிறைந்தது எது?



"தன் அருள்வெளிக்குளே அகிலாண்டகோடி எல்லாம் தங்கும்படிக்கு இச்சைவைத்து உயிர்க்குயிராய்த் தழைத்தது எது?

"மனம் வாக்கினில் தட்டாமல் நின்றது எது?

"சமயகோடிகள் எலாம் தந்தெய்வம் எந்தெய்வம் என்று எங்குந்தொடர்ந்து எதிர்வழக்கிடவும் நின்றது எது?

"எங்கணும் பெருவழக்காய் யாதினும் வல்ல ஒரு சித்தாகி இன்பமாய் என்றைக்கும் உள்ளது எது?

"மேல், கங்குல் பகல் அறநின்ற எல்லையுளது எது?

"அது கருத்தற்கு இசைந்தது.

"அதுவே கண்டன எலாம் மோன உரு வெளியதாகவும் கருதி அஞ்சலிசெய்குவாம்", என்று வாழ்த்தினார்.

திருவருள்விலாசப் பரசிவவாழ்த்துதலைத் திருவள்ளுவ நாயனார் "**கடவுள் வாழ்த்து**" என்றார்.

**வாழ்த்து**=வாழும்படி வேண்டுதல்.

வாழ்தல்=சுகமாயிருத்தல்.

ஆனால், **கடவுள்வாழ்த்து** என்றபதங்கள் கடவுள் சுகமாக இருக்க எனப் பொருள்படா. அவர் ஸதாகாலமும் சுகசொரூபியாய் இருத்தலால், அவருக்கு சுகம் அமைக என்பது பொருந்தாது.

எனவே, எந்த உபாயத்தாற் கடவுள் ஒருவனது அறிவின்கண் ப்ரஸன்னமாவாரோ, அதுவே கடவுள்வாழ்த்தெனக் கொள்க.

இதுபற்றி, மாணிக்கவாசக ஸ்வாமி, திருவாசகத்தில் சிவபுராண ஆரம்பத்தில்,—

"நமச்சிவாய வாழ்க. நாதன் தாள் வாழ்க. இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க" என்றும், கோயிற்றிருப்பதிகத்தில் "என்னுள் எழுபரஞ் சோதி" என்றும், போற்றினார்.

கடவுளை ஶிஷ்யனது ஹ்ருதயத்தில் வாழச்செய்தலுக்கு வேண்டிய உபாயங்கள் இந்த அதிகாரத்திலுள்ள பத்துக் குறள்களாலும் உபதேசிக்கப்பட்டன. இவற்றைப் பின்வருமாறு காண்க:—

முதற்குறளில், பரமேஸ்வரன் எவ்விதம் மெய்யறிவிற்கு ஆதாரமாகிய அக்ஷரங்களிலும், கர்மானுஷ்டானங்களுக்கும் சுகதுக்கபோகங்களுக்கும் ஆதாரமாகிய ஜகத்திலும், ப்ரவேசித்து நிற்கின்றார் என்று கூறியிருப்பதால், கடவுளை அறிதற்குப் பதி பசு பாச லக்ஷணங்கற்றல் அவசியமான உபாயம் என்று குறிக்கப்பட்டது.

இரண்டாவதில், அக்ஷரரூபமாகிய கல்வியாற் பெறத்தக்க முக்யப்ரயோஜனம் பரமேஸ்வரனது திருவருளை அன்போடு தொழுதல் என்று விளக்கினமையால், கடவுளை ஸந்த்யா வந்தனாதிக் க்ரியைகளால் தொழுதலும் அவசியம் என்று குறித்தார்.

மூன்றாவதில், அந்த அருட்சக்தியின் க்ருபையால் ஸகஸ்ரதளத்திற் சென்று, ஶிவசொரூபியானவரது ஞானோபதேசத்தைப்பெற்று, ஶ்ரத்தையோடு அனுஷ்டிக்கின்ற ஞானாதிகாரி நித்ய சுகத்தை அடைவான் என்றமையால், யோக ஸாதனையும் கடவுளை அறிதற்கு உபாயம் என்று சுட்டினார்.

நான்காவதில், விருப்பு வெறுப்பற்ற ஞானதேசிகனது அன்பைப் பெற்றவர்களுக்கு விருப்புவெறுப்பால்வரும் துயரங்கள் இல்லை என்பதுபற்றி, விருப்பு வெறுப்பு அறுதலுக்கு ஸமத்வபுத்திப் பழக்கமும் இன்றியமையாத உபாயம் என்று குறித்தார்.

ஐந்தாவதில், துக்கவிமோசனத்துக்குரிய ஈஶ்வரார்ப்பண கர்மாநுஷ்டானத்தில் ப்ரீதியுற்றோரை நல்வினை தீவினைப்பலன்கள் பொருந்தா என்றமையால், ஈஶ்வரார்ப்பண கர்மானுஷ்டானமும் உபாயம் என்று போதித்தார்.

ஆறாவதில், ஐம்பொறி அடக்கத்தையும், பொய்வாழ்வை ஒழிக்கின்ற ஶ்ரவணம் மனனம் நிதித்யாஸனம் என்கின்ற அப்யாஸங்களையும் சாதித்து, மோக்ஷம்பெற்ற ஞானகுருவினது நிவிர்த்திமார்க்கத்தில் நிற்கின்றவர்கள் இறப்புப்பிறப்பற்று இருப்பார்கள் என்று கூறினமையால், ஐம்பொறி அடக்கமும், ஶ்ரவணமுதலிய கர்மங்களும் தக்க உபாயங்கள் என்று உறுதிப்படுத்தினார்.



ஏழாவதில், மனக்கவலைக்குப் பரிஹாரம் ஒப்பற்ற ஞானகுருவின் கிருபை என்றமையால், மனக்கவலை மாற்றலுக்கு ஞானகுருவின் கடாக்ஷமும் அவசியம் என்று குறித்தார்.

எட்டாவதில், இல்லறத்துக்கும் துறவறத்துக்கும் உரிய கர்மங்களைப் பூரண அன்போடு செய்தாலன்றி, அவற்றாற் பெறத்தக்க ப்ரயோஜனமாகிய பேரன்பும் பேரறிவும் அமையா என்று கூறினமையால், அக்கர்மங்களைச் செய்தலும் அவசியம் என்று குறித்தார்.

ஒன்பதாவதில், ஞானிகளுக்குப் பகல்போல விளங்கும் பரமேஸ்வரனை த்யானஞ் செய்யாதவனுடைய தலை பயனற்ற தலை என்றும், பத்தாவதில், அவருடைய திருவருளைப் பெறாதவர்கள் த்ரிலோக ஸஞ்சாரத்துக்குரிய பெருந் துயரங்களுக்கு ஆளாவார்கள் என்றும் போதித்திருப்பதால், பரமேஸ்வர த்யானமும் அவரது அருட்பேறும் அவசிய உபாயங்கள் என்று சுட்டினார்.

இனி, இவ்வதிகாரத்துள்ள பத்துக் குறள்களையும் தனித் தனியாக ஆராய்வாம்.

---

**க. அகர முதல வெழுத்தெல்லா மாதி**
**பகவன் முதற்றே யுலகு.**

அந்வயம்:—எழுத்து எல்லாம் அகரம் முதல.
உலகு ஆதிபகவன் முதற்று.

அர்த்தம்:—எழுத்துக்கள் எல்லாம் அகரம் என்ற முதலை உடையன; உலகம் காரணப்பொருளாகிய பரமேஸ்வரனை முதலாக உடையது. ("முதற்றே" என்பதில் ஏகாரம் அசைநிலை)

ஈண்டு, (25—28 பக்கங்களில்) எழுத்தின் லக்ஷணமும், பின்னர் (28—30 பக்கங்களில்) லோகத்தின் லக்ஷணமும் கூறப்படும்.

அகர எழுத்தென்றது "அ" என்ற ஓசை (தொனி, சத்தம்.) சகல சத்தங்களும் ஆகாசத்தில்நின்று பிறந்தன. சிதா

காசம் என்ற சுத்த பேரறிவில் நின்று மனாகாசமாகிய மாயை தடித்து, மாயையில் நின்று பல ஸூக்ஷ்ம அக்ஷர (அழிவற்ற) தொனிகளும் தோன்றின. இவையெல்லாம் தேவதா சொரூபங்கள் என்று பெரியோர் கூறுவர்.

சர்வ அக்ஷர தொனிகளுக்கும் முதலாயுள்ள தொனி "அ" என்ற தொனியே. இது ஸ்ருஷ்டி தத்வமாகிய ப்ரஹ்ம கலையை உடையது. உகாரம் விஷ்ணு கலையை உடையது. மஹாரம் ருத்ர கலையை உடையது.

இந்த அகாரம் உகார மகாரங்களுடன் சேர்ந்து, "ஓம்" என்ற ப்ரணவமாயிற்று. இது ஏகாக்ஷரம் என்றும் ப்ரஸித்தி பெற்றது. ப்ரணவம் சகல மந்த்ரங்களின் ப்ராணன் என யோகீஸ்வரர்கள் அறிவார்கள். இது ஸர்வ பாபங்களையும் விலக்கி முக்தியை அருளத்தக்கது.

மைத்திராயண்ய உபநிஷத், 6 22 உம், வாதுல சுத்தம் என்ற உபாகமத்தில் வர்ணபேத படலமும் ப்ரணவபேத படலமும், சிவஞானபோதம், பாண்டிப்பெருமாள் விருத்தியுரை, 4. 3. உம் பார்த்தறிக.

திருமூலர், திருமந்திரம் ப்ரணவ ஸமாதி, 2இல், "ஓங்காரம் ஜீவ பரஶிவ ரூபமே" என்று விளக்கினார். அஃதாவது, பரஶ்வ ஸம்பந்தம் பெற்ற ஓர் மஹா விநோத ஜீவகலைக் கூட்டமாம்

இந்த ஜீவ பரஶிவரூபத்துக்குத் தலையாயுள்ள அகாரம், சுத்தமாயையில் தோன்றின எழுத்துக்கள் (சத்த சொரூபங்கள்) தோறும் நிற்கின்றது.

எழுத்துக்களுக்கு ஆதி அகாரம் என்றும், உலகங்களுக்கு ஆதி பகவான் என்றும் நாயனார் கூறினமையால், எழுத்துக்களுக்கும் பகவான் ஆதி (காரணம்) அன்றோ என்று ஆக்ஷேபம் நிகழின், பகவான் அகாரத்துக்கும் சகல லோகங்களுக்கும் ஆதியேயாம் என்று அறிக.

மஹான்களாற் கூறப்பட்ட தத்வஶாஸ்த்ரத்தில் ஸ்ருஷ்டி லய க்ரமங்கள் பின்வருமாறாகும். குணங்குறியற்ற பரமாத்மா (பரஶிவம், பகவான்) ஒடுக்கத்தில்நின்று அசைய, தமக்குள் அபின்னமாயிருந்த பராஶக்தி விஜ்ரும்பித்து, அதில்நின்று அதிசூக்ஷ்ம சுத்தமாயை தோன்றிற்று.



சுத்தமாயையில் அரூப நாதமும், அகரம் முதலிய ஒலிகளும், நாநாவித மந்த்ரங்களும் தோன்றின.

சுத்தமாயையின் கீழ்ப்பாகத்தில் மும்மலங்களோடு கலக்கப்பட்ட அசுத்தமாயையில் அந்தஃகரணாதி பௌதிகாதிகளும், அவன் அவள் அது என்ற சுட்டப்பட்ட சொரூபங்களுந் தோன்றின.

ஆகவே, சுத்தமாயையில் தோன்றின ஒலிகளுக்கும், அசுத்தமாயையில் தோன்றின ப்ரபஞ்சத்துக்கும், பகவான் காரணப்பொருளானார்.

நாதத்தில்நின்று அகாரம் தோன்றி, குரு ஶிஷ்ய பரம்பரைக்கு உரிய அறிவுநூல்கள் தோன்றின.

சுத்தமாயையின் அதோ முகத்தில்நின்று அசுத்தமாயை தோன்றி, சுக துக்க அநுபவங்களுக்கு உரிய உலகங்கள் தோன்றின.

ஸ்ருஷ்டிக் க்ரமத்தில், பகவானில்நின்றே குரு ஶிஷ்ய பரம்பரைக்கு உரிய ஞான ஶாஸ்த்ரங்களும் தர்ம ஶாஸ்த்ரங்களும், சுக துக்க அநுபவங்களுக்கு உரிய அண்ட கோடிகளும் தோன்றின என்ற உண்மையை அநுசரித்து, இந்தக் குறளில் அகாரம் எவ்விதம் மற்றைய எழுத்துக்கள் தோறும் ப்ரவேசித்து நிற்குமோ, அவ்விதமே பகவான் அகாரத்திலும் ப்ரபஞ்சத்திலும் ப்ரவேசித்து நிற்கின்றார் என்று உபதேசித்தார்.

**பகவான்** என்ற பதத்தின் அர்த்தம் பூர்ண ஐஶ்வர்யம், வீர்யம், யஶஸ், ஸ்ரீ, ஞானம், வைராக்யம் என்ற "பகத்"தை உடைய பரமாத்மா என்று விஷ்ணுபுராணத்தில் 6. 5. இல் பராஶர ருஷி விளக்கினார்.

"ஆதிதேவனான புராண புருஷன் நீ" என்று பகவத்கீதை 11. 38 இல் பகவான் போற்றப்பட்டார், சராசரப்பொருள் யாவற்றிற்கும் காரணப்பொருளாய் இருத்தலால்.

**ஆதி பகவன்**=காரணப்பொருளாகிய பரமேஶ்வரன்.

**முதல**=முதலை உடையன.

முதல் என்ற பதமும் அஃறிணைப் பன்மைக் குறிப்புவினைமுற்று விகுதியாகிய "அ"வுஞ் சேர்ந்து, **முதல** என்று ஆகி, முதலையுடையன என்று பொருள்படும்.

**முதற்று**=முதலையுடையது. முதல் என்னும் பகுதி று என்னும் குறிப்பு வினைமுற்று ஒருமைவிகுதியுடன் சேர்ந்து, முதலையுடையது என்று அர்த்தப்படும். இரண்டாம் அதிகாரத்தில் 1ம் குறளில் 'பாற்று' என்பது (பால்+று) பான்மையுடையது என்று அர்த்தப்பட்டது போல.

**முதல்** என்றது தலைப்பொருள். முதற்பொருளாகிய இறைவன் பின்வந்தவற்றிற்குக் **காரணம்** ஆம்.

"அ" என்ற ஒலி எவ்விதம் மற்றைய ஒலிகளுக்குத் தலைப் பொருளாய் நிற்குமெனில், உதாரணமாக "டி" கார, "நு" கார, "பொ" காரத்தின் நிலைகளை அறிக.

உயிராயுள்ள அகாரம் இகாரமாய் "ட்" என்ற மெய்யுடன் சேர்ந்து, "டி" காரத்திற்குக் காரணமாயிற்று.

அகாரம் உகாரமாய் "ந்" என்ற மெய்யொடு சேர்ந்து, "நு" காரத்திற்குக் காரணமாயிற்று.

அகாரம் ஒகாரமாய் "ப்" என்ற மெய்யுடன் சேர்ந்து, "பொ" காரத்திற்குக் காரணமாயிற்று.

**காரணம்** யாதெனின், கார்யத்துக்கு முன்னே நியதமாக உள்ளதாய்த், தான் இன்றி அக்கார்யம் உளதாகாத பொருளாம்.

காரணம் **முதல் துணை நிமித்தம்** என மூவகைப்படும். குடத்திற்கு **முதற்காரணம்** மண்ணும், **துணைக்காரணம்** திரிகையும், **நிமித்தகாரணம்** குயவனும் போல, எழுத்துக்களுக்கு மாயை முதற்காரணம், பராஶக்தி துணைக்காரணம், பகவான் நிமித்தகாரணம் என்றறிக.

இனி **லோகத்தின்** லக்ஷணம் கூறுதும்.

நாயனார், அதி. ௩, குறள் எ இல், "சுவை ஒளி ஊறு ஓசை, நாற்றம், என்ற ஐந்தின் வகைதெரிவான் கட்டே, உலகு" என்றார். இதன்பொருள் இதற்குரிய உரையிற் காண்க.

பஞ்சப் பொறிகளாலும் மனஸாலும் புத்தியாலும் அறியத் தக்க **லோகம்** நான்கு விதமான ரூபங்களாய் ஆத்மாவுக்குத் தோற்றும்.

ஐம்பொறிகளுக்கு விஷயமான **பிம்பங்களும்**, அப்பொறிகளில் ப்ரதிபலித்த **ப்ரதி பிம்பங்களும்**, அப்பிரதிபிம்பங்களை



மனஸ் க்ரஹணஞ்செய்தலால் உண்டாகும் **மானஸரூபங்களும்** (நினைவு ரூபங்களும்), அந்தஃகரணத்தில் பீஜங்களாய் வஸிக்கும் **வாஸனாரூபங்களும்** "லோகம்" எனப்படும்.

இந்த பிம்ப ப்ரதிபிம்ப மானஸரூப வாஸனாரூப தோற்றங்கள் யாவும், ஒரே நிலையில் நிற்காது, மாறுதலையும் அழிவையும் பெற்றிருக்கக்கண்டும், ஜீவாத்மா இவற்றையெல்லாம் மெய் என்றெண்ணியும் ஆவலோடு பற்றியும் மயங்கும்.

இவற்றை போகசாதனையில் விலக்கின (ஒழித்த) சமயத்தில், மறப்பு என்ற இருளில் (தூக்கத்தில்) விழாது ஒருவன் இருப்பானாயின், அவனுக்கு **ஆத்ம தர்ஶனம்** சித்திக்கும். ஆத்மாவைத் தேடிக் கண்டுகொண்டபின், ஶிவ **தர்ஶனம்** சித்திக்கும் என்பதுபற்றி, "நினைப்பு மறப்பற்று நில்" என்று மெய்ஞ்ஞானி ஞானாதிகாரிக்கு உபதேசிப்பான்.

ஜீவர்களின் **அகத்திலுள்ள லோகம்** மானஸரூபங்களாய் அந்தஃகரணங்களைப் பற்றி நிற்கும் **புறத்திலுள்ள லோகம்** உயிர்கள் வஸிக்கும்படி பஞ்சபூதங்களால் இயற்றப்பட்டு **அண்ட பிண்டங்கள்** ஆகி நிற்கும்.

**அண்டம்** என்றது முட்டைவடிவம் கொண்டது.

ஓர் அண்டத்தில் வெவ்வேறாக இருக்கும் சரீரங்கள் **பிண்டங்கள்** எனப்படும், அதில்நின்று பிண்டப்பட்டதால் (திரண்டு வேறானதால்).

அண்டங்களில் மிகப்பெரியது **ப்ரஹ்மாண்டம்**. எண்ணிறந்த ப்ரஹ்மாண்டங்கள் உண்டு.

**ப்ரஹ்மாண்டம்**=மிகவும் பரந்த அண்டம்; அல்லது, ஓர் ப்ராஹ்மாவின் ஆணைக்குட்பட்ட அண்டம்.

ஓர் ப்ரஹ்மாண்டம் மேல்கீழாய்ப் பதினாலுலோகங்களை அடக்கிநிற்கும்.

**மேல்லோகங்கள்** ஆவன, பூ புவர் ஸ்வர் மகர் ஜன தப ஸத்ய லோகங்கள். இவை தட்டுக்குமேல் தட்டாய் (பரப்புக்கு மேல் பரப்பாய்) இருக்கின்றன.

**கீழ்லோகங்கள்** அதலம் விதலம் ஸுதலம் ரஸாதலம் தலாதலம் மஹாதலம் பாதாலம் எனப்படும். இவையும் தட்டுக்குக்கீழ் தட்டாய் இருக்கின்றன.

ஈண்டு **லோகம்** என்ற பதம் தட்டுக்குமேல் தட்டாக நிற்கும் பரப்புக்களையும், ஒவ்வொரு ப்ரப்பிலும் தனித்தனியாக இயங்கும் ஸ்தலங்களையும் குறிக்கும்.

**பூலோகத்தில்** பூமி என்றும், ஜம்பு த்வீபம் என்றும் ப்ரஸித்திபெற்ற மனுஷ்ய லோகமும், ஶாக, குஶ, க்ரவுஞ்ச, ஶால்மலி, கோமேதக, புஷ்கர தீவுகளும் உண்டு.

எங்களுக்குரிய ஜம்புத்தீவு என்ற லோகத்தில் மனுஷர் ஜீவனோபாய ஆத்மோபாய கர்மங்களை அநுஷ்டித்து அவற்றிற்குரிய பலன்களைச் சீக்ரத்திற் பெற்று வாழ்வார்கள்.

**புவர் லோகத்தில்** சந்த்ர சூர்ய நக்ஷத்ர மண்டலங்களும், புதன் சுக்ரன் அங்காரகன் ப்ரஹஸ்பதி சனி லோகங்களும் இருக்கின்றன.

**ஸ்வர் லோகத்தில்** இந்த்ரன், தேவர்கள் முதலியோர்களால் ஸ்துதிக்கப்பட்டு, அரசுசெலுத்துவார்.

**மஹர் லோகத்தில்** மார்க்கண்டேயர் முதலிய முனிவர்கள் வீற்றிருப்பார்கள்.

**ஜன லோகத்தில்** பிதிர்தேவதைகள் வாஸம்செய்வார்கள்.

**தப லோகத்தில்** ஸநகர் முதலிய ருஷிகள் வாழ்வார்கள்.

**ஸத்யலோகத்தில்** உள்ள பிரிவுகளில் ப்ரஹ்மா ஸுப்ரஹ்மண்யர் முதலிய ஈஶ்வரர்கள் எழுந்தருளியிருப்பர்.

கீழ்மேல் லோகங்களின் பிரிவுகள் ஓர்கடாகத்தினுற் சூழப்பட்டு, முட்டைவடிவமாய் மிக விரிந்து, ஓர் ப்ரஹ்மாவின் ஸ்ருஷ்டி அதிகாரத்துள் நிற்பதால், **ப்ரஹ்மாண்டம்** எனப் பெயர் பெற்றது என்பார் பெரியோர்.

இப்படியே அநேககோடி ப்ரஹ்மாண்டங்களும், அவை ஒவ்வொன்றுக்குமுரிய ப்ரஹ்மாதி த்ரிமூர்த்திகளும், உண்டு.

அண்டாண்ட கோடிகள் தோறும் கடவுள் ப்ரவேஶித்து நிற்பர். ஆகாஶமானது ஸர்வபொருள்களையும் வ்யாபித்திருப்பதுபோலவும், பாலில் நெய், பழத்தில் ரஸம், எள்ளில் எண்ணெய், அரணியில் அக்நி வ்யாப்தியானது போலவும், பகவான் ஆத்மாக்களோடும் தேகங்களோடும் கூடிப் பற்றில்லாமல் நிற்பர். இவ்வாறு இரண்டறக் கூடியுங் கூடாதும் நிற்கும் நிலை



**அத்வைத** நிலை என்று அறிக. (ந+த்வைத=இரண்டின் தன்மையற்ற.)

முதற்குறளில் ஸ்ருஷ்டிக்குமுன் அஶப்த சொரூபமாய் ஒடுக்கத்தில் நின்ற பகவான் ஶப்த சொரூபமாகிய ப்ரணவநாத வடிவங்கொண்டு, வேதாகம ஶாஸ்த்ரங்களையும் அண்டபிண்ட சராசரப் பொருள்களையும் தோற்றுவித்தார் என்றும், அவற்றொடு வ்யாப்தி வ்யாபக ஸம்பந்தத்தால் ஒன்றாயும், பற்றில்லாமையால் வேறாயும், நிற்கின்றார் என்றும் விளக்கி, இரண்டாங் குறளில் அகார காரணமாய் வந்த கல்வியின் பயன் பகவானது திருவடி என்னும் அருளை என்றும், அவ்வருளைப் பற்றுதற்குத் தொழுதல் முதலிய அப்யாஸங்களால் அநந்யபக்தியை விளைவிக்கவேண்டும் என்றும் போதித்தார்.

---

**உ. கற்றதனா லாய பயனென்கொல், வாலறிவ**
**னற்றா டொழாஅ ரெனின்.**

அந்வயம்: வாலறிவன் நல் தாள் தொழார் எனின்,
கற்றதனால் ஆய பயன் என்கொல்?

அர்த்தம்: பரிசுத்த பேரறிவாயும் பேரின்பமாயும் இருப்பவரது நல்ல திருவடிகளை வணங்காராயினால், கல்வியைக்கற்று அதனாற்பெற்ற பலன் யாது? (கொல் என்றது அசைநிலை இடைச்சொல்.)

**கற்றல்** என்றது எழுத்தும் சொல்லும் பொருளும் ஆராய்ந்து நூல்களைப் படித்தல்; கற்றறிந்த ஆசிரியரை அடுத்துப் பாடங்கேட்டு, அவர் சொன்ன பொருளைத் தெளிவாக மனசிற் கொள்ளல்.

கற்றற்குரிய நூல்களைக் கற்றும் கேட்டும், அவற்றின் பொருளை உணர்தலே **கல்வி**.

கற்றலுக்கு ஊன்றுதுணை **கேள்வி** என்று 42ம் அதி. 4வது குறளில் விளக்கப்பட்டது. கற்றறிந்த குருவை அண்டி **ஶ்ரவணம் செய்தல்** ஶிஷ்யனுடைய கடமை. ஶ்ரவணம் (கேள்வி) செய்யும் பொழுது ஐயங்களைத் தீர்க்குமாறு வேண்டிய ப்ரஶ்நங்களைச் செய்து (வினாக்களைக்கேட்டுத்) தெளிவைப் பெற வேண்டும்.

நூல்கள் உலகநூல் அறிவுநூல் என இருவகைப்படும்.

உலகநூல் (மெய் வாய் கண் மூக்குச் செவி என்னும் ஐம்பொறிவழியால் தத்தம் புலன்களாகிய ஊறு சுவை ஒளி நாற்றம் ஓசை என்பவற்றைப் பற்றிவந்த) சிற்றின்பத்துக்கு உரிய லோக விஷயங்களைக் கூறும்.

அறிவுநூல் புலன்களைப் பற்றாது நின்ற ஐம்பொறி அடக்கத்துக்கு அப்பால் உதயமாகும் பேரின்பத்துக்கு உரியது. இவ்வகை நூல்கள் பதி பசு பாச லக்ஷணங்களைக் கூறும்.

பதி=பரமேஶ்வரன், பாசம்=மலம் என்ற கயிறு, பசு=மலத்தால் பந்திக்கப்பட்ட ஜீவாத்மா, சிற்றறிவாளி.

அறிவுநூல்கள் **தலை இடை கடை** என மூவகைப்படும் ஓதப்படும் நூல் ஓத்து என்றறிக.

ஸம்ஸ்க்ருத பாஷையிலுள்ள **தலையாய ஓத்து** உர்க் யஜுர் ஸாம வேதங்களாம்.

**இடையாய ஓத்து** அதர்வணவேதமும், வேதங்களுக்கு அங்கங்களாகிய நிருத்தம் வ்யாகரணம் கல்பம் ஜ்யோதிஷம் ஶிக்ஷா சந்தஸ் என்னும் ஆறும், மநு முதலிய பதினெட்டுத் தர்ம ஶாஸ்த்ரங்களுமாம்.

**கடையாய ஓத்து** ராமாயணம், மஹாபாரதம் என்னும் இதிஹாஸங்களும், சைவ வைஷ்ணவ புராணங்களும், வேதத்துக்கு மாறுபடுவாரை மறுக்கும் உறழ்ச்சிநூல்களுமாம். ஆனால், மஹாபாரதத்தை ஐந்தாம் வேதம் எனக்கூறுவோர் இடையாய ஓத்தில் ஒன்றென்பார்கள்.

அகஸ்தியமுனிவர் முதலிய முதற்சங்கத்தார் தமிழ்ப் பாஷையில் செய்தநூல்கள் தலையும், இடைச்சங்கத்தார் செய்தன இடையும், கடைச்சங்கத்தார் செய்தன கடையுமாக நிற்கும் என்று நச்சினார்க்கினியர், தொல்காப்பியம் பொருளதிகாரம் 25ம் சூத்திர உரையிற், கூறினார். இது காலத்தைப் பற்றியும் தமிழ்ச்சங்கத்தைப்பற்றியும் வந்த வகுப்பு.

திருவள்ளுவநாயனார் ஞானகுரவராய் இருத்தலானும், அவர் செய்தருளிய திருக்குறள் தர்மநூலாதலானும், அது கடைச்சங்கத்து நூலாயினும், மநு முதலிய பதினெட்டு தர்ம



ஶாஸ்த்ரங்களைப்போல இடையாய ஓத்து என்றே கூறவேண்டும்.

தோன்றி அழியும் சிற்றின்பத்தைப் பயக்கும் ப்ரபஞ்ச ஞானமாகிய **உலக நூற்பொருள்**யாவும், ஜடத்தை மெய்யென்று பாராட்டி, ஐம்புலவிஷயங்களில் அபிமானத்தை ஏற்றி, ஆத்மாவின் நல்லறிவை மறைப்பதால், **அஜ்ஞானம்** எனப்படும்.

ஆத்மாவைத் துலங்கச்செய்யும் நூல்கள் **ஞானஶாஸ்த்ரங்கள்**, எனப்படும். இவை எல்லாம் மெய்ப்பொருளை அறிந்த பெரியோர்களது **ஶாஸனங்கள்**, கட்டளைகள், என்றறிக.

மெய்ப்பொருளைப்பற்றிய ஞானம் **மெய்ஞ்ஞானம்** எனப்படும். இது **பரம், அபரம்** என இருவகைப்படும்.

பதி பசு பாச லக்ஷணங்களைக் கூறும் அறிவுநூல்களை ஓதி, அவற்றின் சொற்பொருள்களைப் புத்தியால் அறிதல் **அபரஞானம்** எனப்படும்.

எல்லாப் பொருள்களுக்கும் ஆதாரமானதும் குணங்குறியற்றதுமாகிய சுத்தாத்மாவை (பரஶிவத்தை) உள்ளபடி ஸ்வாநுபவத்தில் அறிதல் **பரஞானம்** எனப்படும்.

ஆத்மா தன்னைச்சார்ந்த மலங்களில்நின்று ஒழிவுபெற்றுக் கைவல்ய தசையில் தன்னை அறியும். இந்த **ஸ்வாநுபவம்** "ஆத்மாவை ஆத்மாவால் அறிதல்" எனக் கூறப்படும். இதுவே **ஆத்ம தர்ஶனம்**.

மெய்ஞ்ஞானஶாஸ்த்ரப் பயிற்சியாகிய **அபரஞானம்** பரஞானத்துக்குப் போந்த நெறி.

யாவும் ஶிவமே என்று ஞானநூலிற் படித்தவர் தாமும் ஶிவம் என்று சொன்னால் ஶிவமாவாரோ? ஆகமாட்டார். ஆதலால், கல்வியிற் சிறந்த கல்வியாகிய அபரஞானமும் மனம் வாக்குக்கு அதீதப்பட்ட **ஶிவாநுபூதி** என்ற நிலையை நேரே தராது.

அஹந்தை மமதையால் ஏவப்பட்ட மனமும் வாக்கும் கல்விச்சிறப்பைப் பெற்றால் **கல்விமதம்** என்ற தோஷத்தை அடைந்து, தமக்கும் பிறர்க்கும் துன்பங்களை விளைவிக்கும்.

மாணிக்கவாசக ஸ்வாமி போற்றித்திருவகவலில் "கல்வியென்னும் அல்லலிற் பிழைத்தும்" என்று தம் அனுபவத்தைக் கூறினார். அவ்வாறே தாயுமானஸ்வாமியும் தமிழையும் ஸம்ஸ்க்ருதத்தையும் கசடறக் கற்றபின் "நான் அறிஞன், நீ மூடன்" என்ற புத்திமேலிட்டுக் கல்வியின் முக்ய ப்ரயோஜனத்தைப் பெறாமல், சிலகாலம் திரிந்ததைப்பற்றிப் பின்வருமாறு, சித்தர் கணம் 10இல், ஓலமிட்டார்,—

"கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லவர்கள், கற்றும் அறிவில்லாத என் கர்மத்தை என் சொல்வேன்.

"கைவல்ய ஞானநீதி வல்லோர் உரைக்கிலோ, கர்மம் முக்யமென்று நாட்டுவேன்.

"கர்மம் ஒருவன் நாட்டினாலோ, பழையஞானம் முக்யமென்று நவிலுவேன்.

"வடமொழியிலே வல்லான் ஒருத்தன் வரவும், த்ராவிடத்லே வந்ததாக விவகரிப்பேன்.

"வல்ல தமிழறிஞர் வரின், அங்ஙனே வடமொழியில் வசனங்கள் சிறிது புகல்வேன்.

"வெல்லாமல் எவரையும் மருட்டிவிட வகைதந்த வித்தை என் முத்தி தருமோ?"

இக்கோலங்களைப் பெற்றவர்கள் **கற்றும் அறியாதவர்கள்.** எனப்படுவர்.

கல்லாதவரும் கற்றுமறியாதவரும் கற்றறிந்தவர் என்ற ஞானக்கருத்துடைய அறிவுடையாரைப் பொருந்தி அவர் சொன்னபொருளின் நுண்மையைக் கேட்டு உணராராயின், பணிந்த மொழியும் அடங்கிய மனமும் உடையாராகார்.

42ம் அதி., குறள் 9இல், நாயனார் "நுணங்கிய கேள்வியரல்லார் வணங்கிய வாயினராதல் அரிது" என்றார்.

ஆகவே, கல்வியைப்பற்றிவந்த பிரிவினர் கல்லாதவர், கற்றறியாதவர், கேள்வியுடையார், கற்றறிந்தவர் என நால்வகையார் ஆவர்.

வாக்கும் மனமும் படிந்தவிடத்தே அறிவுமேலிடும். அவ்வறிவிற்கு இசைந்தபடி ஞானோபதேசம் ஆகும். உபதேசவழி



யில் ஶ்ரத்தையோடுநின்றால் அறிவு பூர்ணப்பட்டுப் பரஞானம் ஆகும்.

புக்தி என்ற சிற்றின்பபோகங்களையும் முக்தி என்ற பேரானந்தத்தையும் அநுக்ரஹிக்கின்ற பரமேஶ்வரனில் ப்ரதிஷ்டை பெறாத கல்வி அஹந்தை மமதை முதலிய மோகங்களை நீக்கி ஸமத்வ புத்தியையும் சித்தசுத்தியையும் தராது என்பது பற்றிக். "கற்றதனாலாய பலன் என்......நற்றாள் தொழார் எனின் என்றார்."

**நற்றாள்**=நல்ல தாள்; மும்மலங்களை அகற்றி, அழிவில்லாத மோக்ஷத்தைத் தரும் பகவானது திருவடிகள்.

**அடி** என்றதும் **அருள்** என்றதும் யோகஸாதனையில் ப்ரஸன்னமாகும் நிர்க்குணநிறைவு என்றறிக. இதற்கு ப்ரமாணம் தாயுமானஸ்வாமி, ஆரணம், 7, "அடியெனுமதுவும் அருளெனுமதுவும் அறிந்திடின், நிர்க்குண நிறைவு".

குணங்குறியோடுள்ள த்யானத்திலும், திவ்ய அவஸரங்களுக்கேற்றபடி யுகாந்தரங்களிலும், உதயமாகும் மூர்த்திகள் பரமாத்மாவின் **அருட்கோலங்கள்**, பாதாரவிந்தங்கள்.

**பாதாரவிந்தம்**=பாதம் (அடி) + அரவிந்தம் (தாமரை)= அடி என்ற கமலம்.

**தொழுதல்** என்றது பகவானை வழிபடுதல், வந்தித்தல், வணங்குதல்.

தொழுதல் சித்திக்கும்பொருட்டு மனம் தொழப்படும் வஸ்துவில் ப்ரதிஷ்டை பெற்றிருக்கவேண்டும்.

தொழுதல் **சரியை, க்ரியை, யோகம், ஞானம்** என்ற ஸோபான மார்க்கங்களுக்கு உரியவர்களின் புத்திக்கு ஏற்றபடி இருக்கும்.

**ஸோபான மார்க்கம்**=ஏணிபோல் இயற்றப்பட்ட பாதை; ஒன்றுக்கு மேல் ஒன்றாய் இருக்கும் வழி. இந்த வழிகள் புத்திகளுக்குத் தக்கபடி வகுக்கப்பட்டன.

ஸ்வாமி எனக்கு ஆண்டவன், நான் அவருக்கு அடிமை, என்ற **தாஸ மார்க்கம்** ஆகிய **சரியையில்** நிற்பவனுக்குத் தேவா

லயத்தில் திருவலகிடுதல் (பெருக்குதல்), திருமெழுக்கிடுதல் (மெழுகல்), முதலிய கைங்கரியங்களைச் செய்தலும், தெய்வத்தைத் துதித்தலும், தெய்வபக்தர்களுக்குத் தொண்டு செய்தலும் தொழுதலாகும்.

ஸ்வாமி எனக்கு பிதா, நான் அவருக்குப் பிள்ளை, என்ற **புத்ரமார்க்கம்** ஆகிய **க்ரியையில்** நிற்பவனுக்கு, ஶிவன் முதலிய தெய்வங்களைத் தீக்ஷாவிதிப்படி விக்ரஹ பூர்வகமாக அகத்தும் புறத்தும் பக்தியோடு பூஜித்தல் தொழுதலாகும்.

**விக்ரஹம்** என்றது முழுப்பொருளாய் இருக்கும் கடவுளை பிண்டப்படுத்தல் (பிரித்தல்.)

**விக்ரஹ ஆராதனை**=சிதாகாஶ ஸ்வரூபியை பிண்டப்படுத்தித் தொழுதல். (சித் ஆகாஶம்=அறிவு வெளி, அகண்டாகார அறிவு, பேரறிவு=சிதாகாஶம்.)

க்ரியையிலும் உயர்ந்தது **ஸகமார்க்கம்.** ஸகமார்க்க அதிகாரி விஷயசுகங்களை வெறுத்து மோக்ஷசுகத்தை விரும்புகிறபடியால், ஸ்வாமியின் அம்ஶமாகிய பேரறிவுக்கு உரியவனாகி அவருடைய மித்ரன் (தோழன்) ஆகின்றான். ஐம்பொறிகளைத் தத்தம் புலன்வழியிற் செல்லவிடாமல் மனஸுள் நிறுத்தி, ப்ராண அபானவாயுக்களைத் தடுத்து, மனஸைப் புத்தியோடு சேர்த்து, அசல புத்தியால் ஸ்வாமியை த்யானஞ் செய்து அநந்ய பக்திமானாய் இருக்கவேண்டுமென்று நிச்சயித்த யோகிக்கு இக்கர்மங்கள் எல்லாம் தொழுதலாகும்

ஸகமார்க்கத்தினும் மேற்பட்டது **ஸந்மார்க்கம்.** பதி பசு பாசம் என்னும் முப்பொருள்களின் லக்ஷணங்களைக் கூறும் நூல்களை ஸன்மார்க்கன் ஞானாசிரியர் ஸந்நிதியில் கற்றும் கேட்டும் ஆராய்ந்தும், த்ரிகரண சுத்தியோடு ஞான நிஷ்டையை அனுஷ்டித்துக் கைவல்யமாகி ஸத்பொருளாகுவான். ஞான ஶாஸ்த்ர விசாரணையும், நினைப்பு மறப்பற்று நிற்றலுக்குரிய அப்யாஸங்களும், அநந்யபக்தி அநுபவங்களும், இவனுக்குத் தொழுதலாகும் (ஸந்மார்க்கம்=ஸத் மார்க்கம்)

இவ்வாறு கூறப்பட்ட நான்குவகையான தொழுகை (வந்தனம்) எல்லாம் **பக்திநெறி** எனப்படும்.



பக்திநெறியானது மோக்ஷசுகத்தைப் படிப்படியாகப் பெறுதலுக்கே கருணைக்கடவுளால் ஸ்ருஷ்டிக்கப்பட்டது.

பக்திநெறிகள் சித்தத்திலுள்ள மலத்தை மெல்ல மெல்லப் போக்கி அறிவின் ப்ரகாசத்தை வ்ருத்தி செய்யும்.

மலநீக்கஸித்தியால் அன்பினும் அறிவினும் முதிர்ந்த ஆத்மா, ஸகமார்க்கத்திற் சென்றபொழுது, விருப்புவெறுப்புகளைக் கண்டித்து, விருப்புவெறுப்பால்வரும் சீதம் உஷ்ணம், லாபம் அலாபம், புகழ் இகழ், வறுமை செல்வம், ஜயம் அபஜயம், சுகம் துக்கம் என்ற **த்வந்த்வங்களை** (இரட்டை இரட்டையாகவும், ஒன்றுக்கொன்று மாறாகவும் இருப்பனவற்றை, அதாவது, விரோதஸம்பந்தம் பெற்ற இருதன்மைகளை) ஸமப்படுத்தும்.

இந்த **ஸமத்வ புத்தி** சித்தத்தில் நின்றிலகும் வஞ்சனை பொறாமை லோபம் முதலிய துஷ்டகுணங்களின் சேஷ்டைகளை அடக்கும். இவை எல்லாம் அற்றுப்போன நிலையில் ஜீவ அஹங்காரமற்ற ஆத்மா ஶிவமாகும்.

இந்த ஸோபானவாழ்வை அனுபவத்தில் ஆதிதொட்டு அந்தம் வரையிற் கண்ட மாணிக்கவாசக ஸ்வாமி அச்சோப்பதிகத்தில், முதற்பாடலில், கீழ்வருமாறு குறித்தார்,—

**முத்திநெறி** அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
**பத்திநெறி** அறிவித்துப், பழவினைகள் பாறும்வண்ணம்,
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனை ஆண்ட
அத்தன் எனக்கு அருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே.

பாபக்ஷயத்திற்காகவும்(க்ஷயம்=அழிவு, நீக்கம்), பரமேஸ்வர ப்ரீதிக்காகவும் **ஸந்த்யா வந்தனம்** என்று ப்ரஸித்திபெற்ற க்ருத்யம் வேதத்திலும் ஆகமத்திலும் இன்றியமையாத ஸாதனமென்று கூறப்பட்டது.

வேதாகமவிதிப்படி **ஸந்த்யா வந்தனம்** என்னும் தின க்ருத்யம் ஸந்த்யா காயத்ரி ப்ரஹ்மாணி நிம்ருஜி என்ற உத்தம ஶக்திகளுக்குத் தர்ப்பணஞ் செய்தலாகும் (திருப்தி செய்தலாகும்).

இந்த க்ருத்தியத்தின் வரிசைக் க்ரமத்தில் ஆசமனம் பஸ்மதாரணம் விநாயக ப்ரார்த்தனை ப்ராணாயாமம் காயத்ரீ ஜபம்

ப்ரஹ்மார்ப்பணம் தேவதாவந்தனம் அபிவாதனம் (வரங்கேட்டல்) என்ற கர்மங்களைச் செய்யவேண்டும்.

ஸந்த்யா ப்ரஹ்மாணி நிம்ருஜி என்ற ஶக்திகளைக் காயத்ரியில் ஒடுக்கி, காயத்ரி ஹ்ருதயபடனமும், காயத்ரி த்யானமும் காயத்ரி ப்ரார்த்தனையும் காயத்ரி [யைத்தனக்குள்] ஆவாஹனமும் செய்யவேண்டும்.

ஸந்த்யா வந்தன ஸங்கல்பம் செய்யும்பொழுது, பாபக்ஷயத்திற்காகவும் பரமேஸ்வர ப்ரீதிக்காகவும் காயத்ரீ ஜபஞ் செய்யப்போகிறேன் என்று கூறுதலாலும்,—தேவதா வந்தனத்தில் ஸந்த்யாமுதலிய உத்தமஶக்திகளும் ஸர்வ தேவர்களும் தேவிகளும் ருஷிகளும் முனிவர்களும் குரவர்களும் பிதிர் தேவர்களும் மாதாக்களும் ப்ருதிவி அப்புத்தேயு வாயு ஆகாசம் என்ற பஞ்ச பூதங்களும் பரமாத்மாவின் அம்ஶங்களே என்றுகூறி, "ஓம் நமோ பகவதே பரமாத்மனே நமஃ" என்று துதித்ததாலும்,—காயத்ரீ த்யானத்தில் ஸகல வர்ணங்களும் உடையவளே, மஹாதேவீ, ஸரஸ்வதீ, நரைதிரைமரணமற்றவளே, ப்ரஹ்மயோகியே (ப்ரபஞ்சத்துக்குப் பரமேஸ்வரனது துணைக்காரணமே), உனக்கு நமஸ்காரம், வரத்தைத் தருபவளாகிய தாயே,வருக, எனக்கு ப்ரஹ்மத்தை அனுக்ரஹி என்றலாலும்,—காயத்ரி ப்ரார்த்தனையில் பலமாகிறாய், ஓஜஸ் ஆகிறாய், எல்லாமாகிறாய், ஸர்வகாலமும் இருக்கின்றாய், ஸத்யம் ஆகிறாய் என்றலாலும்,—காயத்ரீ ஆவாகனத்தில், காயத்ரீயே என்னிடத்தில் வசிப்பாயாக, ஸாவித்ரியும் ஸரஸ்வதியும் சந்தஸ்களும் ருஷிகளும் என்னிடத்தில் வசிப்பார்களாக, செல்வமும் பலமும் என்னிடம் நிலையாகவே நிற்கட்டும் என்று ஓதி, கூட்டிவிரித்த இருகைகளாலும் ஹ்ருதயத்தைத் தொட்டுத் தன் ஹ்ருதயத்தில் இந்த நாநாவித ஶக்திகளையும் ஆவாஹனஞ் செய்தலாலும்,—அபிவாதனஞ் செய்யும்பொழுது, ஸ்வஸ்தி (மங்களம்) ஶ்ரத்தை மேதை (மேலான அறிவு) புத்தி (காரண கார்ய ஸம்பந்தத்தை விசாரிக்கும் அறிவு) ஸ்ரீ (செல்வம்) பலம் ஆயுள் ஆரோக்யம் என்பவற்றை எனக்குக் கொடு என்றலாலும்,—சந்த்யா வந்தனம் பராஶக்தியைத் தொழுதல் என்று சித்திக்கின்றது.



இவ்வித ஸந்த்யா வந்தனத்துக்கு அதிகாரியாகாத கல்விமான் வேறோர்வித ஆத்மார்த்த பூஜையைத் தன்னால் இயன்றமட்டுத் தினமும் செய்து வரவேண்டும்.

இனி, இரண்டாங்குறளுக்கும் மூன்றாங்குறளுக்கும் உள்ள ஸம்பந்தங் கூறுதும்.

அகார காரணத்தினாலே தோன்றின வேதாகம ஶாஸ்த்ரங்களைக் கற்றல் கல்வி என்றும், அக்கல்வி ஆத்மாவினுள்ள மல நீக்கத்தின்பொருட்டுப் பரமேஸ்வரனால் ஸ்ருஷ்டிக்கப்பட்டதென்றும், முடிப்பொருளாகிய பரமாத்மாவிற்கு அடியென்னும் அருட்சக்தி உள்ளதென்றும், அவ் அருட்சக்தியைப் பொருந்தினாலன்றி மானுடப்பிறவி பயன்படாதென்றும் இரண்டாங் குறளில் விளக்கி, மூன்றாவதில், ஶாஸ்த்ரங்களை அனுக்ரஹித்த கடவுள் தாமே திருமேனிகொண்டு பக்வமான ஆன்மாக்களுக்குக் குரு ஶிஷ்ய ஸம்ப்ரதாயமாக மோக்ஷநெறி போதிக்க வருவார் என்று விளக்கினார்.

---

## ௩. மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார் நிலமிசை நீடுவாழ் வார்.

பதச்சேதம்:—மலர்மிசை ஏகினான் மாண் அடி சேர்ந்தார் நிலமிசை நீடு வாழ்வார்.

அர்த்தம்:—ஸஹஸ்ர தள கமலத்தின்கண் சென்று ஶிவ சொரூபியானவனது பெருமைபொருந்திய அருளைப்பெற்றவர்கள் தாம்பெற்ற அருட்பூமியில் நெடுங்காலம் வாழ்வார்கள்.

இது, யோகமார்க்கத்தால் ஸமாதியைப்பெற்ற ஜீவன்முக்தனை ஶ்ரத்தையோடு ஒருவன் வழிபட்டால் அவனுக்கும் பக்வ காலத்தில் ஜீவன்முக்தி சித்திக்கும் என்று விளக்கிற்று.

மலர் மிசை=புஷ்பத்தின் மீது; ஆயிரம் இதழ்களோடு கூடிய த்வாதஶாந்த கமலத்தின்கண்.

ஏகி=சென்று.

மாண் அடி சேர்ந்தார்=மாட்சிமையைபெற்ற திருவடிகளைச் சேர்ந்தவர்கள்.

நில மிசை=அருட்பூமியின்கண்.

நீடு வாழ்வார்=ப்ரலய காலம் வரையில் ஆனந்தசொரூபியாய் இருப்பார்.

மானுட ஸ்தூலதேகத்தில் **ஆறுதாரம்** என்று கூறப்பட்ட மூலாதாரம் ஸ்வாதிஷ்டானம் மணிபூரகம் அநாகதம் விசுத்தி ஆக்ஞா என்ற சக்ரங்கள், அக்நி சூர்ய சந்த்ர மண்டலங்களில் க்ரமமாக அடுக்கப்பட்டு, ஸுஷும்ணா (சுழுமுனை) நாடியால் ஊடுருவப்பட்டிருக்கின்றன.

ஆறுதாரங்களுக்கு அப்பால் ஸுஷும்ணா நாடியின் மேற்பாக த்வாரமாகிய ப்ரஹ்ம ரந்த்ரம் தொட்டுப் பன்னிரண்டு அங்குலம் வரையிலுள்ள ஆனந்த ஸ்தானமாகிய த்வாதசாந்தத்தில் ஆயிரம் இதழோடுகூடிய அதிஸூக்ஷ்ம பத்மம் ஒன்று உண்டு. இதை ஸஹஸ்ர **தளம்** என்றும, ஸஹஸ்ரார **சக்கரம்** என்றும், சொல்வார்கள் பெரியோர்கள்.

யோகஸாதனையை அனுஷ்டிக்கத்தக்க ஜீவாத்மா தனது ப்ராணவாயுவை அபானவாயு உடன் சேர்த்து **மோக்ஷபாதை** என்னும் ஸுஷும்ணா நாடிவழியால் ப்ரஹ்ம ரந்த்ரத்தில் ஏற்ற, அதனை வாதிக்கும் ஆணவ மாயா சக்திகள் அறும். அறவே, அது பரிசுத்த ஸஹஸ்ராரத்தில் சென்று சிவமாகும்.

ஸஹஸ்ரதள கமலத்தில் மலங்களை நசித்த ஆத்மா "ஏகி", அம் "மலர்" இல் வீற்றிருக்கும் திருவருளைச் "சேர்ந்து", ஒப்பற்ற சிவத்தோடு ஒன்றுபடும் என்பதற்கு ப்ரமாணம்,

சங்கராசார்ய ஸ்வாமி, ஆனந்த லஹரி, கூ:—

"மூலம் மணிபூரகத்தோடு இலிங்கம் [ஸ்வாதிஷ்டானம்] மார்பு [அநாகதம்] முதுகளம் [விசுத்தி] விற்புருவநடு [ஆக்ஞா] மொழிவது ஆறு.

"ஞாலமும் மென்புனலும் அனற்பிழம்பும் காலும் நாதம் உறு பெருவெளியும் மனமும் ஆக மேல் அணுகி, குளபதத்தைப் பின்னிட்டு, அப்பால் மென்கமலத்து ஆயிரந்தோட்டு அருணபீடத்து ஆலவிடம்பருகிய தன்மகிழ்நரோடும் ஆனந்த முறும் பொருளை அறியலாமே."

திருவாசகம், கோயிற்றிருப்பதிகம், எ:—

"இன்று எனக்கு அருளி இருள்கடிந்து உள்ளத்து எழுகின்ற ஞாயிறேபோன்றுநின்ற நின் தன்மை நினைப்பற நினைந்தேன்.........சென்று சென்று அணுவாய்த் தேய்ந்து தேய்ந்து ஒன்றும் திருப்பெருந்துறைஉறை சிவனே."



"ஏகி"--"அணுகி"-"சென்று சென்று"-"அணுவாய்த் தேய்ந்து"--சிவத்தோடு ஒன்றுபட்டபொருள் யாதெனின், அஹந்தை மமதை என்ற மலகார்யங்களில்நின்று விலகின ஆத்மாவாம்.

ஜீவாத்மா மலத்தில் ஆழ்ந்திருப்பதால், மல சக்திகளாகிய ராக த்வேஷங்கள் பகவானால் அருளப்பட்ட அந்தஃகரணங்களிற் சென்று ஜீவாத்மாவைப் பக்ஷ பகை பாரமாய் அஹங்கரித்து அலையவிடும். மல சக்திகளின் அதிகாரத்தை ஜயிக்க, அவை நின்று விளையாடும் மனசையாவது ப்ராண அபான வாயுக்களையாவது ஒடுக்கவேண்டும். இந்த ஒடுக்கமுறை **யோகம்** எனப்படும்.

ப்ராண அபான லய (ஒடுக்க) முறைகளை **ஹடயோகம்** என்றும், மனோலய முறைகளை **ராஜயோகம்** என்றும், சொல்வார்கள்.

எந்த எந்த ஆதாரத்தில் ப்ராண அபான வாயுக்கள் ஒடுங்குகின்றனவோ அதில் மனமும் ஒடுங்குவதால், ப்ராண அபான லயம் சித்தித்த இடத்தில் அதற்கு ஏற்றபடி மனோலயமும் சித்திக்கும்.

ராஜயோகத்தாலாவது ஹடயோகத்தாலாவது ஸங்கல்ப விகல்பங்களோடும் கர்த்ருத்வ போக்த்ருத்வ புத்தியோடும் ஸஞ்சரிக்கும் (திரியும்) ஜீவாத்மாவை மோக்ஷபாதை என்ற ஸுஷும்ணா நாடியில் செலுத்த, ஆதாரங்களுக்கு அப்பாற்பட்ட ஸஹஸ்ர தளத்தைப் பொருந்தும் என்பதுபற்றி, "மலர்மிசை ஏகினான்" என்றார்.

விகார நிலைகளை ஒடுக்கின ஜீவாத்மா ஸஹஸ்ராரத்தைப் பொருந்தவே நிர்விகாரப்பட்டு அருட்சக்தியோடுகூடிப் பரமாத்மா ஆகும் என்பதுபற்றி, "மலர்மிசை ஏகினான் மாணடி" என்றார்.

அருள் நிறைந்த ஜீவன்முக்தன் ஆகிய ஸத்குருவினது அன்பைப் பெற்று, அவர் சந்நிதியில் ஞானநூல்களைக் கசடறக்கற்றும் யோகசாதனைகளைப் பயின்றும் மோக்ஷ சுகத்தை

அடைந்து, இனிப் பிறப்பு இறப்பு அற்ற நிலையில் ப்ரலயகாலம்வரையில் ஆனந்தசொரூபியாக வாழலாமென்பதுபற்றி, "மாணடிசேர்ந்தார் நீடுவாழ்வார்" என்றார்.

வாழ்வு, மெய் பொய் என இருவகைப்படும்.

இகலோகத்தில் குலம் கல்வி திடகாத்திரம் செல்வம் அதிகாரம் என்பவைகளும், பரலோகத்தில் இந்த்ராதி போகங்களும், தோன்றி அழிவதாலும், பல பந்தங்களை உண்டுபண்ணி ஜீவாத்மாக்களுக்குத் துன்பங்களை விளைவிப்பதாலும், இவையெல்லாம் போய் வாழ்வு ஆயின.

சிவபெருமானை வழிபட்டுப் பிறப்பு இறப்பும், அவைகட்குரிய பந்தங்களும், அற்ற மோக்ஷமே மெய் வாழ்வு ஆகும்.

மோக்ஷம், முக்தி, என்பன ஒருபொருட்சொற்கள்.

துக்க நிவிர்த்தியாகிய மோக்ஷத்தைப் பெற்றவன் ஜீவன் முக்தன் எனப்படுவான். தேகமே நான் என்றும், தேகத்தைப் பற்றி வந்த அஹந்தை மமதைகள் மெய் (யதார்த்தம்) என்றும், வாழ்ந்து துக்கசொரூபியாக இருக்கின்றவன் ஜீவன் பத்தன். இந்த புத்திகளை விட்டு, ஆத்மாவே நான் என்றும், தன்னில் ஏனைய ஆத்மாக்களையும், அவர்களுக்கு வரும் சுக துக்கங்களையும் தனதே என்று கண்டு அவற்றாற் சலனப்படாமல் ஶாந்தமாய் ஹிதம் செய்தும் வாழ்கின்றவன் ஜீவன் முக்தன்.

முக்தி ஸதேகமுக்தி விதேகமுக்தி என இருவகைப்படும்.

ஆணவ மலமாகிய அஹந்தை மமதைகளில்நின்றும்—மாயா மலமாகிய நினைவுகளின் பந்தங்களில்நின்றும்—கர்ம மலத்தினாலுண்டாகும் கர்த்ருத்வ புத்தியில்நின்றும்—கர்மபலத்தினாலுண்டாகும் போக்த்ருத்வ புத்தியில் நின்றும்—தேகத்தில் வசிக்கும்பொழுதே, ஆத்மா விடுபட்டிருப்பது ஸதேகமுக்தியாகும்.

இவ்வாறு ஶிவாநுபூதி பெற்ற நாள்தொட்டுத் தேகம் நஶிக்கும் நாள்வரையிலும் எத்தொழிலிற் ப்ரவேசித்தாலும் பூர்ண அறிவோடும் அன்போடும் நிற்பவன் ஜீவன்முக்தன். இந்த நிலையே ஸதேக முக்தி.

ப்ராரப்த கர்மம் ஒழிந்தவுடன், ஸ்தூல ஸூக்ஷ்ம தேகங்கள் நழுவ, ஜீவன்முக்தன் விதேகமுத்தி என்ற நிலையை அடைவான். ஸ்தூல தேகத்தையும் ஸூக்ஷ்ம தேகத்தையும் விட்டுப்



பரிசுத்த பரமாத்மசொரூபமாய்நிற்கும் நிலையே விதேகமுக்தி.

விதேகமுக்தியைப் பர முக்தி என்றும் ஸாயுஜ்ய பதவி என்றும் கூறும் வித்வான்கள், ஸதேகமுக்தியைப் பதமுக்தி என்பார்கள்.

பதமுக்தி பூலோகத்தில் வசிக்கின்ற தேகத்துக்குரியதன்று. கைலாசம் வைகுண்டம் முதலிய மேல்லோகங்களுக்கு உரிய அற்புத தேகங்களைப்பற்றியே நிற்கும்.

எனவே, பதமுக்தி மேல்லோகங்களில் அனுபவிக்கப்பட்ட விஷயானந்தங்களைக் குறிக்கும். பரமுக்தி போகங்களுக்கும் விஷயங்களுக்கும் அப்பாற்பட்ட பேரானந்த சுகத்தைக் குறிக்கும்.

இனி, மூன்றாங் குறளுக்கும் நான்காம் குறளுக்கும் ஸம்பந்தங் கூறுதும்.

பகவான் நினைக்கத்தக்க ஸகள சொரூபமாயும் நினைவுக்கு எட்டாத நிஷ்கள சொரூபமாயும் இருப்பதால், அவரை நிஷ்களமாய் (குணம் குறி அற்ற வஸ்துவாய்) தர்ஶித்தலுக்கு ஞானாசிரியனுடைய ஸஹாயம் அவசியமென்றும், நிஷ்கள தர்ஶனை பெற்றால் சுத்தபூர்ணவஸ்துவாய் ப்ரலயகாலம்வரையில் வாழலாமென்றும், மூன்றாங்குறளில் விளக்கி, மேல்வரும் நான்காம் குறளில் ஞானகுருவின் லக்ஷணம் வேண்டுதல் வேண்டாமை என்ற பற்றுக்கள் இல்லாமை என்றும், அவரை ஶ்ரத்தையுடன் வழிபட்டவரின் பேறு துன்பம் இல்லாமை என்றும், கூறினார்.

---

**௪. வேண்டுதல்வேண்டாமையிலானடிசேர்ந்தார்க்**
**கியாண்டும் இடும்பை யில.**

பதச்சேதம்:—வேண்டுதல் வேண்டாமை இலான் அடி சேர்ந்தார்க்கு யாண்டும் இடும்பை இல.

அர்த்தம்:—விருப்பு வெறுப்பு இல்லாத சத்குருவின் அருளைப் பொருந்தினவர்களுக்கு எவ்விடத்திலும் ஜனன மரண துன்பங்கள் இல்லை.

வேண்டுதல் வேண்டாமை=விருப்பு வெறுப்பு. இது எனக்கு வேண்டும், இது எனக்கு வேண்டாம், என்ற பேதநிலை.

ஆசையால் மனம் சலனப்படாத காலத்தில், ஆசை ஆத்மாவுடன்கூடி இரண்டறக்கலந்து ஸாமான்யமாக இருப்பதால், அவ்வாத்மாவுக்கு அதுதோற்றாது. அதாவது, ஆசை ஸமமாக நிற்கின்ற காலத்தில் அறிவுக்குத்தோற்றாது.

ஆசை ஒருபொருளைக் கவரும் பொருட்டு மனஸில் ஏறுகின்ற சமயத்திலும், ஏறிநிற்கும் காலத்திலும், ஆத்மாவுக்கு ஒரு வேளை விருப்பாகவும், வேறொரு வேளை வெறுப்பாகவும் தோற்றும்.

காற்றால் அலைப்புண்ட கடலில் மேடு பள்ளங்கள் தோன்றுவது போல, ஆசையால் ஏவப்பட்ட மனஸில் விருப்பு வெறுப்புகள் தோற்றும்.

ஆசை ஸமநிலையினின்று மனஸிற் பொங்கி எழுதல் **விருப்பு** எனவும், ஸமநிலையில்நின்று வற்றிக்குறைதல் **வெறுப்பு** எனவும் அறிக. இவையே வேண்டுதல் வேண்டாமையாம்.

இது எனக்கு வேண்டும் என்ற நிலை விரும்புதல், **விருப்பு**.

இது எனக்குவேண்டாம் என்ற நிலை வெறுத்தல்,வெறுப்பு.

ஆசையின் ஒருகூறாகிய **விருப்பானது** மோஹம், மதம், ராகம், விஷாதம், தாபம், ஶோஷம், வைசித்ரியம் என எழுவகைப்படும்.

**மோஹம்** மண் பொன் பெண் என்ற விஷயங்களிலே விதிவிலக்கு விசாரியாமல் செல்லும் மயக்கம்.

**மதம்** என்றது ஆசையால் ஏவப்பட்ட மனம் விஷயங்களிலே அழுந்தி அஹங்கரித்தல்.

**ராகம்** அழுந்தின விஷயங்களில் மேன்மேலும் ஆசை பெருகுதல்.

**விஷாதம்** ஆசைப்பட்ட விஷயங்கள் கிட்டாதபொழுது ஶக்தியற்றுச் சோர்வுபெறுதல்.

**தாபம்** ஆசைபெருகித் தபித்தல்.

**ஶோஷம்** பொருளை இழந்த ஸமயத்தில் உண்டாகும் எரிவு.

**வைசித்ரியம்** இச்சித்தபொருளைப் பெற்றதின்மேல் விளையும் பூரிப்பும் அதிசயமுமாம்.



ஆசையின் மற்றொரு கூறாகிய **வெறுப்பின்** பெருக்கு அருவருப்பு, பொறாமை, பகை (விரோதம்), ஈயாமை என விரியும்.

விருப்பு வெறுப்புக்களால் பந்தித்துச், சுருக்கப்பட்டுத், தன்னைத் தான் அறியுந்தன்மையை இழந்த அறிவு **சிற்றறிவு** என்றும், **சிற்றறிவாளி** என்றும், **கிஞ்சிஜ்ஞன்** (கிஞ்சித்=சொல்ப, ஜ்ஞன்=அறிவாளி) என்றும் கூறப்படும்.

விருப்பு வெறுப்பு அற்று,அண்டாண்டகோடிகள்தோறும் நின்று,தனது பஞ்ச க்ருத்தியங்களாகிய ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹார திரோபவ அனுக்ரஹ முறைகளைப் பகவான் நடத்திவருகிறதுபோல, அவர்மயமான ஞானவானும் எத்தொழிலிற் பிரவேசித்தாலும் விருப்பு வெறுப்பற்றுச் சித்தசுத்தியோடும் ஸமத்வபுத்தியோடும் பரோபகார நினைவோடும் நடப்பன்.

விருப்பு வெறுப்பற்றுச்செய்யும் தொழில்களை **நிஷ்காம்ய கர்மம்** எனப் பெரியோர் கூறுவர்.

இதற்கு வேறுபாடான **காம்ய கர்மம்** இகலோக பரலோக இன்பங்களில் இச்சைவைத்துச் செய்யப்படுங் கர்மமாம்.

**யாண்டும்**=எந்தத் தேசத்திலும்.

**இடும்பை**=துன்பம். அஹந்தை மமதை என்னும் செருக்கால் வரும் **பிறவித் துன்பங்கள்**.

**பிறவித் துன்பங்கள்** (௧) உத்பத்தியில் கர்ப்பப்பையில் உறுத்தப்பட்டும், ப்ரஸவகாலத்தில் நெருக்குண்டும் பிறத்தலும்; (௨) ஸ்திதிகாலத்தில் அருந்தல் போருந்தலாலும், இவற்றிற்கு ஹேதுவாகிய த்ரவியம் தேடுதலாலும், அதனைப் பாதுகாத்தலாலும், நோய் மூப்பு முதலியவற்றாலும் வரும் துயரமும்; (௩) அந்த்யத்தில் ஆலையிலிட்ட கரும்பு நெருக்குண்டல் போல, மரணகாலத்தில் நாடி நரம்புகள் தோறும் பரந்திருக்கும் ஜீவனைப் பிரித்தெடுக்கும் அவசரத்தில் தோன்றும் துன்பமும்; (௪) மரணத்துக்கு அப்பால்வரும் நரகவேதனைகளுமாம்.

உத்பத்தி ஸ்திதி லயம் என்ற அவஸ்தைகளையுடைய பிறவியின்கண் மின்போலத்தோன்றி மாறி அழியும் **சிற்றின்பம்** எல்லாம் **துன்பமே** ஆனாலும், அத்துன்பத்தை ஆணவ இருளாகிய

ஆசையைப்பற்றிக் கூத்தாட்டுவிக்கும் பகவானது திரோதான ஶக்தி சுகம்போலக்காட்டும். இந்த இருள் நீங்கினோர்க்குச் சிற்றின்பம் துன்பமென்றே விளங்கும்.

சத்குருவின் க்ருபைபெற்ற பக்குவி பிறவித்துன்பங்களில் நின்றும் சிற்றின்பமோகங்களில் நின்றும் விலகிப் பேரின்பசுகத்தை அடைவான் என்பதுபற்றி, "அடிசேர்ந்தார்க்கு யாண்டும் இடும்பை இல" என்றார்.

இனி, மேல்வருங்குறளில் வேண்டுதல் வேண்டாமை என்ற விகல்பநிலை மூல இருளாகிய ஆணவமலத்தின் பேதங்கள் என்றும், நல்வினை தீவினைகள் ஆணவமலத்தைச் சார்ந்து நிற்கும் என்றும், இவற்றால் வரும் ஸம்ஸார துக்கங்களை நீக்கும்பொருட்டு ஈஸ்வரார்ப்பண கர்மம் அவஸ்யமென்றும், விளக்கினார்.

---

## ௫. இருள்சேரிருவினையுஞ் சேரா விறைவன் பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

அந்வயம்:—இறைவன் பொருள் சேர் புகழ் புரிந்தார் மாட்டு, இருள் சேர் இருவினையுஞ் சேரா.

அர்த்தம்:—பரமேஸ்வரனது மோக்ஷநிலை என்னும் பொருளைப்பற்றி நிற்கும் ஈஸ்வரார்ப்பண சிந்தனையை அனுஷ்டிக்கின்றவர்களிடம், ஆணவ இருளைப்பற்றி நிற்கும் நல்வினை தீவினைப் பயன்கள் வந்து பொருந்தா.

பொருள் என்ற பதம் அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கு புருஷார்த்தங்களையும் குறிக்குமாயினும், முதல் மூன்றும் அநித்யமாதலின், ஈண்டு மோக்ஷம் என்றே அறிய வேண்டியது.

இறைவன் பொருள்=பரமேஸ்வரனது மோக்ஷநிலை.

(இறைவன்) புகழ் புரிந்தோர் மாட்டு=பகவத் ப்ரீதிசெய்வோர்க்கு; ஈஸ்வரார்ப்பண சிந்தை பெற்றோர்க்கு.

யான் எனது என்ற அகந்தை மமதையை மிகவும் விட்டும், புண்யகர்மங்களின் பலன்களை விரும்பாமலும், எனக்கு வகுத்த கர்மங்கள் யாவும் பரமேஸ்வரனது பஞ்ச க்ருத்யங்களுக்



குட்பட்ட கர்மங்கள் என்றும், இவற்றைச்செய்யும் கர்மேந்த்ரியங்கள் யாவும் அவருடையதே என்றும் இருப்பது பகவத் ப்ரீதி எனப்படும். இதுவே ஈச்வரார்ப்பண கர்மம் (ஈஸ்வரனுக்கு அர்ப்பித்த கர்மம்.) இதற்குப் பர்யாயநாமம் நிஷகாம்ய கர்மம்.

ஒருவனைப்பற்றி மற்றொருவன் மதிப்பாகச் சிந்தித்தலையும் பேசுதலையும் புகழ் என்பர். இவ்வித சித்தமும் வாக்கும் ப்ரீதியைப்பற்றி நிற்பதால், இறைவன் புகழ் பகவத் ப்ரீதி எனப் பொருள்படும்.

இருள் என்றது அறிவை மயக்கியும் மறைத்தும் நிற்கின்ற ஆணவம். இது துடின தூக்கக் கோலங்களை உண்டுபண்ணி அறிவின் தெளிவைக் கெடுப்பதால், விஷம் என்றும், மலம் என்றும் பெயர் பெற்றது இதற்கு வேறு நாமங்கள் அவா, அடங்காமை, மறப்பு, மூடம், மடமை, அறியாமை, அஜ்ஞானம், தமஸ், அவித்யா (அவித்தை).

ஒடுக்கத்தில் அணுரூபமாய் (அதிநுட்பமாய்). நின்ற ஆணவம் மனசில் ஏறி அறிவிற் தோன்றும்பொழுது, நான் என்ற ஜீவ அஹங்காரம் தோன்றும். தேகமே நான் ("அஹம்") என்று ஜிவிக்கின்ற தேகவான் அஹங்கரிக்கும் வேளையில், தேகத்தைப்பற்றியே நினைவுகளையும் செயல்களையும் விரித்து, அநித்ய காரியங்களைத் தேடித், துன்பத்தை அடைவான்.

இந்த ஆணவ அஹங்காரம் தன்னைச் சூழ்ந்திருக்கும் விஷயங்களைப் பற்றி மமகாரமாய் விரியும்.

மீளவும் மமகாரம் அஹங்காரத்தில் ஒடுங்கி, அஹங்காரம் ஆணவமலத்தில் ஒடுங்கும்.

இதுவே ஆணவ இருளின் தோற்ற ஒடுக்க முறையாகும். தோன்றி ஒடுங்குங் கால மத்தியில் ஆணவம் விஷயங்களைப் பற்றி விருப்பாகவும் வெறுப்பாகவும் பேதப்படும், அலைந்து தவிக்கும், விருப்பு வெறுப்பாகும், வெறுப்பு விருப்பாகும், பிண்ணார்த் தூங்கும், தூங்கி எழுந்து முன்போல மனசிலும் புத்தியிலும் சித்தத்திலும் ஐம்பொறிகளிலும் மற்றும் கரணங்களிலும் திரிந்து ஆத்மாவை வதைக்கும்.

இந்தத் துடின தூக்கக்கோலங்கள் எல்லாம் இருளின்

காரியங்கள்.

இவற்றிற்குக் காரணமாகிய இருள் ஜீவாத்மாவோடு இரண்டறக் கலந்து நிற்பதால், பத்ததசையில் (நான் எனது என்ற பந்தங்களோடு திரியும் நாளில்) அதைப் பிரித்தறிவது அசாத்தியம். முக்திதசையில் சூர்யனைப் போலப் ப்ரகாசிக்கும் அறிவின்முன் நில்லாது. எனவே, காரண இருளை அறியக்கூடாதாயினும், அதன் கார்யங்களாகிய விருப்பு வெறுப்பையும் அஹந்தை மமதையும் அறியலாம்.

**இருள் சேர் இருவினை** என்றது ஆணவமலத்தோடு கூடியிருக்கின்ற நல்வினை தீவினையாகிய கர்மமலம்.

**கர்மமலம்**=செயலைச் செய்விக்கும் தீயவஸ்து. இந்தக் கர்மமலத்தை நேரே அறியக்கூடாது. அதன் கார்யமாகிய நல்வினை தீவினைகளால் அறியலாம்.

**வினை** என்றது செயல்.

**நல்வினை** (புண்ய கர்மம்) என்றது உயிர்க்கு உறுதியென விதித்தவற்றைச் செய்தலும், விலக்கியவற்றைச் செய்யாமையுமாம்.

**தீவினை** (பாப கர்மம்) என்றது விதித்தவற்றைச் செய்யாமையும், விலக்கியவற்றைச் செய்தலுமாம்.

தீவினைகள் கர்மமலத்தின் காரியம் என்பதற்கு ஆக்ஷேபம் இல்லை. ஆனால் நல்வினைகளைக் கர்மமலத்தின்காரியம் என்னலாமோவெனில், இகலோக பரலோக சிற்றின்பங்களில் இச்சை வைத்துச் செய்யப்பட்ட காம்ய கர்மங்கள் ஆத்மாவுக்குப் பிறவித்துன்பங்களை இயற்றுவதால், அவையெல்லாம் மலஸம்பந்தம் பெற்றவையென்று அறியவேண்டும்.

நிஷ்காம்ய கர்மங்கள் பரமேஶ்வரனுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டதால், அவற்றினின்று துன்பங்கள் உண்டாகா. ஆதலால், அக்கர்மங்களைச் செய்வோன் மலஸம்பந்தியல்லன் என்று அறிக.

கர்மமலமானது மனம் வாக்குக் காயம் என்ற த்ரிகரணங்களால் கர்மங்களை வெளிப்படுத்தும்.

**மனம்** என்றது நினைக்கும் கருவி. கண்டஸ்தானத்தில்



நின்று தேகம் எங்கும் பரவி மூளையைப் பற்றி நினைவுகளை உண்டுபடுத்தும்.

**வாக்கு** என்ற கர்மேந்திரியம் நாபியில்நின்று வாய்வரைக்கும் சஞ்சரித்து நினைவுகளுக்கு ஏற்றபடி சொற்களை ப்ரவாகிக்கும்.

**காயம்** என்றது பாணி பாதம் பாயிரு உபஸ்தம் என்னும் மற்றைய கர்மேந்திரியங்களுக்கு இருப்பிடமாகிய ஸ்தூலக்கை கால் குதம் குய்யமாகும்.

மனம் வாக்குக் காயங்களால் இப்பிறவியில் செய்யப்பட்ட நல்வினை தீவினைகள் **புதுவினைகள்** எனப்படும். இவை வித்துப்போல் நின்று வரப்போகிற பிறவியொன்றில் பலனைத் தருவதால் **ஆகாம்ய கர்மம்** எனப் பெயர்பெற்றன. (ஆகாம்ய=வரப்போகிற)

முற்பிறவிகளிற் செய்தவினைகளைப் **பழவினைகள்** என்பார்கள். **பழவினைப் பலன்கள்** புசிப்புக்கு வராதவரையில் **அத்வாக்கள்** ஆகிய தொனி ரூப ஆகாஶத்திலும் புவனங்களிலும் ஸ்தூல தேகங்களுக்குக் காரணமான ஸூக்ஷ்ம தத்வங்களிலும் அனுக்ரஹஶக்தி அம்ஶங்களாகிய நிவிர்த்தி முதலிய பஞ்ச கலைகளிலும் அளவிறந்து கட்டப்பட்டிருப்பதால், **சஞ்சித கர்மம்** எனப்படும். (சஞ்சித=குவிக்கப்பட்ட)

சஞ்சித கர்மத்தில்நின்று பக்வப்பட்டு ஓர் பிறவிக்கு ஆரம்பமாய் வந்தபலனையும், அப்பிறவியில் புசிப்புக்குப் பேறு இழவு, இன்பம் பிணி, மூப்பு சாக்காடு என்று வந்த அறுவகைப் பலன்களையும் **ப்ராரப்த கர்மம்** என்று சொல்வார்கள். (ப்ராரப்த=ஆரம்பமாகின்ற)

முற்பிறவிகளில் ஒன்றில் செய்த கர்மங்கள் இப்பிறவியையும் இப்பிறவிக்குரிய சுக துக்க போகங்களையும் விளைவிக்கும்.

வித்தினிடத்தில் விருக்ஷம் உண்டாகி மீளவும் விருக்ஷத்தில் வித்து உண்டாவது போலவும், முட்டையிற் பறவை உண்டாகி மீளவும் பறவையில் முட்டை உண்டாவது போலவும், உடலில் நின்று செயலும் (தேகத்தில்நின்று கர்மமும்) செயலில் நின்று உடலும் அநாதியே காரண கார்யத் தொடர்ச்சி

யாய் வரும்.

அறுவகைப் பலன்கள் ஆகிய பேறு இழவு, இன்பம் பிணி, மூப்புச் சாக்காடு என்பவற்றைக் கடவுள் கற்பித்தலுக்கும் ஆத்மாக்களோடு கூட்டி வைத்தலுக்கும் நியாயம் ஆத்மாக்களை வாதிக்கும் ஆணவ கர்ம மாயா மலங்களைக் கழிப்பதற்கே.

**பேறு** என்றது பொருட்சார்பு உயிர்ச்சார்பு ஆகிய இரண்டையும் பெறுதல்.

**இழவு** என்றது இவற்றை இழத்தல்.

**இன்பம்** என்றது ஆசை நிறைவேற்றத்தின்கண் தோன்றும் மனோ ரம்யம், சுகம்.

**பிணி** என்றது நோய்.

**மூப்பு** என்றது ஆயுள்.

**சாக்காடு** என்றது மரணம். சாக்காடு (காடு தொழிற் பெயர் விகுதி)=சாதல்.

இந்த அறுவகைப் பலன்களும் ஜடப்பொருள் (பிரஜ்ஞை இல்லாத கார்யங்கள்.) ஆதலால் இவை கர்மம் செய்தவனைத் தேடிப் பிடிக்க மாட்டா. கர்மியும், இழவு பிணி மூப்பு சாக்காடை விரும்பான். பேறையும் இன்பத்தையும் விரும்பினும் இவற்றைத் தானே அடையும் சக்தியற்றவன். இவனுக்கு இவை சம்பவிக்கும்பொழுது அந்தந்த சமயத்திற்றான் புதிதாக உண்டானவை என்றும் கொள்ளக்கூடாது.

முன் ஜன்மங்களிற் செய்து கட்டப்பட்ட சஞ்சித கர்மத்துள் பக்வமான பராரப்த பலன்களைப் பரமேஸ்வரனே கர்மியுடன் கூட்டிவைப்பார்.

ஜீவாத்மா தன் சூக்ஷ்ம சரீரத்தோடு மாதாவின் கர்ப்பாசயத்தில் அணுவாகிச் சென்று தங்கி வளரும் பொழுது, அவனுக்குப் பக்வமான ப்ராரப்த பலன்கள் பகவானது ஆஜ்ஞையால் அமையும். மேலும், விதித்த காலங்களில் இந்த ஆறு அனுபவங்களும் முற்கூறிய ஆகாஸம், புவனங்கள், சூக்ஷ்ம தத்வங்கள், பஞ்சகலைகள் என்ற அத்வாக்களால் இவனை வந்து பொருந்தும். இதுவே **இருவினைச் சேர்க்கை**.

இருள்பற்றிய **அவித்யா மார்க்கம்** என்றதில் ஜீவாத்மா நின்றால், பாபங்களைச் செய்து நரகவேதனைகளை அனுபவிக்கும்.



இருளும் ஒளியும் உள்ளதும், வேதாகமங்களிற் கூறிய உபாஸநாகாண்டம் உள்ளதுமாகிய **வித்யா மார்க்கம்** என்றதில் நின்று விதித்த புண்யங்களை விருப்புடன் செய்தால், ஸ்வர்க்காதி சிற்றின்பங்களை அனுபவிக்கும்.

இஷ்ட காம்யார்த்தமாகக் கர்மங்களைச் செய்தும் தேவதைகளை உபாசித்தும் பெற்ற சிற்றின்ப போகம் யாவும் அநித்ய சுகம். மேலும் புனர்ஜன்மத்தையும் கொடுக்கும்.

அவித்யாமார்க்கமும் வித்யாமார்க்கமும் ஜனன மரண வேதனைகளையும், அவற்றோடு தோன்றி அழியும் சிற்றின்பம் என்ற துக்கங்களையும் பற்றிநிற்பதால் **ப்ரவிர்த்தி மார்க்கம்** எனப்படும். எனவே, ப்ரவிர்த்தி மார்க்கம் துக்க ப்ரவிர்த்தி மார்க்கம் என்று அறிக.

வேதாகமங்களில் கர்மோபாஸநா காண்டங்களின் பின் போதிக்கப்பட்ட ஒளிரூபமாகிய தத்வஞானத்தை அனுசரிப்பவர்கள் சம்சார துக்கங்களில்நின்று விடுபடுவதால், அவ்வழி **நிவிர்த்தி மார்க்கம்** என்றும், **மோக்ஷ மார்க்கம்** அல்லது **முத்திநெறி** என்றும் சொல்லப்படும். இதுவே **இருவினைசேரா மார்க்கம்—இறைவன் பொருள் சேர் மார்க்கம்**.

ஈஸ்வரார்ப்பண கர்மம் முத்திக்கு அவஸ்யமாயிருப்பதாலும், சகல கர்மங்களிலும் ஸ்ரேஷ்டமாயிருப்பதாலும், **க்ருதக்ருத்யம்** எனப்படும்.

இந்தக் கிருத க்ருத்யத்தின் பெருமையை இக்குறளில் விளக்கி, மேல்வருங் குறளால் ஐம்பொறியடக்கமும் பொய்யறிவு நீக்கமும் நிவிர்த்தி மார்க்கத்திற்கு இன்றியமையாதன என்று விளக்குகின்றார்.

---

**௬. பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீ ரொழுக்க**
**நெறிநின்றார் நீடுவாழ் வார்.**

பதச்சேதம்: பொறி வாயில் ஐந்து [புலன்களை] அவித்தான் பொய் தீர் ஒழுக்கம் நெறி நின்றார் நீடு வாழ்வார்.

**அர்த்தம்**: தத்தம் பொறிகளின் வாசல்களில் ஐந்து

புலன்களை மறுத்தும், **பொய்யொழுக்கங்களை** நீக்கியும், வாழுகின்ற ஞான குருவின் உபதேசக் கிரமத்தில் நின்றவர்கள் மோக்ஷத்தைப் பெற்று நெடுநாள் சுகசொரூபியாய் இருப்பார்கள்.

**பொறி** என்றது மெய் வாய் கண் மூக்குச் செவி என்ற சூக்ஷ்மரூபக் கருவிகளை.

தத்தம் விஷயங்களாகிய ஊறு சுவை ஒளி நாற்றம் ஓசை என்னும் புலன்களைப் பொறிகள் ஸ்தூல தேகத்தில் நின்று பஹிர் (வெளி) முகமாய் அறிவதால், **புறக்கரணங்கள்** என்றும், **பாஹ்யேந்த்ரியங்கள்** என்றும் கூறப்படும்.

புத்திக்குச் சஹாயமாயிருந்து பஞ்ச விஷயங்களை (புலன்களை) அறிவதால், இவை **புத்தியிந்த்ரியங்கள்** என்றும், **ஞானேந்த்ரியங்கள்** என்றும், கூறப்படும்.

**மெய்** என்ற பொறி (ஞானேந்த்ரியம்), ஸ்தூல தேகம் எங்கும் பரந்துநின்று, ஊறு (ஸ்பர்ஶம்) என்ற புலனை அறியும்.

**வாய்** என்ற பொறி, நா அண்ணம் இதழ் உட்கன்னம், என்ற ஸ்தூல பாகங்களிற் பரந்துநின்று, சுவை (ரஸம்) என்ற புலனை அறியும்.

**கண்** என்ற பொறி, ஸ்தூலக் கண்கள் வாயிலாக ரூபம் என்ற புலனை அறியும்.

**மூக்கு** என்ற பொறி, ஸ்தூல நாசித்துவார ப்ரதேசங்களில் நின்று ப்ராணவாயுவின் ஸஹாயத்தினால், நாற்றம் (கந்தம்) என்ற புலனை அறியும்.

**செவி** என்ற பொறி, ஸ்தூலச் செவிகள் இருக்கும் தசையால் இயற்றப்பட்ட யந்த்ரங்களிலிருந்து, ஓசை (சப்தம்) என்ற புலனை அறியும்

ஒருபொறி தன் புலனையன்றி மற்றொரு புலனை அறிய மாட்டாது.

ஆனால், மனம் என்ற அந்தஃகரணத்துக்கு புறக்கரணங்களாகிய ஐம்பொறிகள் அறிந்த பொருள்கள் யாவற்றையும் பற்றிப் பிடிக்கவும், மேன்மேலும் பாவனை செய்யவும், ஶக்தியுண்டு. மனம் பற்றினதை புத்தி விசாரிக்கும்.



மனசுக்கு பொறிகள் வாசல்களாய், அல்லது வழிகளாய், இருப்பதால் **பொறிவாயில்** என்றார்.

எனவே, ஐவகைப் புலன்களைத் தத்தம் பொறிகள் மனசுடன் கூடிப் பற்றாமல் இருப்பதே **ஐந்து அவித்தல்** (ஐம்புலன்களை அவித்தல்), **ஐம்பொறி அடக்கம்** எனப்படும்.

ஸம்ஸ்க்ருதத்தில், ஐம்பொறி அடக்கம் என்னும் அப்யாஸத்தைத் **தமம்** என்றும், **பாஹ்யேந்த்ரிய நிக்ரஹம்** என்றும், மனம்பற்றாதிருத்தல் என்ற பழக்கத்தை **ஶமம்** என்றும், **மனோ நிக்ரஹம்** என்றும், சொல்வார்கள்.

ஐம்பொறிகள், தத்தம் விஷயங்களைத் தேடி எக்காலமும் திரிவதால், **ஐம்புல வேடர்** என்று ஞான ஶாஸ்த்ரங்களிற் கூறப்பட்டுள்ளன.

ஐம்புல அவிப்பிற்கு உற்றதுணை **பொய்தீர் ஒழுக்கம்**.

**பொய்யொழுக்கம்** ஆவது **மித்யாசாரம்** (பொய்=மித்தை, அசத்பொருள்.; ஆசாரம்=நடை.)

பொய் ஒழுக்கத்தின் ப்ரதான கொள்கை (மதம்) தோன்றி யழியும் தேகத்தை நான் என்று இருத்தல்.

இந்தத் **தேகவான்** மண் பொன் பெண் முதலிய அழியும் பொருள்களைப் பரம்பொருள் என்று எண்ணி, இவற்றைப் பெறுவதற்கு அநேக ப்ரயத்நங்கள் செய்து, இவ்வாழ்க்கைக்குரிய சிற்றின்ப சுகங்களைவிட மேலான சுகங்கள் இல்லையென்று கருதி, மோசம்போவான். வேறொருவித தேகவான் கடன்காரர் பயத்தால், அல்லது சத்ருமித்ர கோபத்தால், அல்லது பொருள் கீர்த்தி முதலியவற்றைஇழந்த துக்கத்தால், அல்லது நோய்களால் வாதிக்கப்பட்டுத் தோன்றின காய க்லேசத்தால், இவ்வாழ்க்கையை விட்டுப் **போலித் துறவி** ஆவான்.

துறவு பூண்டபிறகு, இவன் சிவயோகஞ் செய்வதுபோல வாக்கையும் காயத்தையும் அடக்கி ஒரு பக்கத்திலிருக்கும் பொழுது, முன் நடந்த கார்யங்களையும், நிகழ்காலத்தில் தான்படும் அவதிகளையும், எதிர்காலத்தில் தான் எப்படி இருக்கவேண்டும் என்பதையும் மனோராஜ்யஞ் செய்து துன்பப்படுவான். இப்படிப்பட்ட போலித் துறவியை பகவான்

பகவத்கீதை, 3. 6. இல், கீழ்வருமாறு **மித்யாசார ஸங்ந்யாஸி** என்று கண்டித்தார்:—

“எவன் கர்மேந்த்ரியங்களை ஒடுக்கி, மனசால் இந்த்ரியார்த்தங்களை நினைக்கின்றானோ, அந்தவிமூட புத்தியுள்ளவன் மித்யாசாரன் என்று கூறப்படுகின்றான்.”

இதற்கு அடுத்த மந்த்ரத்தில் இவனிலும் வேறான **ஸதாசார ஸங்ந்யாஸி** என்பவனைக் கீழ்வருமாறு கூறினார்:—

“அர்ஜுந, மனசால் இந்த்ரியங்களை ஒடுக்கிக், கர்மயோகம் என்ற நிஷ்காம கர்மாநுஷ்டானத்தைக் கர்மேந்த்ரியங்களால் எவன் சங்கமற்றுத் தொடங்கிச் சாதிக்கின்றானோ, அவன் இவனிலும் வேறு.”

சதாசாரம் என்ற நிலையைப் **பொய்தீர் ஒழுக்கம்** என்றார். அதாவது, பொய்ப்பொருட் பற்றுக்களை அறுத்து, மெய்ப்பொருளாகிய பரமாத்மாவை த்ரிகரணங்களாலும் வழுவாது வழிபடுதலாம்.

பொய்தீர்க்கும் அநுஷ்டானங்கள் கேட்டல் (ஶ்ரவணம்,) சிந்தித்தல் (மனனம்,) தெளிதல் (நிதித்யாஸநம்,) ஸமாதி கூடல் என நால்வகைப்படும்.

**கேட்டல்** ஆவது முற்பிறவிகளிற் செய்த நற்கர்மங்களால் ஈஶ்வரார்ப்பண புத்தி ப்ரபலமானவர்கள் ஞான குருவைப் பெற்று அவரது பல யுக்திகளால் போதிக்கப்பட்ட பதி பசு பாச லக்ஷணங்களை ஶ்ரவணஞ் செய்தல்.

ஶ்ரவணஞ் செய்த உண்மைகளை மீட்டும் மீட்டும் மனஸில் உறுதிப்படுத்துதல் **சிந்தித்தல்,** அல்லது மனனஞ் செய்தல், எனப்படும்.

சிந்தித்த பாடங்களிற் தோன்றும் ஸம்ஶய விபரீதங்கள் அற்று நிஶ்சய புத்தியோடு நிற்றல் **தெளிதல்** எனப்படும்.

**ஸமாதி கூடல்** என்றது ஆதி என்ற மனசை ஸமப்படுத்தி நினைப்பு மறப்பற்றுத் தன்னந் தனியாய் நிற்றல்.

ஐம்பொறி அடக்கத்தாலும் பொய்தீர்க்கும் நெறிகளாலும் மோக்ஷம் பெற்ற ஞான குருவின் உபதேசக் கிரமத்தில் நின்ற சீடன் அந்தச் சம்பத்தைத் தானும் அடைவான் என்று



ஆறாங்குறளில் போதித்து, மேல்வருங் குறளில் மோக்ஷத்துக்கு லக்ஷணம் துக்க நிவிர்த்தி என்றார்.

---

## எ. தனக்குவமை யில்லாதான் தாள் சேர்ந்தார்க்<br>மனக்கவலை மாற்ற லரிது. [கல்லான்

பதச்சேதம்: தனக்கு உவமை இல்லான் தாள் சேர்ந்தார்க்கு அல்லால் மனம் கவலை மாற்றல் அரிது.

அர்த்தம்: தனக்கு ஒப்பற்ற ஞான ஸ்வரூபியின் பாதாரவிந்தத்தைப் பொருந்தினவர்களைவிட ஏனையோர்க்குப் பல ஆசைகளால் வந்து ஏறும் கவலைகளை நீக்குதல் அசாதயம்.

**கவலை** என்பது இது சரிவருமோ சரிவராதோ என்னும் ஆத்திரம்.

சுக கார்யங்களைப் பற்றிச் சிந்திக்கும்பொழுது உள்ள சுகம் போகுமோ இல்லாதசுகம் வருமோ என்றும், அசுக கார்யங்களைப் பற்றிச் சிந்திக்கும்பொழுது உள்ள அசுகம் போகுமோ வேறு அசுகம் வருமோ என்றும், இவ்வித இன்ப துன்பங்களை எவ்வழிகளால் பெறலாம் நீக்கலாம் என்றும், யோசித்துச் சலனப்படும் மனம் **கவலையுற்ற மனம்** ஆம் இது பதறிக் கொண்டே இருக்கும்.

பஞ்ச க்ருத்யங்களை நடத்திவரும் பரமேஶ்வரனே ஒவ்வொருவனுக்கும், அவனவன் கர்மத்துக்கு ஏற்றபடி, தநு கரண புவன போகங்களைக் கொடுத்திருக்கிறார் என்றும், அவை பிரியவேண்டிய காலத்திற் பிரித்து வைப்பார் என்றும், மீளவும் முக்தி பெறும்வரையில் கூட்டியும் பிரித்தும், அப்பாலும் கருணையோடு உதவுவார் என்றும், நிச்சயித்த விவேகிகளுக்கு **மனக்கவலை** இராது.

எங்கள் அருமைத் தாயாகிய, ஒளவை நல்வழியில்,—

“வருந்தியழைத்தாலும் வாராத வாரா<br>பொருந்துவன போமினென்றாற் போகா—விருந்தேங்கி<br>நெஞ்சம் புண்ணாக நெடுந்தூரம் தாம் நினைந்து<br>துஞ்சுவதே மாந்தர் தொழில்”—

என்று உபதேசித்தார்.

மேலும், ஔவையார் ஓர் அவசரத்தில் தமது தாயாருக்கு அருளிய பாடல்,—

"இட்டமுடன் என்தலையில் இன்னபடி யென்று எழுதி
விட்ட சிவனும் செத்துவிட்டானோ—முட்டமுட்ட
பஞ்சமேயானாலும் பாரமவனுக்கு அன்னாய்
நெஞ்சமே அஞ்சாதே நீ," என்பதும்,

எங்கள் ஶாஸ்த்ர கர்த்தாவாகிய திருவள்ளுவரும், தமது தாயாருக்கு,—

"எவ்வுயிருங்காக்க ஒரு ஈசனுண்டோ இல்லையோ,
அவ்வுயிரில் நான் ஒருவன் அல்லவோ—வவ்வி,
அருகுவது கொண்டிங்கு அலைகுவதேன் அன்னே,
வருகுவது தானேவரும்," என்று சொன்னார் என்பதும்

ஐதிகம்.

சிற்றறிவுகள் பலவானாலும் நிர்க்குணநிறைவாகிய பேரறிவு ஒன்றே என்பதுபற்றியும், எவன் சிற்றறிவைப் பேரறிவாக்கினானோ அவனுக்கு உவமையில்லை என்பதுபற்றியும், தனக்குவமை யில்லாதான் என்றார்.

ஏழாவது குறளில் மோக்ஷம் துக்க நிவிர்த்தி என்றும், இது ஞானகுருவை அண்டியே பெறத்தக்கது என்றும், விளக்கி, எட்டாவது குறளில் இல்லறம் துறவறம் என்ற சமுத்ரங்களை மயக்கமின்றித் தாண்டுவதற்கும் அவரது அநுக்ரஹம் அவசியம் என்றும் உபதேசித்தார்.

---

## அ. அறவாழி யந்தணன் தாள் சேர்ந்தார்க்கல் பிறவாழி நீந்த லரிது. [லால்

பதச்சேதம்: அறம் ஆழி அந்தணன் தாள் சேர்ந்தார்க்கு அல்லால் பிற ஆழி நீந்தல் அரிது.

அர்த்தம்: சமுத்ரம் போன்ற செந்தண்மை சொரூபியாகிய ஞானவானது அனுக்ரஹத்தைப் பொருந்தினார்க் கல்லது, அத்தண்மை பொருந்தப்பெறாத இல்லற துறவற சமுத்ரங்களைக் கடக்கமுடியாது.



ஈண்டு அறம் என்றது உபஶாந்தம், யாவரும் சுகமாக வாழவேண்டும் என்ற அன்புநிலை.

அந்தணன்=அழகிய ("அம்") தண்மை (குளிர்ச்சி) யை உடைய புத்தியையும் வாக்கையும் பெற்றவன். சிறந்த சாந்தியைத் தரித்தவன். இவனே ஸ்வய ப்ராஹ்மணன்.

நாயனார் அறம் என்ற பொருளை செந்தண்மையாகிய ஜீவ காருண்யம் என்றும், சித்த சுத்தி யோடிருத்தல் என்றும், கீழ் வருமாறு போதித்தார்,—

"அந்தண ரென்போர் அறவோர், மற்றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுகலான்." 3. 10.

"மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறம்
ஆகுல நீர பிற." 4. 4.

எனவே, ஈண்டு அறம் என்றது பற்றற்ற பூரண அன்பு எனக் கொள்க.

அறவாழி=பேரன்பு என்ற ஆழி, சமுத்ரம்.

பிறவாழி=முன்சொன்ன அறவாழி அல்லாத ஆழி. அதாவது, செந்தண்மை பூண்டு ஒழுகாத இல் வாழ்வும் துறவும்.

இந்தக் குறளில் பேரன்பைப் பெற்ற ஞானவானது உபதேசங்களையும் சதாசாரங்களையும் உணர்ந்தவனே இல்வாழ்வுக்கும் துறவுக்கும் உரிய டம்பங்களிலும் வேறுபல மோகங்களிலும் நின்று தப்புவான் என்று கூறி, அடுத்த குறளில் நிர்குண வஸ்துவாகிய பரமாத்மாவின் அஷ்டகுண திருவருளை த்யானிக்காதவன் பிறப்பின் முக்ய ப்ரயோஜனமாகிய பேரறிவையும் பேரன்பையும் பெறமாட்டான் என்று போதித்தார்.

---

## கூ. கோளில் பொறியிற் குணமிலவே எண்குணத் தாளை வணங்காத் தலை. [தான்

பதச்சேதம்: கோள் இல் பொறியில், குணம் இல எட்டு குணத்தான் தாளை வணங்காத் தலை.

அர்த்தம்: தத்தமக்குரிய குணங்களைக் கொள்ளாத பொறி

களைப்போல, அஷ்ட லக்ஷணங்களோடு இருக்கும் பகவானது திருவருளை வணங்காத தலையும் குணமற்றனவாம்.

**கோள்**=கொள்ளுதல்; தத்தம் விஷயங்களை அறியும் வல்லபம்.

**கோளில்**=க்ரஹன ஶக்தியில்லாத.

**கோளில் பொறி** என்றது ஒளியையும் ரூபத்தையும் க்ரஹிக்காத கண்ணும், வாசனையை அறியாத மூக்கும், ருசியை அறியாத வாயும், சத்தத்தை அறியாத காதும், ஸ்பர்ஶத்தை அறியாத மெய்யுமாம்.

**பொறியில்**=பொறிகளைப் போல

**குணமில**=பயனில்லை.

**எண்குணம்**. நிர்க்குண வஸ்துவாகிய பரமாத்மா ப்ரக்ருதியுட் புகுந்து, ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரம் திரோபவம் அனுக்ரஹம் என்ற பஞ்ச க்ருத்யங்களை நடத்துமாறு நாநாவித ஶக்திகளைத் தனது பராஶக்தியில் நின்று தோற்றிவித்தது.

சத் சித் ஆனந்தம் என்ற அமல ஶக்திகளை பரமாத்மாவின் முக்ய **ஆத்ம குணங்கள்** என்று பெரியோர் கூறுவர்.

**ஸத்** என்றது எக்காலமும் தனது ஆத்ம ஸ்வரூபத்தில் நின்று மாறாதிருத்தல்.

**சித்** என்றது பேரறிவு ரூபமாயிருத்தல்

**ஆனந்தம்** என்றது பேரன்பு ரூபமாயிருத்தல்.

ஜீவாத்மாக்களை உத்தாரணஞ் செய்யும்பொருட்டு, இந்த த்ரிவித ஶக்திகள் ஒன்று கூடிய அவசரத்தில்நின்று விஜ்ஞான ஶக்தி (பிரித்து அறியும் ஶக்தி) யும், இச்சா ஶக்தியும், க்ரியா ஶக்தியும் தோன்றின. இவை ஆறும் ஸ்ருஷ்டி முதலிய க்ருத்யங்களுக்கு **ஆதாரஸக்திகள்**. இவற்றுடன் ஸ்வதந்த்ரத்தையும் அனந்தஶக்தி என்றதையும் சேர்த்துப் பரமாத்ம குணங்களை எட்டாகக் கூறுதல் பெரியோர் வழமை.

"அனந்தஶக்தி" என்ற ஸமாஸபதம் கணக்கற்ற நாநாவித ஶக்திகளைக் குறிக்கும். இவற்றை எல்லாம் ஒரு குணக் கூட்டமாக எடுத்ததால், **எண் குணத்தான்** என்ற பதங்கள் சௌகர்ய அழைப்பு வார்த்தை ஆயிற்று.

பரமாத்மாவின் கணக்கற்ற அமல ஶக்திகளை எண்குணங்களாக வகுத்ததுபோல, ப்ரக்ருதியின் அநேக மிஶ்ர(கலப்புள்ள) மல ஶக்திகள் முக்குணங்களாகப் பிரிக்கப்பட்டன. இவற்றின் லக்ஷணங்களை பகவற்கீதை அதி. ச, ஶ்லோகம் கஉ க்குரிய ராமநாதீய பாஶ்யத்தில் காண்க.



**தலை**, ஜாக்ரத அவஸ்தைக்கும் விசாரணைக்கும் த்யானத்துக்கும் உரிய தத்வங்களை உடைத்தாயிருப்பதால், வணக்கத்துக்கு விசேஷமாயிற்று.

ஆத்மா, ஜாக்ரத அவஸ்தையில், புருவமத்தியிலிருந்து புத்தி விசாரித்ததை அறியும். ஆக்ஞா சக்ரத்திலும் சந்த்ர மண்டலத்திலும் வீற்றிருந்து ஆத்மா த்யானிக்கும், ஶாந்தியைப் பெறும்.

புருவமத்தியும் ஆக்ஞா சக்ரமும் சந்த்ர மண்டலமும் ஜடப்பொருளாகிய தலையில் இருப்பதால், பாராட்டப்பட்டது.

---

**க0. பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தா**
**ரிறைவ னடி சேரா தார்.**

அந்வயம்: இறைவன் அடி சேர்ந்தார் பிறவி பெருங்கடல் நீந்துவர், சேராதார் நீந்தார்.

அர்த்தம்: பகவானுடைய திருவருளைச் சேர்ந்தவர்கள் பிறவி என்னும் பெருஞ் சமுத்ரத்தைக் கடப்பார்கள். அதனைச் சேராதவர்கள் கடக்கமாட்டார்கள்.

பரமேஸ்வரனுடைய திருவருளை அன்போடு வணங்கி அதனோடு ஒன்றுபட்டு (ஐக்யமாகி) இருக்கின்றவர்கள், பிறப்பு இறப்பு என்ற அவஸ்தைகளில்நின்று விடுபட்டு, ஸதாகால ஶாந்தியோடு வாழ்வார்கள் என்பது கருத்து

---

## உம். அதிகாரம்.

## வான்சிறப்பு.

**வான்** என்றது ஆகாசம், **சிறப்பு** என்றது மாட்சிமை. ஆகாசத்தின் மிஹிமையை இந்த அதிகாரத்தில் விளக்கினார்.

யாவற்றையும் கடந்துள்ள பொருளாகிய **கடவுளைச் சிதாகாச ஸ்வரூபி** என்று மஹான்கள் கூறுவார்கள்.

**சிதாகாசம்** என்ற ஸமாஸ பதம் சித் ஆகாசம் என்று விக்ரஹப்பட்டு (பிரிக்கப்பட்டு), **பேரறிவான திவ்ய** (ப்ரகாச) **வஸ்து** என்று பொருள்படும்.

ஸ்ருஷ்டி ஆரம்பத்தில் இந்தப் பரம்பொருளின் திருவருள் (பராஸக்தி) ப்ரக்ருதியுட் புகுந்து, **மனாகாசம்** என்னும் **மாயையைத்** தடிக்கச் செய்து, **பூதாகாசம்** என்ற பரப்பை மாயையில் நின்று விரித்தது. இவ்வாறு விரிக்கப்பட்ட பூதாகாசம் அண்டகோடிகளுக்கு இருப்பிடமாயிற்று.

இந்தப் பூதாகாசத்தில்நின்று சூர்ய சந்த்ராதி மண்டலங்களும் ஸப்த மேகங்களும் மின்னலும் மழையும் தோன்றின.

இவற்றால் பூலோகத்தில் வசிக்கும் ப்ரஜைகள் அநேக சுகங்களைப் பெற்று வாழ்கின்றன.

எனவே, பூதாகாச ஸ்ருஷ்டிக்குக் காரணமான கடவுளை முதல் அதிகாரத்தில் வாழ்த்தி, நாயனார் வான் என்ற பூதாகாசத்தை இரண்டாம் அதிகாரத்திற் சிறப்பித்துப் பாடினார்.

இரண்டாம் அதிகாரத்து முதற் குறளில், மழை லோகத்தை வாழ்விப்பதால் அமிர்தமெனக் கூறத்தக்கது என்றும்!

இரண்டாங் குறளில், மழையின்றி ஔஷதியும் விலங்கும் விருத்தி ஆகாதென்பது பற்றி மழையே உணவு என்றும்;

மூன்று தொட்டு ஒன்பதாவது வரையில், மழையின்மையாற் பசிதோன்றி ஜனங்கள் வருந்துவார்கள் என்றும், அதன் குறைவால் உழுகின்றவர் ஏரால் உழமாட்டார்கள் என்றும்; செல்வத்துக்கும் வறுமைக்கும் மழை காரணம் என்றும், மழையின்மையால் புல்லின் தளிரையும் காணமுடியாதென்றும், சமுத்ரத்தின் ப்ரயோஜனம் குன்றுமென்றும், தேவபூஜை சாத்



யப்படாதென்றும், விரதங்களும் தானங்களும் நடைபெறாவென்றும்;

பத்தாவதில், லௌகிக கர்மானுஷ்டானங்களும் முற்றாப்பெறாவென்றும், போதித்தார்.

இனி ஒவ்வொரு குறளையும் ஆராய்வாம்.

---

### க. வானின் றுலகம் வழங்கி வருதலாற்
### றானமிழ்த மென்றுணரற் பாற்று.

பதச்சேதம்: வான் நின்று உலகம் வழங்கி வருதலால் தான், அமிழ்தம் என்று உணரற் பாற்று.

அர்த்தம்: பூதாகாசத்தில் நின்ற ஜனித்த மேகம் தனது மழையை லோகத்தாருக்குக் கொடுத்து வருவதால்தான், அந்தமழை அமிர்தமென்று அறியத்தக்கது.

**உலகம் வழங்கி**=உலகத்துக்கு வழங்கி=உலகத்துக்குத் தனது மழையைக்கொடுத்து. அதி. ஐ, குறள், 2, 9 இதனுடன் பார்த்தறிக.

"உலகம் வழங்கி" என்பதில் நான்காம் வேற்றுமை உருபு விகாரத்தால் தொக்கி நிற்கின்றது.

**அமிழ்தம்**=அமிர்தம், மரணத்தினின்று விலக்கும் வஸ்து.

உள்ளும் புறம்பும் (அஹத்திலும் புறத்திலும்) காரண கார்ய அனுபவங்கள் ஒன்றென்பது இக்குறளின் விளக்கம்.

மெய்ப்பொருளை ஆத்மாவால் அறிதற்பொருட்டு ப்ராணலய யோகம் அல்லது மனோலய யோகம் சாதிக்கின்ற பொழுது, இடையிடையே இளநீர் போன்ற ஓர் இனிய ரஸம் சந்த்ரமண்டலமாகிய மூளையில்நின்று உள்நாவழியால் ப்ரவாஹமாகி, உதரம் தொட்டு மூலம் பர்யந்தமுள்ள சூர்ய அக்நி மண்டலங்களிற் சென்று, காயசித்திகளுக்கும், ஆயுள் வ்ருத்திக்கும் ஸஹாயமாய் இருக்கும். இதை மஹான்கள் **அமிர்தம்** என்பார்கள், மரணத்தை அறுக்கும் ரஸமாதலால்.

இந்த ரஸம் ரஸதன்மாத்ரையாகிய ஆப் தத்வத்தின் மிக அரியகார்யம் இது அஹத்தில்எழுபத்தீராயிரம் நாடிகளையும்

னைத்து, உயிர் உடல் உறவுக்கு உற்ற துணையாக நிற்கின்றதென்று கல்விமான்களும் கேட்டதேயன்றி அநுபவமுறையாக அறியமாட்டார்கள். யோக ஸித்தருக்கு இது ப்ரத்யக்ஷம். இவர்கள் ஸமாதி செய்யும் வேளைகளில் அமிர்த தாரையையும் ஜல ஜ்யோதி தர்ஸனத்தையும், தமது புண்ய கர்மத்திற்கு ஏற்றபடி, பெறுவார்கள்.

சிதாகாசம் என்ற சுத்த வெட்ட வெளியில் ஜனித்து ஆப் தத்வ வழியால் அஹத்தில் அருளப்பட்ட அமிர்தம் புறத்தில் மழையாக வர்ஷிக்கும் மதுரமாயும் இருக்கும். ஜீவகோடிகளுக்குத் தேக பூரிப்பையும் வலிமையையும் த்ருப்தியையும் கொடுப்பதால், மழை அமிர்தமென்றே அறியத்தக்கது.

பூர்வீகத்தில் தைத்யராலும் தானவராலும் வாதிக்கப்பட்ட இந்த்ராதி தேவர்கள், விஷ்ணுபகவான் ப்ரஸாதத்தினால் திருப்பாற்கடலிற் தோன்றிய தன்வந்தரியின் கையில் ஏந்தப்பட்ட கமண்டலத்தில் உள்ள அமிர்தத்தை உண்டு தைத்யர்களையும் தானவர்களையும் ஜயித்து துரத்தி விட்டார்கள்.

சுரா என்ற அமிர்தத்தை உண்ட தேவர் சுரர் என்றும், அதை உண்ணாத தைத்யரும் தானவரும் அசுரர் என்றும் அழைக்கப்பட்டனர்.

தேவர்கள் உண்ட பாயஸமும், யோகாநுஷ்டானத்தால் பெறத்தக்க ஜீவரஸமும், மேகத்தில் நின்றுவரும் மழையும், நானாவித ரூபமாயினும், ஜாதியில் ஒன்றே என்று அறிக.

வருதலாற்றான். என்றதில் "தான்" என்ற அசை வழங்கிவருதல் என்ற ஹேதுவை நிச்சயப்படுத்திற்று.

உணரற்பாற்று=உணரும் பான்மையை உடையது, அதாவது, நாம் அறியத்தக்கது.

திருமூலர் தமது திருமந்திரம், வான்சிறப்பு, முதலாம் இரண்டாம் பாடல்களில், புறத்திலும் அகத்திலும் உள்ள அமிர்தத்தைப் பற்றி இவ்வாறு கூறினார்,—

"அமுதூறு மாமழை நீரதனாலே
அமுதூறும் பன்மரம் பார் மிசை தோற்றும்
கமுகூறு தேங்கு கரும்பொடு வாழை



அமுதூறு காஞ்சியை ஆங்கது வாக்குமே.
"வரையிடை நின்றிழி வானீ ரருவி
உரையில்லை உள்ளத் தகத்து நின்றூறும்
நுரையில்லை மாசில்லை நுண்ணிது தெண்ணீர்க்
கரையில்லை எந்தை கழுமணி யாறே."

---

௨. துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்
துப்பாய தூஉ மழை. [பார்க்குத்

பதச்சேதம்: துப்பார்க்குத் துப்பு ஆய துப்பு ஆக்கி துப்பார்க்கு துப்பு ஆபதும் மழை.

அர்த்தம்: உண்பார்க்கு நன்மையை தரும் உணவுகளை உண்டுபண்ணி, அவற்றை உண்பார்க்குத் தானும் உணவாயிருப்பதும் மழை.

மழையானது உணவை உண்டாக்கித் தானும் உணவாயிருக்கும் என்பது கருத்து.

துப்பாயதும்=உணவாயிருப்பதும். இது செய்யுளோசை நிறைத்தற் பொருட்டுத் "துப்பாயதூஉம்" என்று அளபெடுத்து நின்றது

ஔஷதிகளைப் பிரித்துப் பார்த்தால், அவற்றில் அப் (சூக்ஷ்மநீர்) என்ற தத்வத்திலே ஜனித்தஜலம்பெரும்பாகமாகக் காணப்படுமென்பதுபற்றித், "துப்பாய தூஉம்மழை" என்றார்.

---

௩. விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுல
துண்ணின் றுடற்றும் பசி. [கத்

பதச்சேதம்: விண் நின்று பொய்ப்பின் விரி நீர் வியன் உலகத்துள் பசி நின்று உடற்றும்.

அர்த்தம்: பூதாகாசமாகிய விண் தனது கார்யமாகிய மழையை நிறுத்தி இல்லாமல் ஆக்கினால், பரந்த கடலால் சூழப்பட்ட அகன்ற பூமியின்கண் பசி நிலைபெற்று [உயிர்களை] வருத்தும்.

போய்ப்பின்=பொய்த்தால், இல்லாமற் செய்தால்.

விரிநீர்=அளவற்ற உப்பு நீரால் சூழப்பட்ட.

வியனுலகத்துள்=அகன்ற பூமியின்கண். வியன்=விசால

உடற்றும்=உடற்றலைச் செய்யும், வருத்தும்.

வான்சிறப்போ, விரிகடல் சிறப்போ எனில், பசியைத் தீர்க்கும் உணவுக்குக் காரணமாகிய மழை பூதாகாசத்தில் நின்று வருவதால், வான்சிறப்பே முக்யம் என்று இந்தக் குறளிற் குறித்தார்.

---

ச. ஏரி னுழாஅ ருழவர் புயலென்னும்
வாரி வளங்குன்றிக் கால்.

அந்வயம்: புயல் என்னும் வாரி வளம் குன்றிக்கால் உழவர் ஏரின் உழார்.

அர்த்தம்: காற்றால் ஏவப்பட்ட மழைவளம் என்னும் வெள்ளம் குறைவுபட்டால், உழுவோர் தங்களுடைய ஏரால் உழுதலைச் செய்யமாட்டார்.

ஏர் என்றது கலப்பை. சுபதினத்தில் ஏர்ப்பூட்டு என்ற க்ருத்யத்தைப் புண்ணிய தேசங்களிற் செய்வர். ஓரிணை மாட்டை ஏரிற் பிணைத்தல் ஏர்ப்பூட்டு எனப்படும்.

ஏரின்=ஏர் + இன். ஈண்டு, "இன்" சாரியை எனக்கொள்க. பாவின் இசை நயத்துக்காகக் கூட்டப்பட்டது.

ஏரின்உழார்=ஏர்உழார்=ஏரால் உழமாட்டார்.

புயல்=பெருங்காற்று, இங்கு காற்றால்வரும் மழை. இதனோடு "வளம்" என்ற பதத்தைக் கூட்டுக.

புயல் வளம் என்னும் வாரி=(காற்றால் இயங்கும்) மழை வளப்பம் என்ற வெள்ளம்.

"வள்" என்ற தாதுவில் நின்ற வளம், வழர்ச்சி, வண்மை பிறந்தன.

வாரி=வெள்ளம். சிலர் வாரியை வருவாய், வரவு, ப்ரயோஜனம் என்று இவ்விடத்தில் பொருள்பண்ணுவர் ஆனால் "புயல் வளம் என்னும் வாரி" என்று நாயனார் கூறினமையால்,



அப்பொருள் பொருந்தாது.

குன்றிக்கால்=குன்றியக்கால்=குறைவுபட்டால்.

---

ரு. கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்ம
ற்றாங்கே யெடுப்பதூஉ மெல்லா மழை.

அர்த்தம்: செல்வர்களை வறியவர்களாக்குவதும், வறியவர்களுக்குத் துணையாய், அத்துணைநிலையில், மேல் நிலைக்குத் தூக்கிவிடுவதும், எல்லாம் மழை.

மற்று, அசைச்சொல்.

ஆங்கே=அவ்விடத்திலே; சார்பாய்நின்ற சமயத்திலே. அதாவது, வேண்டிய காலங்களிலே மழை வர்ஷித்தலால்.

எல்லாம் மழை=கெடுப்பதும் எடுப்பதும் என்ற இரண்டு தன்மைகளையும் பெற்றது மழை.

செல்வத்திற்கும் வறுமைக்குங் காரணம் மழையே என்றதனால், க்ருஷித் தொழிலின் மஹிமை உபதேசிக்கப்பட்டது. வேளாண்மையால் தான்யம் விளையும். அதை விற்றலால் தனமும் கல்வியும் உண்டாகும். இவற்றால் தைர்யமும் வீர்யமும் சுகமும் பெருகும். இவற்றுடன் புத்திர பாக்யம் என்னும் சந்தானமும் உண்டாகும். எனவே, உழுதலின்நின்று தோன்றும் லக்ஷ்மிகள் தான்ய லக்ஷ்மியும் தன லக்ஷ்மியும், ஸந்தான லக்ஷ்மியும், வேறு நாநாவித லக்ஷ்மிகளும் என்று அறிக.

அடுத்த குறளில் ஏர்ப்பூட்டுக்குரிய மாடுகளின் உணவாகிய புல்லும் மழையைப்பற்றி நிற்கும் என்றார்.

---

சு. விசும்பிற் றுளிவீழி னல்லான்மற் றாங்கே
பசும்புற் றலைகாண் பரிது.

பதச்சேதம்: விசும்பின் துளி வீழின் அல்லால் மற்று ஆங்கே பசுமை புல் தலை காண்பு அரிது.

அர்த்தம்: ஆகாசத் துளியாகிய மழை விழாது போனால் புல்லின் பசுமையான தலையைக் காணுதல் அரிது.

மற்று, அசைநிலை இடைச்சொல்.

**காண்பதரிது**=காண்பு (காணுதல்) அரிது.

பசும்புல் இல்லாதவிடத்து ஏரையிழுப்பதற்கு மாடுகள் இல்லாமற்போகும் என்பதும், பால் தயிர் மோர் நெய்யைத் தரும் பசுக்களும் இல்லாமற் போகும் என்பதும், இந்தக்குறளின் கருத்து.

---

**எ. நெடுங்கடலுந் தன்னீர்மை குன்றும் தடிந்**
**தானல்கா தாகி விடின். [தெழிலி**

அந்வயம்: எழிலி தான் தடிந்து நல்காது ஆகிவிடின் நெடுங்கடலும் தன்னீர்மை குன்றும்.

அர்த்தம்: மேகமானது தடித்து மழையைக் கொடாது போனால் எல்லையற்ற கடலும் தன் குணத்தில் குறையும்.

**நெடுங்கடல்**=நிலத்தைச் சூழ்ந்திருக்கும் நெடிய உப்புக் கடல்.

பூமியின்கண் உள்ள தரை காற்பங்கும் உப்புக்கடல் முக்காற்பங்கும் எனக் கணக்கிடப் பட்டது. இதுபற்றியே நெடுங்கடல் என்றார்.

நெடுங்கடல் எதில் குன்றும் என்றால், தன்னீர்மையில் குன்றும் என்று கொள்க.

**தன்னீர்மை**=தனது தன்மையில். நீர்மை=குணம், தன்மை.

இதிலுள்ள சூக்ஷ்மார்த்தம் எங்கள் தேகத்தை உவமையாகக் கொண்டே வெளிப்படுத்த வேண்டியது. உடம்பின் தோலும், தோலின்கீழுள்ள தசையும், தசையுள்ளிருக்கும் கொழுப்பும் எலும்பும், எலும்புள்ளிருக்கும் மஜ்ஜையும், தேகம் எங்கும் இருக்கும் ரக்தமும் பெரும்பாலும் லவண (உப்பு) அணுக்களால் இயற்றப்பட்டன. தேகத்தில் நின்று தோன்றும் வேர்வை முதலிய நீர்களிலும் லவணம் உண்டு. சுத்த ஜலம் பருகாதுபோனால், உப்பின் வேகம் அதிகரித்துத் தேகத்தைப் பாழாக்கும் அதுபோல, மழைநீர் விண்ணில் நின்று கடலில் நேரேயாவது, நதிமூலமாயாவது, அத்யந்த உத்தர தக்ஷண காண்டங்களை மூடியிருக்கும் பனிக்கட்டி உருகுதல் மூலமாயாவது, சேர்ந்து, அதன் லவண உஷ்ணத்தை ஸமப்



படுத்தி வையாது போனால், அக்கடலின் குணம் மாறுபட்டுத் தாவர ஜங்கம ஜாதிகளையும் இவற்றைப்பற்றிய உயிர்களையும் துன்பப்படுத்தி இறக்கச்செய்யும். எனவே, ஸமுத்ர நீரின் தன்மைகளாகிய உடல் ஸமரக்ஷணையும் ஜீவ ஸமரக்ஷணையும் வானின்று வரும் சுத்த ஜல கலப்பாலேயே குன்றாமல் நடைபெற்று வருகின்றன.

சிலர் "கடலின் இயல்பு குறைதலாவது நீர் வாழுயிர்கள் பிறவாமையும், முத்து முதலாயின மணிகள் படாமையும்" என்று கூறுவார்கள். இத்தன்மைகள் மானுடர்களுக்கு அனாவசியம். மேலும், ஆண்பெண் என்னும் பகுப்புடைய உடலோடு கூடிய உயிர்களின் சேர்க்கையால், வேறுயிர்கள் உடலைப்பெற்றுத் தோன்றுகின்றன. அப்பிறவிகளைக் கடலின் முக்ய இயல்பு என்று கூறலாகாது.

**தடிந்து**=தடித்து. அத்ருஶ்ய ஸப்தமேகங்களில் ஒன்றாகிய விவர்த்தம் என்னும் மழை மேகம் மண்ணிலும் நீரிலும் ஜனித்த ஆவியைப்பற்றி த்ருஶ்யப் பொருளாகும். சூக்ஷ்மப் பொருள் ஸ்தூலப் பொருளாகுதல் "தடித்தல்" எனப்படும்.

---

**அ. சிறப்பொடு பூசனை செல்லாது வானம்**
**வறக்குமேல் வானோர்க்கு மீண்டு.**

அந்வயம்: வானம் வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு சிறப்பொடு பூசனை செல்லாது.

அர்த்தம்: பூதாகாஶம் வரட்சிபெற்று மழையைத் தராதுபோனால் தேவர்களுக்கும் இந்தலோகத்தில் பூஜாகர்மம் அலங்காரமாய் நடவாது.

**சிறப்போடு பூசனை**=நிவேதன புஷ்ப முதலிய த்ரவியங்களோடு கூடிய பூஜை.

விண்ணவரைப் பற்றிய கர்மங்கள் நித்யம் நைமித்திகம் உபாஸனை ப்ராயச்சித்தம் என நான்குவகைப்படும்.

நித்யகர்மங்களாவன,- செய்யாது போனால் கெடுதலைச் செய்கின்ற சந்த்யாவந்தனம் முதலிய கர்மங்கள்.

நைமித்திகங்களாவன,- புத்ரஜன்மம் முதலானவைகளுக்

குக் காரணமாகிய ஜாதேஷ்டி முதலிய கர்மங்கள்.

ப்ராயச்சித்தங்களாவன,- பாபநாஶத்திற்குக் காரணமான சாந்த்ராயன முதலிய அனுஷ்டானங்கள்.

உபாஸனங்களாவன,-திவ்ய மூர்த்திகளில் ஒன்றைத் தியானித்து ஏகாக்ரசித்தனாகி அதனிற் ப்ரதிஷ்டைபெற்று நிற்றல்.

வானோர்=விண்ணவர். ஈண்டு பூலோகத்திற்கு மேற்பட்ட புவர் ஸ்வர் முதலிய மேல்லோகங்களில் வாஸஞ்செய்யும் திவ்ய அதிகார மூர்த்திகளை வானோர் என்றார்.

இந்தக் குறளில் வானோர்க்குப் பூஜையாகிய யஜ்ஞ கர்மத்தைக் குறித்து, அடுத்த குறளில் தானம் தபஸ் என்ற கர்மங்களைக் குறித்தார்.

---

**௯. தானந் தவமிரண்டுந் தங்கா வியனுலகம்**
**வானம் வழங்கா தெனின்.**

அந்வயம்: வானம் வழங்காது எனின், வியனுலகம் தானம் தவமிரண்டும் தங்கா.

அர்த்தம்: பூதாகாஶம் மழையைத் தராதுபோனால், தானம் தவம் என்ற இருவித கர்மானுஷ்டானங்களும் நிலைபெறா.

தானத்தின் லக்ஷணத்தை ௨௰௩ம் அதிகார உரையிலும், தவத்தின் லக்ஷணத்தை ௨௰௭ம் அதிகாரஉரையிலும், காண்க.

---

**௰. நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்**
**வானின் றமையா தொழுக்கு.**

அந்வயம்: யார்யார்க்கும் நீரின்றி உலகு அமையாதெனின், ஒழுக்கு வான் இன்றி அமையாது.

அர்த்தம்: எவரெவர்க்கும் நீரில்லாமல் உயிருடனுறவு கொண்டிருத்தல் நடைபெறாது என்று பலரும் அறிவார்களானால், [ஆசாரம் என்னும்] ஒழுக்கமும் மழையில்லாமல் ஸாத்யப்படாது [என்று சொல்ல வேண்டுமோ.]

நீரின்றி அமையாது உலகு=மழையில்லாமல் உயிர்கள்



உடலோடு இருக்கமாட்டா.

உலகு=உடலோடு உறவு கொண்ட உயிர்கள். ஈண்டு "உலகு" இடத்தைக் குறியாமல், தேக ஸம்பந்தம் பெற்று வாழும் ஜீவகோடிகளாகிய ப்ரஜைகளைக் குறிக்கின்றது.

அமையாது எனின்=மழையில்லாமல் நதிகளும் குளங்களும் கிணறுகளும் வற்றி ஜீவர்கள் தம்முடல்களில் நின்று இறப்பார்கள் என்றது நிச்சயம் எனில்.

ஒழுக்கு அமையாது=மழையில்லாமல் ஆசாரம் நடைபெறாது என்றது கூறவேண்டுமா.

ஒழுக்கம் என்றது ஒழுங்காக நடத்தல்; அதாவது, விதிவிலக்கு ரூபமான தர்மத்தைப் பற்றி வாழும் அறிவாளிகளின் நடை உடை பாவனைகள்.

இவ்வுலகத்தில் மழையின்மையால் எந்தஜீவர்களும் நெடுங்காலம் உடலோடு கூடியிருக்க மாட்டார்கள் என்பதையும், அவர்களது நல் ஒழுக்கமும் மழையின்மையால் நாசப்படும் என்பதையும், இந்தக்குறள் உணர்த்திற்று.

---

### ௩ம். அதிகாரம்.

## நீத்தார் பெருமை.

முதலாம் அதிகாரத்தில் அதி ஸூக்ஷ்மப் பொருளாகிய் அறத்துக்குக் காரணம் ப்ரக்ருதி வஸ்துக்களுக்கு உள்ளும், அவற்றிற்கு அப்பாலும், தன்னந்தனியாக நின்று, யாவற்றையும் அடக்கி ஆளும் "கடவுள்" என்றும், அக்கடவுளை அறஞ்செய விரும்புவோர் விசாரித்து வழிபடவேண்டும் என்றும், அவர்களது ஹ்ருதயத்தில் பகவானை வாழச்செய்தலுக்கு வேண்டிய உபாயங்கள் எவை என்றும், கூறி,

இரண்டாம் அதிகாரத்தில் அறஞ்செய்தலுக்கு மழையால் வளம் தளம் பெற்ற தேசவாஸம் வேண்டும் என்றும் விளக்கி,

மூன்றாம் அதிகாரத்தில் அறத்தின் ஸூக்ஷ்ம கதியை லகுவாய் அறிதற்கு ஸாது ஸங்க (ஸத் புருஷர்களோடு கூட்டுறவு கொண்டாடும்) பழக்கமும் இன்றியமையாது என்பது பற்றி, நீத்தார் பெருமையைக் கூறத்தொடங்கினார்.

நீத்தல்=நீக்குதல், விலக்குதல், விடுதல்.

எதனை விட்டவர் "நீத்தார்" எனப்படுவர் என்றும், இவர்கள் நிலை யாது என்றும், இவ்வதிகாரத்தில் ஸ்பஷ்டமாக விளக்கப்பட்டது

இருவினைப்பலன் சேரும் மார்க்கத்தை விட்டு, இருவினைப்பலன் சேரா மார்க்கத்தைத்தேடி அறிந்து, அதனால் "அந்தண்மை" (கு. ௰) ஆகிய ஸாந்தியைப் பெற்றவர்கள் "நீத்தார்" என்பது நாயனார் உபதேசம்.

இருமை வகை அறிந்து அறம் செய்தல் (கு. ௩) செயற்கரிய செய்கை என்றும் (கு. ௬), ஐம்புலன்களின்வகை அறிந்து (கு. ௭), அவற்றை அவித்து (கு. ௫), உரனால் ஐம்பொறிகளைக் காத்து (கு. ௪), தமஸ், ரஜஸ், ஸத்வம் என்ற குண அடுக்குகளை உடைய ப்ரக்ருதி மலையின்கண் ஏறி, அதன் உச்சியிலிருக்கும் (கு. ௯), "அந்தண்மை" என்ற சலனஒழிவில் விளையும் பேரன்பையும் பேரறிவையும் பெற்றுத் (கு. ௰),



தம்மை நாடிவந்த ஜீவர்களுக்கு ஸதாகாலமும் நிறைமொழி உரைத்தல் (கு. ௮), நீத்தார் பேருமை யாகும்.

அதி. ௧, குறள். ௫ இல் நாயனார் கூறின இருவினைப்பலன் சேரும் மார்க்கத்தைப் பற்றியும், இருவினைப்பலன் சேரா மார்க்கத்தைப் பற்றியும், பக்கங்கள் 46 தொட்டு 51 வரையில் விரிக்கப்பட்ட உரைகளை மீளவும் பார்த்தறிக.

தமிழ் அறநூற்களில் "வினைப்பலன் சேர்தல்" என்றது ஸம்ஸ்க்கிருத தர்மஸாஸ்த்ரங்களில் **கர்மபல ஸங்கம்** எனவும், வினைப்பலன் சேராமை **கர்மபல த்யாகம்** எனவும், வரும்.

இந்த கர்மபல நீக்கத்துக்குரிய உபாயங்களைச் செவ்வையாக அநுசரித்து கர்மபல ஸங்கத்தை முற்றுக விட்டவன் **நீத்தான்** என்றும், **துறவி** என்றும், **நிஷ்காம்ய கர்மாநுஷ்டாநி** என்றும், **நிஷ்கர்மா** என்றும், **அகர்த்தா** என்றும், **ஸந்ந்யாஸி** என்றும், கூறப்படுவான்.

**துறவி**=நீக்கினவன், துறந்தவன்; கர்மபல ஸங்கத்தை விட்டவன்.

**நிஷ்காம்ய கர்மாநுஷ்டாநி**=விருப்பு வெறுப்பு அற்றுத் தனக்கு ஏற்பட்ட கர்மங்களைச் செய்கின்றவன். (நிஷ்காம்ய=ஆசையற்ற).

**நிஷ்கர்மா**=கர்மபலனைக் கருதாமல் கர்மங்களைச் செய்கின்றவன். இவனை "அகர்மா" என்றுஞ் சொல்வர்.

**அகர்த்தா**=ப்ரக்ருதியின் ரஜஸ்குணம் ப்ரக்ருதி சொரூபங்களாகிய மனம் வாக்கு காயம் என்ற இந்த்ரியங்களை ஏவிக் கர்மங்களை நடத்துவதால், "நான்" என்ற ஆத்மா அவற்றைச் செய்கின்றதில்லை என்ற நிச்சயத்தோடு வாழ்கின்றவன்.

**ஸந்ந்யாஸி**=கர்ம பலன்களையும் கர்மங்களையும் முற்றுக பரமேஸ்வரனுக்கு ஒப்புக்கொடுத்து தான் ஸாக்ஷிருபமாய் நின்று, கர்மேந்த்ரியங்களால் செய்யப்பட்ட கர்மங்கள் எல்லாம் அவருடையதே என்று அறிந்தவன். இவனை "ஈஶ்வரார்ப்பண கர்மாநுஷ்டானி" என்று கூறுவர்.

ஆணவ (அத்ருஶ்ய அணுரூப) இருள் என்னும் மலத்தால் மறைக்கப்பட்ட ஜீவாத்மாவுக்கு, ப்ரக்ருதி ஸங்கத்தால், **கர்த்ருத்வ மோகம்** ஜனித்துக் கொண்டேயிருக்கும்.

நான் கர்மங்களைச் செய்கின்றேன் என்று எண்ணுகின்றவன் "கர்த்ருத்வம்" பெற்றவன். (ஸம்ஸ்க்ருதத்தில் "கர்த்ரு"= கர்த்தா, செய்கின்றவன்).

**மோகம்** என்றது மலத்தின் ஓர் வ்ருத்தி ஒன்றனிடத்தில் இல்லாத பிறிதொரு தன்மையை அதனிடத்து உள்ளதாக அறிவது, "மோகம்" எனப்படும். பாம்புத்தன்மை அற்ற பழுதையை (கயிற்றை) பாம்புத்தன்மை பெற்றதாக அறிதலும், ஆத்ம லக்ஷணமற்ற ஸ்தூல ஸூக்ஷ்ம தேகங்களை ஆத்ம லக்ஷணம் பெற்றதாக அறிதலும் மோக நிலைகளே.

ப்ரக்ருதியால் இயற்றப்பட்ட ஞானேந்திரியங்கள் அந்தஃகரணங்கள் கர்மேந்த்ரியங்கள் பஞ்சவாயுக்கள் என்றவற்றின் தொழில்களை ஜீவாத்மா தனது கர்மம் என்று எண்ணி மயங்கும். தன் மனவில் தோன்றும் சுகதுக்கங்களை தனது போகம் என்றெண்ணியும் மயங்கும்.

"நான்" என்று கூறப்பட்ட ஆத்மா கர்மங்களைச் செய்கின்றது என்ற புத்தி **கர்த்ருத்வ மோகம்.**

"நான்" என்று அறியத்தக்க ஆத்மாவினது மனவில் ஜனிக்கும் சுகதுக்கங்களை எனது போகம் என்ற புத்தி **போக்த்ருத்வ மோகம்.**

இப்படிப்பட்ட கர்த்ருத்வத்தையும் போக்த்ருத்வத்தையும் விட்டவன் **நீத்தான், துறவி, ஸந்நியாஸி** என்றறிக.

---

## க. ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து வேண்டும் பனுவற் றுணிபு.

அந்வயம்: பனுவல் துணிபு ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து வேண்டும்.

அர்த்தம்: ஶாஸ்திரத்தின் தீர்மானம் ஸதாசாரத்தில் நின்று வளர்ந்த துறவிகளது பெரியநிலையை மேம்பாடாகவே கொள்வது.

**ஒழுக்கத்து**=பொய்தீர் ஒழுக்கத்தில்நின்று (அதி.க, குறள் ௬.), அதாவது, மித்யாசாரங்களை விட்டு, ஸதாசாரங்களை ஶ்ரத்தையோடு அநுஷ்டித்து.



**நீத்தார் பெருமை**=கர்த்ருத்வ போக்த்ருத்வ மோகங்களை விட்டவர்களின் பெரிய நிலை.

**விழுமை** (பெருமை) என்ற பதத்தில் நின்று **விழுப்பம்** (மேம்பாடு) தோன்றிற்று. விழுப்பம் என்ற பதத்தோடு "**அத்து**" என்ற சாரியை கூடி, மகர ஈறும் அகரமுதலும் கெட்டு, **விழுப்பத்து** என்றாயது.

**விழுப்பத்து**=உத்தமமாகவே.

**வேண்டும்**=விரும்புவது, கொள்வது.

**பனுவல் துணிபு**=தர்ம ஶாஸ்த்ரத்தின் (அதாவது, தர்ம ஶாஸ்த்ர கர்த்தாக்களின்) நிச்சயம், தீர்மானம்.

"**பன்**" (நெய்தல், இசைதல்) என்ற பகுதியடியாகப் **பனுவல்** என்ற பதம் தோன்றிற்று. **பனுவல்**=நூல், ஶாஸ்த்ரம்.

---

## உ. துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத் திறந்தாரை யெண்ணிக் கொண்டற்று.

பதச்சேதம்: துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து இறந்தாரை எண்ணிக் கொண்டற்று.

அர்த்தம்: கர்த்ருத்வ போக்த்ருத்வ மோகங்களை விட்டவரது பெருமைக்கு உவமைகூறுமிடத்து, இவ்வுலகத்தில் பிறந்து இறந்தாரை எண்ணியளவெடுப்பது போலும்.

**துறந்தார்**=நீத்தார். பக்கம் 71.

**கொண்டற்று** (கொண்ட+அற்று)=கொண்ட அத்தன்மை போலும்=கொண்டாற் போலும்.

துறவிகளின் பெருமையைச் சொல்லால் வர்ணிக்கக் கூடாது என்பதும், அவர்களுக்குரிய பேரறிவும் பேரன்பும் ஸ்வாநுபூதிமான்களே அறியத்தக்கவர்கள் என்பதும், இக்குறளின் கருத்து.

---

## ங. இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார் பெருமை பிறங்கிற் றுலகு.

அந்வயம்: இருமை வகை தெரிந்து ஈண்டு அறம் பூண்

டார் பெருமை உலகு பிறங்கிற்று.

அர்த்தம்: இகலோக பரலோக பதவிகளின் அநுபோகங்களை விசாரித்தறிந்து, இப்பிறவியிலேயே விருப்பு வெறுப்பால் வரும் மோகங்களைத் துறந்தவரது பெரியநிலை லோகத்தில் ப்ரஸித்திபெற்றது.

இருமை=இரண்டு லோகங்களாகிய பூவும் ஸ்வரும். இவற்றை இம்மை மறுமை என்றும் சொல்வார்கள்.

இருமைவகை தெரிந்து=பூ ஸ்வர் என்ற இரண்டு லோகங்களுக்குரிய இன்பங்களின் இயல்பை விசாரித்து.

பூலோகத்திற் பெறப்பட்ட சுகங்களும் ஸ்வர்க்க லோகத்தில் பெறப்பட்ட சுகங்களும் தோன்றியழியும் சுகமாதலாலும்,—தோன்றிக் கொண்டிருக்கும் அவஸரத்தில் ஒரு பொழுது விசேஷமாகவும், இன்னொருபொழுது சாதாரணமாகவும், வேறொருபொழுது அல்பமாகவும், அனுபவத்திற் காணப்படுவதாலும்,—பின்னர் முற்றாக மறையுங் காலத்தில் அவ்வின்பங்கள் துன்பங்களாக மாறுதலாலும்,—இவையெல்லாம் போலி இன்பங்கள் என்று அறிந்து, இவைக்கு மேலான இன்பம் உண்டோவென்று விசாரித்து, ஞானகுருவின் க்ருபையால் அத்யந்த (மிகமேலான) புருஷார்த்தமாகிய அழிவற்ற மோக்ஷம் உண்டென்று பரிபக்வ காலத்தில் ஜீவர்கள் அறிவார்கள். இவை பற்றி "இருமை வகை தெரிந்து" என்றார்.

ஈண்டு=இந்தப்பிறப்பிலேயே.

ஸ்வர்க்காதி சுகங்கள் எல்லாம் துன்பங்கள் என்று நிச்சயித்தவன் அவற்றில் மோகங்கொள்ளான்.

பூலோக நரகலோக ஸ்வர்க்கலோக சஞ்சாரம், அக்கினியால் சுடப்பட்ட பொன்போல, ஆத்மாவையும் மனம் புத்தி சித்தம் என்ற அந்தஃகரணங்களையும் சுத்திசெய்யும்.

தோன்றியழியும் சுகங்களைக் கருதாமல், முமுக்ஷுத்வத்தை உண்டாக்கி, இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ என்ற புத்திமான், த்ரிலோக ஸஞ்சாரத்தைநீக்க வேண்டும் என்று எண்ணி, இப்பிறவியிலேயே மோக்ஷ ஸம்பத்தைப் பெறுதற்கு முயல்வான் என்பது பற்றி, "ஈண்டு" என்றார்.

அறம் பூண்டார்=பேரன்பையும் பேரறிவையும் தரித்தவர்



களது அதி. ௩. குறள் ௰.

அறம் பூண்டார் பெருமை=மோக்ஷம் பெற்றவரது பெரிய நிலை

பிறங்கிற்று=ப்ரகாசமாயிற்று. பிறங்கல்=தோன்றுதல், விளங்குதல்.

உலகு=உலகத்தில். "உலகம் உயர்ந்தோர் மாட்டே" என்றபடி, ஈண்டு உலகு அறிவாளிகளிடத்து என்று பொருள் படும்.

---

**௪. உரனென்னுந் தோட்டியா னோரைந்துங் காப்**
**வரனென்னும் வைப்பிற்கோர் வித்து. [பான்**

பதச்சேதம்: உரன் என்னும் தோட்டியான் ஓர் ஐந்தும் காப்பான் வரன் என்னும் வைப்பிற்கு ஓர் வித்து

அர்த்தம்: ஸ்திர புத்தி என்னும் அங்குஶத்தினால் ஐம்பொறிகள் ஒவ்வொன்றையும் காவல் செய்பவன் [ப்ரஹ்மவித்] வரன் என்னும் பதவிக்கு ஒப்பற்ற வித்தாவான்.

உரன் என்றது உரம் என்பதின் போலி. "நிலம்" நிலன் ஆவதுபோல.

உரம்=திண்மை, ஸ்திரம். ஈண்டு ப்ரதிஷ்டை பெற்ற புத்தி எனக் கொள்க. எதனில் ப்ரதிஷ்டை பெற்றதென்றால், அறத்திலாவது அதனை ஸ்ருஷ்டித்த பரமேஶ்வரனிலாவது என்றறிக.

தோட்டி=யானையை அடக்கி, வேலைகளைச் செய்விக்கும் பாகனுடைய கருவியாகிய அங்குஶம்.

தோட்டியான்=தோட்டியால். ஆல், ஆன் என்ற மூன்றாம் வேற்றுமை உருபுகள் ஹேதுப்பொருளைக் குறிக்கும்.

ஆசையால் ஏவப்பட்டு ஐம்பொறிகள் தத்தம் விஷயங்களை நாட ஓடும் பொழுது அவை மனசையும் இழுத்துக் கொண்டு செல்லும். இப்படிச்செல்லும் ஸமயத்தில் ஒருவனுக்கு விதி விலக்கு ரூபமான தர்மத்திலாவது, பரமேஶ்வரனிலாவது புத்தியிருந்தால், அது மனசைத் தன்வசப்படுத்தும்.

ஐம்பொறிகள் தத்தம் விஷயங்களைப் பற்றாமற் தடுத்து நிறுத்துவதே இந்த்ரிய நிக்ரஹகம் (ஐம்பொறி அடக்கம்) எனப்படும்.

தர்மத்தில் அல்லது பரமேஸ்வரனில் ப்ரதிஷ்டை பெற்று இந்த்ரிய நிக்ரஹத்தைச் செய்யும் புத்தியைத் தோட்டி என்றார்.

ஈண்டு மூர்க்கயானையை உவமையாகக்கூறியது ஆசையால் ஏவப்பட்டு ஓடும் ஐம்பொறிகளுக்கும், அவற்றால் இழுக்கப்பட்டு அவற்றிற்கு சஹாயமாய் இருக்கும் மனசிற்கும், ஒக்கும்.

**ஓரைந்தும்**=ஐம்பொறிகளுள் ஒவ்வொன்றையும்.

**காப்பான்**=காவல் செய்கிறவன்; தர்மம் என்ற வரம்பிற்கு அப்பால் ஓடப்பார்க்கும் ஐம்பொறிகளை ஜாக்கிரதையாகக் கவனித்து அந்தந்தக் காலத்திலேயே அடக்குகின்றவன்.

மெய் வாய் கண் மூக்குச் செவி என்ற ஐம்பொறிகள் தத்தம் விஷயங்களாகிய ஊறு சுவை ஒளி நாற்றம் ஓசைகளை அறிதல் அவ்வவற்றின் இயல்பு.

இவ்விஷயங்களை அறியும்பொழுது மனமானது தர்ம அதர்மநெறிகளைவிட்டுப் பொறிகளுக்குச் சஹாயமாகி அவையறிந்த விஷயங்களைப் பற்றிப்பிடித்தால், அவற்றிற்கு மேன்மேலும் வலிமையைக் கொடுக்கும்.

மனம் ஐம்பொறிகளோடு கூடாமலிருந்த காலத்தில் அவையறிந்த விஷயங்கள் ப்ரயோஜனப்படா. இதற்கு த்ருஷ்டாந்தம். ஒரு குருவும் ஶிஷ்யனும் ஶாஸ்த்ர ஆராய்ச்சியில் மனமழுந்தி நிற்கும்பொழுது, அவர்களுடைய கண்கள் ஒரு ரூபத்தைக் கண்ட மாத்ரத்தில், அதனோடு அவர்கள் மனஞ் சேராமலிருக்குமாதலால், அவர்கள் மனஸில் கண்ணாற்கண்ட விம்பங்களின் ப்ரதிவிம்பங்கள் உண்டுபடா. உண்டுபடாதபடியால் அவை ஞாபகத்திற் சேரா. எனவே, மனஸின் ஸஹாயமின்றிக் கண்ணானது கண்ட பொருள்களால் அறிதலுமில்லை, சுகதுக்க பலன்களுமில்லை என்று சித்திக்கின்றன.

பரமேஸ்வரனில் ப்ரதிஷ்டைபெற்ற ப்ரஹமவித், லோக விவகாரங்களிற் செல்லாமல், ஐம்பொறி அடக்கத்தை—ஞானேந்த்ரிய நிக்ரஹத்தை—ஓயா முயற்சியுடன் பழகி வருவா



னாயின், தனக்கு இயல்பாகிய ப்ரஹ்மவித்தின் பதத்துக்கும் மேற்பட்ட ப்ரஹ்மவித்வரனின் பதத்தைப்பெறுவான் என்பது பற்றி, "வரன்" என்னும் வைப்பிற்கு ஓர்வித்து என்றார்.

"வித்" (அறிபவன்) என்னும் ஸமஸ்க்ருத பதம் தமிழில் "வித்து" என்ற தத்பவமாயிற்று.

**ப்ரஹ்மவித்**=ப்ரஹ்மத்தை அறிகின்றவன், ப்ரஹ்மஜ்ஞானி, ஶிவதர்ஶனம் பெற்றவன்.

**ப்ரஹமஜ்ஞானிகள்** நால்வகைப்படுவர்.

அவர்களில் ஒருபாலார் நான்கு ஐந்து நாழிகை ஸமாதி கூடிப் பிரிந்து தங்களுக்கு வகுக்கப்பட்ட லோக க்ருத்யங்களைப் பரமேஸ்வரனது க்ருத்யங்களே என்று எண்ணிச் செய்வார்கள். இவர்கள் **ப்ரஹ்மவித்துக்கள்** எனப்படுவர்.

ஒருபாலார், லோக விவகாரங்களில் ப்ரவேசிக்காமல், நான்கு ஐந்து நாட்கள் ஸமாதி கூடிப் பிரிந்து, தம்மை அடைந்து நிற்கும் ஶிஷ்யர்களுக்கு ஆத்மார்த்த விஷயங்களில் மாத்ரம் உதவி, மீளவும் ஸமாதியில் செல்வார்கள். இவர்கள் **ப்ரஹ்மவித் வரர்கள்** எனப்படுவர்.

ஒருபாலார், வெகுநாள் ஸமாதிகூடி, ஏகதேசத்தில் அதில் நின்று பிரிந்து ஜாக்ரதசையில் வந்தகாலத்தில் பூஜிக்கப்பட்டு, மௌனமாயிருந்து, உணவுகளில் விருப்பமற்று, மீளவும் ஸமாதியில் நெடுங்காலம் இருப்பார்கள். இவர்கள் **ப்ரஹ்மவித் வரீயர்கள்** எனப்படுவார்கள்.

ஒரு பாலார், யாதொரு விவகாரமில்லாமல் அநேக நூறு வருஷங்களாக வனாந்தரத்தில் வ்ருக்ஷத்தடியில் பத்மாஸனம் முதலிய ஆஸனங்களை வஹித்து இடையறாத ஸமாதியில் இருப்பர். இவர்கள் **ப்ரஹமவித் வரிஷ்டர்கள்** எனப்படுவர்.

இவர்கள் மூச்சற்றிருப்பதைக் கண்டு உயிர் இல்லையென்று சிலர் ஸந்தேஹிப்பார்கள். கண்டவர்களிற் சிலர் உயிருண்டு என்று அனுமானிப்பதற்கு அடையாளம் நகமும் சிகையும் வளர்தலும், தேகத்தில் அல்ப உஷ்ணம் இருத்தலுமாம்.

**வரன் என்னும் வைப்பிற்கு**=ப்ரஹ்மவித்வரன் என்பவனுடைய பதவிக்கு.

ஓர்வித்து=ஒப்பற்ற முளையாவான்.

இந்தக் குறளில், பரமேஶ்வரனில் ப்ரதிஷ்டை பெற்ற ப்ரஹமவித், லோகோபகார முயற்சிகளில் அதிகஞ் செல்லாமல் ஐம்பொறிகளை அடக்கிக்கொண்டே இருப்பானாகில் ப்ரஹ்மவித் வரன் ஆகுவான் என்று உபதேசித்து, அடுத்த குறளில் தேவர்களின் அரசனாகிய இந்திரனுக்குச் சாபமிட்டு அவனுடைய செல்வமெல்லாம் உடனே நாஶம்பண்ணின ப்ரஹ்மவித்தாகிய கௌதமருஷியின் பெருமையை விளக்கினார்.

---

**௫. ஐந்தவித்தா னாற்ற லகல்விசும்பு ளார்கோமான்**
**இந்திரனே சாலுங் கரி.**

பதச்சேதம்: ஐந்து அவித்தான் ஆற்றல் அகல் விசும்புளார் கோமான் இந்திரனே சாலும் கரி.

அர்த்தம்: ஐம்பொறிகளை அடக்கினவனுடைய வலிமைக்கு விரிந்த விண்ணுலகத்திலே வாழ்பவருடைய அரசனாகிய இந்திரனே தக்க ஸாக்ஷி.

கௌதமருஷி என்பவருடைய பத்நியாகிய அஹல்யையின் மிகுக்த சுந்தரத்தைக்கண்டு தேவேந்திரன் மயங்கி, அம்முனிவர் போல ரூபங்கொண்டு, அந்த மஹா பதிவ்ரதையின் கற்பைக் கெடுத்தான். அதனை அறிந்த முனிவர், ஸ்திரீ புருஷர்கள் பார்ப்பதற்குக் கூசும் ரூபத்தையடையும்படி இந்திரனைச் சபித்தார். இந்திரன் வெட்கமுற்று ஸ்வர்க்கலோகத்திலுள்ள தனது அரண்மனைக்குச் செல்லாது, அனேக ஆயிரம் வருஷமாக இந்திர பதவியை இழந்து, அகோர தபஸ் செய்து சாபம் ஒருவாறு நீங்கப் பெற்றான்.

கௌதம முனிவர் அசுத்தத்தைப் பொருந்தின அஹல்யையைக் கல்லாகும்படி சபித்தார். அவள் சாபவிமோசனமாகுங்காலம் எப்பொழுது என்று பரிதபித்து வினவ, அவதார புருஷனாகிய ராமமூர்த்தி தமது ஆஶ்ரமத்துக்கு வந்த காலத்தில் அவரது பாதம் கல்லைத் தீண்ட மடமங்கை ஆவாள் என்று கூறி, வேறொரு ஆஶ்ரமத்துக்குச் சென்றார்.

அஹல்யையின் சாபவிமோசனம் த்ரேதாயுகத்தில் நடந்தது. அது இற்றைக்கு பத்து லக்ஷம் வருஷங்களுக்கு முன்னாகும்.



**ஐந்து அவித்தான்**=ஐம்பொறிகளின் வ்யாபாரங்களை முற்றாக அடக்கினவனது.

**அவித்தல்**=அணைத்தல், அடக்குதல்.

அக்னி தத்வத்தினிடம் ஜனித்த ஐம்பொறிகள், தீபம் போலநின்று, ஆத்மாவுக்கு ஐவகையான் லோகத்தைக்காட்டும்.

ஐம்பொறிகளின் ப்ரகாசத்தைக் குறைத்தால், ஐவகைப்பட்ட ஶப்த ஸ்பர்ஶ ரூப ரஸ கந்தம் என்ற குணங்களைத் தரித்த லோகம் ப்ரபலமாகாது.

**ஆற்றல்**=ஆறச்செய்தல்; தணிதல்; ஆறிநிற்கும் நிலை.

ஐம்பொறிகளின் சேஷ்டை இல்லாவிடத்து அவற்றால் வரும் சலனத்தைப் பெறாமல் மனம் ஆறிநிற்கும். ஐம்பொறிச் சேஷ்டை எவ்வளவு குறையுமோ அவ்வளவு மனமும் புத்தியும் தெளிந்து சுகமடையும். ஸமாதிநிலையில் (பக்கம் 54) பேரானந்தம் விளையும். இந்த சுகஸ்தானத்தில் பராஶக்தி வீற்றிருந்து தனது வலிமையை அருள்வாள்.

“ஆற்றல்” என்ற பதம் ஶாந்தி நிலையையும் அதன்கண் தோன்றும் வலிமையையும் குறிக்கின்றது.

**ஆற்றல்......கரி**=ஆற்றலுக்கும் (ஶாந்திக்கும் வலிமைக்கும்) ஸாக்ஷி.

**விசும்புளார்**=விசும்பில் (வீண் உலகத்தில்) உள்ளவர்கள்=விண்ணவர்.

**அகல் விசும்புளார்** = விசாலமான ஸ்வர்கலோகத்தில் வாழும் தேவர்களுடைய

**கோமான்**=அரசை உடையவன். “ஸ்ரீமான்” (ஸ்ரீயை உடையவன்), “பெருமான்” (பெருமையை உடையவன்), “கல்விமான்” (கல்வியை உடையவன்) என்பனபோல.

**கோமான் இந்திரனே**=தேவராஜனாகிய இந்திரனே.

**சாலும்**=நிறைந்த, போதிய. சால் (மிகுதி) என்னும் உரிச்சொல்லடியாக பிறந்தது “சாலும்” என்ற பெயரெச்சம்.

வெம்மாயைக் காடு என்ற ஐம்புல வழிகளையும் விருப்பு வெறுப்புக்களையும் இவற்றால் ஜனிக்கும் நினைவுகளையும் விட்டு

ஆறிநிற்கின்ற ஶாந்தர்களுக்கு வலிமையில்லையோ வெனில், தேவர்களுக்கு அரசனாகிய இந்த்ரனுக்கும் மேற்பட்ட வலிமை உண்டென்று இந்தக் குறளில் வற்புறுத்திக் கூறி, அடுத்ததில் ஆத்ம தர்ஶனத்துக்குரிய ஸாதனைகளை ஸாதிப்பவர்களே "பெரியோர்" என்றும், ஐம்பொறி வேடர்களுக்கு அடிமைப் பட்டுச் சிற்றின்பங்களைப் பரம்பொருள் என்றெண்ணித் திரிகின்றவர்கள் "சிறியோர்" என்றும் உபதேசிக்கின்றார்.

---

**௬. செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்**
**செயற்கரிய செய்கலா தார்.**

அந்வயம்: செயற்கு அரிய செய்வார் பெரியர், செயற்கு அரிய செய்கலாதார் சிறியர்.

அர்த்தம்: அரிய கர்மங்களைச் செய்கின்றவர்கள் பெரியோர். அரிய கர்மங்களைச் செய்யாதவர்கள் சிறியோர்.

செயற்கு அரிய=துறத்தலைத் செய்தற்கு அரியகர்மங்களை.

அவை ஆத்மாவைப் பற்றிய விசாரணைகளும், ஆத்மாவைக் காண்பதற்குரிய இந்த்ரிய நிக்ரஹம் (ஐம்பொறி அடக்கம்), மனோ நிக்ரஹம், ப்ராணாயாமம், அஜபாஜபம், த்யானம், ஸமாதிகளாம்.

பெரியர்=அறிவிலும் அன்பிலும் பெரியோர்.

அறிவிக்கும் அன்புக்கும் தக்கபடியே மனம் விஷயங்களைப் பற்றும். அல்ப அறிவும் அன்பும் தேக கார்யங்களைப் பற்றிநின்று அவற்றில் சிறுமை பெருமை கற்பிக்கும். விசால அறிவும் அன்பும் ஆத்ம கார்யங்களை முக்யமாகக் கவனித்து, எவன் ஆத்மாவை துக்கத்திலும் அசுத்தத்திலும் பயத்திலும் நின்று உத்தாரணம் செய்வானோ (தூக்கிவிடுவானோ) அவனே பெரியவன் என்று நிச்சயிக்கும்.

சிறியர்=அன்பிலும் அறிவிலும் சிறியவர்.

இந்தக் குறளில் பெருமை சிறுமை என்பவை அன்பையும் அறிவையும் பற்றியே நிற்கும் எனவும், தோன்றி அழியும் தேகாதிகளைச் சிறப்பிக்கும் தொழில்களை சிறந்தன என்று



ஜீவிக்கின்றவன் சிற்றறிவாளி எனவும், ஸநாதனமான ஆத்மாவை விசாரித்து அதன் ஆக்கத்துக்காக வேண்டிய முயற்சிகளை ஆரம்பித்துத் தீவ்ரமாக ஸித்திக்கச் செய்பவன் பேரறிவாளி எனவும் விளக்கி, அடுத்த குறளில் ஐம்பொறி விஷயங்களை தேடித் திரிபவனுக்கே லோகம் மெய்போலவும் அரிய பெரிய பொருள்போலவும் தோற்றும் எனக் கூறினார்.

---

**௭. சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின்**
**வகைதெரிவான் கட்டே யுலகு.**

பதச்சேதம்: சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்று ஐந்தின் வகை தெரிவான் கட்டே உலகு.

அர்த்தம்: ரஸம் ரூபம் ஸ்பர்ஶம் ஶப்தம் கந்தம் என்ற ஐம்புலன்களின் பேதங்களை அறிந்துகொண்டு இருப்பவனிடத்திலேயே உலகம் மெய்போலத் தோன்றும்.

ஐந்தின்வகை=ஐந்து விஷயங்கள் என்று கூறப்பட்ட ப்ரக்ருதி குணங்களின் பிரிவுபாடுகளையும், இவற்றைத் தத்தம் பொறிகளால் உணர்ந்த மாத்ரத்தில் உதயமாகும் இன்பங்களின் வேற்றுமைகளையும்.

தெரிவான்கட்டே=ஆவலொடு அறிந்து கொண்டிருப்பவனிடத்திலேயே உள்ளதுபோலத் தோன்றும்.

"கட்டே" எனப்பிரிநிலைஏகாரம் வைத்துக் கூறினமையால் தெரிபவனை மாத்திரம் மயங்கச் செய்யும் எனப் பொருள்படும்.

உலகு=நிலையற்ற பஞ்ச பூதங்களால் ஆக்கப்பட்டு, மாறி மாறிப் பிறந்தும் வளர்ந்தும் தேய்ந்தும் இறந்தும் வருகின்ற ஸ்தூல வடிவங்கள்; அண்டபிண்டங்கள்.

ஐந்தின்வகை தெரிவான்கட்டே உலகு உள்ளது என்ற பதங்கள் ஐந்தின்வகை தெரிதலை விட்டவனுக்கு உலகு இல்லது என்ற எதிர்மறையைக் குறிக்கின்றது. முன் வசனம் பொய்யறிவோடு வாழ்பவனுடைய அநுபவத்தையும், பின்வசனம் மெய்யறிவாளியின் அநுபவத்தையும், புகட்டுகின்றதென அறிக.

இவ்விரண்டு அநுபவங்களையும் கூறுதும்.

மலத்தால் மிக பந்திக்கப்பட்டவர்கள் தாம் காணும் ஸ்தூல வடிவங்களும் தாம் நுகரும் சிற்றின்பங்களும் தோன்றி மாறி அழிவதைப் ப்ரத்யக்ஷமாகப் பார்த்தும், அந்த வேற்றுமைகளின் பரமார்த்தத்தை அறியாமல் அவையெல்லாம் நிலையுள்ளன என்றெண்ணி அவற்றையே வருந்தித் தேடுவார்கள்.

ஆனால் புண்ய கர்மங்களை ஸ்ரத்தையோடு செய்து அவற்றின் முக்ய பலன்களாகிய சித்தசுத்தியையும் ஸமத்வ புத்தியையும் பெற்றவர்கள் "லோகம்" என்று கூறப்பட்ட ஐம்பொறி விஷயங்களையும சிற்றின்ப போகங்களையும் அபிமானிக்கமாட்டார்கள். தோன்றி அழிவதால் இவை அநித்யங்கள் என்றே நிச்சயித்து, இவைக்கு மேற்பட்ட ஆத்மார்த்தங்களில் புத்தியையும் முயற்சியையும் செலுத்துவார்கள்.

இந்தப் புண்ய புருஷர்களில் சிலர், திருவருள் என்னும் பராஶக்தியின் அநுக்ரகத்தைத் திடமாகப் பெற்றவுடனே, தேகாதி வடிவங்கள் யாவும் ஸ்வப்நதசையில் காணப்பட்ட காட்சிகள் போன்ற அநித்யத் தோற்றங்கள் என்றறிவார்கள். இதற்கு ப்ரமாணம்:

தாயுமானஸ்வாமி, தந்தைதாய் , ௧,—

தந்தை தாய் மகவுமனைவாழ்க்கை யாக்கை
  சகமனைத்து மௌனியருள் தழைத்த போதே
யிந்திரஜாலம் கனவு கானல் நீரா
  யிருந்ததுவே இவ்வியற்கை என்னே என்னே.

மாணிக்கவாசகஸ்வாமி, வாழாப்பத்து , ௫,—

உடல் வாய் மூக்கொடு செவி கண்
  ணென்றிவை நின்கணே வைத்து
மண்ணின்மேல் அடியேன் வாழ்கிலேன் கண்டாய்
  வருகவென்று அருள்புரிவாய்.

ஐம்பொறிகளை முற்றாக அடக்குதலை யோகிகள் **சாதல், சாகுதல், சேத்திடல், சேற்றல், இறத்தல்,** என்பர். இதற்கு ப்ரமாணம்:

திருவாசகம், செத்திலாப்பத்து,—

ஐயனே இன்னும் செத்திலேன் அந்தோ. ௧



பதையேன் மனமிக உருகேன்
பரிகிலேன் பரியாய் உடல்தன்னைச்
செற்றிலேன், இன்னும் திரிதருகின்றேன். ௨
நிலையனே, என்னைச் செத்திடப் பணியாய். ௩
இறக்கிலேன் உனைப்பிரிந்து இனிதிருக்க
என்செய்வேன் இது (இறத்தலைச்) செய்கவென்று
  அருளாய். ௪

**சேத்தல், சேத்திடல் சாகுதல்** என்றவை "சா" (நீங்கு, பிரி) என்னும் பகுதியடியாக வந்த மொழி விகற்பங்கள். **இறத்தல்** "இற" (நீங்கு) என்னும்பகுதியடியாகவந்தது. **சேற்றல்** "செறு" (நீங்கு, களை) என்னும் பகுதியடியாக வந்தது. இந்த மொழிகள் யாவும் ஐம்பொறி அடக்கத்தைக் குறிக்கும்.

இந்தக் குறளில், ஐம்பொறி விஷயங்களிற் ப்ரீதிகொண்டு இருப்பவனுக்கே பஞ்சபூதங்களால் இயற்றப்பட்ட லோகம் மெய்யாகவும் பரம்பொருளாகவும் தோற்றும் என்று உபதேசித்து, இவர்களுக்கு விசால அறிவும் அன்பும் இல்லாதபடியால் இவர்கள் பேசும் பேச்செல்லாம் குறைவுபாடாகவும் விபரீதமாகவும் இருக்கும் என்பதுபற்றி, அடுத்த குறளில், நீத்தார் பெருமையை மெய்ஞ்ஞானிகளது வாக்கின் நிறைமொழிகளால் அறியலாம் என்று விளக்கினார்.

---

## ௮. நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து மறைமொழி காட்டி விடும்.

பதச்சேதம்: நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து மறைமொழி காட்டி விடும்.

அர்த்தம்: பூர்ண அறிவிலும் அன்பிலும் தோய்ந்த சொற்களைப் பேசும் பெரியோர்களின் மஹாத்மியத்தை இந்தப் பூமியின்கண் அவர்களது திருவாக்கே ஸ்தாபிக்கும்.

இந்தக் குறளுக்குச் சார்பாகக்கொண்ட மேற்கோள் அகஸ்த்ய மஹாமுனிவரது ப்ரதம ஶிஷ்யனாகிய த்ரணதூமாக்நி அருளிச்செய்த தொல்காப்பியம், பொருளதிகாரம்,

செய்யுளியலில் உள்ள ௱௭௯ வது சூத்ரம் எனக்காண்க. இது

"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த (சொன்ன)
மறை மொழி தானே மந்த்ரம் என்ப."

என்றுவரும். இதன் அர்த்தமாவது, நிறைந்த மொழியை உடைய பேரறிவாளிகளது சித்தத்தில்நின்று தோன்றிய திருவாக்குகளே வேத மந்த்ரங்கள் என்று பெரியோர் கூறுவர் என்பது.

**மறை மொழி**=மெய்ப்பொருளை எப்பொருளிலும் காட்டிக் கொடுக்கும் சொற்கள்.

**தானே மந்த்ரம்**=அந்தச் சொற்களே மந்த்ரங்கள் எனப்படும்.

**மந்த்ரம்**=மனஸைக் காக்கும் பொருள்.

தொல்காப்ய சூத்ரத்தின் விளக்கப்படியே நாயனரைது எட்டாவது குறள் அறியத்தக்கது.

**நிறைமொழி மாந்தர்**=முழுப்பொருளாகிய பரமாத்மாவை அறிந்து, கண்டிதமாக இருக்கும் நாநாவிதப் பொருள்கள் யாவற்றிலும் அதனைக்கண்டு, அதுவே பரம்பொருள் எனனும் நிச்சயத்துடன் பேசும் ஜீவன்முக்தர்கள்.

நிறைமொழிக்கு எதிர்மறையாகிய **குறைமொழி**, விஷய சுகங்களைக் கருதிவாழும் ஜனங்களின் பேச்சு, அறிவிலும் அன்பிலும் குறைவுபட்டேயிருக்கும். (நேர் விரோதமாக மறுப்பது எதிர்மறை எனப்படும்.)

குறைமொழிகளை வசனிக்கும் மாந்தரோடு அறிவாளிகள் ஸகவாஸம் பண்ணும்பொழுது அவர்கள் பக்ஷங்களை அங்கீகரியாமல் வெகு ஜாக்ரதையாக இருப்பார்கள்.

**நிலத்து**=இவ்வுலகத்தில்.

**மறை**=வேதம். மிக ரஹஸ்யமாக (மறைவாக) அண்டாண்டகோடிகள் தோறுமுள்ள கடவுளைவழிபட்டு அதனை அறியும் வகையைக் கூறும் கருவிவேதமெனப்படும். (**மறையோர்**=வேதத்தை அறிந்த மேல்வர்ணத்தார்)

தொல்காப்யத்தில் கூறினவாறு **மறைமொழி** மெய்ஞ்ஞானிகள் உபதேசிக்கும் திருவாக்குகள் எனப் பொருள்படும்.

**காட்டிவிடும்**=பெருமையை விளங்கச் செய்யும்.



தர்மவாழ்வில் ப்ரதிஷ்டைபெற்ற புத்திமான்கள் நீத்தார் நட்பையே எதிர்பார்த்து இருக்கவேண்டும் என்பதுபற்றி, இந்தக் குறளில் ஜீவன்முக்தர்களின் திருவாக்குகளைப் பெருமைப் படுத்தினர். அடுத்த குறளில் ஸத்வகுணத்தைப் பொருந்தி ஈஸ்வரார்ப்பண கர்மங்களை அப்யஸிக்கின்ற பெரியோரின்கோபத்தைப் பெறல்பாழைத்தரும் என்று உபதேசித்ததால், ஸாதுக்களை எக்காலமும் மதிக்க வேண்டுமென்றும், அவர்களுடன் கூடி மேன்மேலும் தங்கள் தர்ம குணங்களை வ்ருத்திசெய்ய வேண்டுமென்றும், போதித்தார்.

---

**௯. குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்த லரிது.**

பதச்சேதம்: குணம் என்னும் குன்று ஏறி நின்றார் வெகுளி கணமேயுங் காத்தல் அரிது.

அர்த்தம்: ஸத்வகுணம் என்னும் அசையா நிலையைப் பெற்று நின்றவர்களின் கோபத்தை தம்மேல்வராமல் ஒரு க்ஷணமாவது அரண் (காவல்) செய்துகொள்ளல் ஒண்ணாது.

**ப்ரக்ருதியின் குணம்** ஸத்வம் ரஜஸ் தமஸ் என்று பகவானால் மூவகையாகப் பிரிக்கப்பட்டது.

ஓய்வில்லாத சேஷ்டையுள்ளதும், இஷ்டம் அநிஷ்டம் இருள் ஒளி முதலிய த்வந்த்வங்களைப் பெற்றதும், தனதுகலங்கின நிலையையும் துன்ப சொரூபத்தையும் அறியக்கூடாததும், ஆகிய ப்ரக்ருதியில் பரமேஸ்வரனது சித்ஸக்தி சென்று அதன் மிக மிஸ்ர (கலப்புள்ள) குணத்தை ஜீவாத்மாக்கள் அறிந்து முத்திபெறும் பொருட்டு, மூவிதமாகப் பிரித்தார். இவையெல்லாம் அத்ருஸ்யப் பொருள்களாம். அவற்றின் காரியங்களாலேயே ஜீவன் அவற்றை அறியலாம்.

தமோ குணத்தின் கார்யம் அஞ்ஞானம், மோஹம், மறதி.
ரஜஸ் குணத்தின் கார்யம் விருப்பு, வெறுப்பு, செயல்.
ஸத்வ குணத்தின் கார்யம் விசாரம், கற்றல், சுகம்.

இம்மூன்று குணங்களின் வ்ருத்திகள் இப்படிப் பிரிக்கப்பட்டாலும் ஒன்றோடொன்று கலந்தே நிற்கும். ஆதலால்

தமோகுணமானது தமஸில் தமஸும், தமஸில் ரஜஸும், தமஸில் ஸத்வமுமாக இருக்கும்; ரஜோகுணமானது ரஜஸில் தமஸும், ரஜஸில் ரஜஸும், ரஜஸில் ஸத்வமுமாயிருக்கும்; ஸத்வகுணமானது ஸத்வத்தில் தமஸும், ஸத்வத்தில் ரஜஸும், ஸத்வத்தில் ஸத்வமுமாக இருக்கும்.

இந்த நவ விபாகங்களில் (பிரிவுகளில்) எந்தக்குணம் ப்ரபலமாயிற்றோ, அது மனம் வாக்குக் காயம் என்ற இந்த்ரியங்களில் பிரவேசித்து அதற்கேற்ற கர்மங்களைச் செய்விக்கும்.

தெளிவையும் ப்ரகாசத்தையும் பொருந்திய ஸத்வகுணத்தைப் பெறத்தக்க ஜீவாத்மாவுக்கு தேகசுத்தி, நேர்நடக்கை, பொறுமை, மன அடக்கம், ஆத்ம அநாத்ம விசாரணை, குரு ஸ்ருதி தெய்வம் என்றவற்றில் ஸ்ரத்தை, என்ற **ப்ராஹ்ம குணங்களை** (ப்ரஹ்மத்தைச் சார்ந்த குணங்களை) பிறவியிலேயே பரமேஸ்வரன் அருளுவார்.

விருப்பு வெறுப்புரூப ரஜஸ் குணத்துக்குரிய ஸத்வாம்ஸத்தை ப்ராபல்யமாகப் பெற்ற ஜீவாத்மாவுக்கு அஞ்சாமை, பொலிவு (ப்ரகாசம்) தைர்யம், ஸாமர்த்யம் போரிலோடாமல் நிற்றல், ஈகை, நல்லவர்களுக்கு ஸுகபாவனையும் கெட்டவர்களுக்குப் பீம (பயங்கரமான) பாவனையும் காட்டுதல், என்ற **க்ஷாத்ர குணங்களைப்** பரமேஸ்வரன் பிறவியிலேயே அருளுவார்.

ரஜஸ் குணத்தின் தமாம்ஸத்தை ப்ராபல்யமாகப் பெற்ற ஜீவாத்மாவுக்கு தனம் தான்யம் பசு முதலிய பொருள்களைக் கொள்ளலுக்கும் பெருக்குதலுக்கும் விற்றலுக்கும் உரிய **பாலன குணங்களைப்** பரமேஸ்வரன் பிறவியிலேயே அருளுவார்.

அஞ்ஞான சொரூப தமஸ்குணத்தின் ரஜாம்ஸத்தை ப்ராபல்யமாகப் பெற்ற ஜீவாத்மாவுக்கு ப்ராஹ்மண ஸிஸ்ருஷை அல்லது வேறு புண்ய புருஷ ஸேவைக்குரிய **பரிசாரக குணங்களைப்** பரமேஸ்வரன் பிறவியிலேயே அருளுவார்.

இவ்விதம் குணங்களையும் இவற்றிற்கேற்ற கர்மங்களையும்



கூட்டி ப்ராஹ்மணத்வம் க்ஷத்ரியத்வம் வைஸ்யத்வம் சூத்ரத்வம் என்ற சதுர்வர்ணங்களைப் பகவான் உண்டுபண்ணினார்.

இவையெல்லாம் ஸ்வபாவ ஜன்யங்கள். அஃதாவது பிறவியிலேயே புத்திக்கும் கர்மேந்த்ரியங்களுக்கும் அமைக்கப்பட்ட நிலைகள். மாதாவின் கர்ப்பத்திலேயே தரிக்கப்பட்ட இந்த நிலைகள் உறுதியாகநின்று ஜீவாத்மாவைக் காம க்ரோத பய துக்கங்களால் மிகவும் சலனப்படவிடாமற் காக்கும்.

**குணமென்னும் குன்று ஏறி நின்றார்**=தமஸ் ரஜஸ் ஸத்வம் என்ற குணங்களுக்குரிய மும்மூன்று பிரிவுபாடுகளைப் பெற்ற சோபான மலையினது சிகரத்தில் ஏறி நிலைபெற்றவர்கள்.

குணமலையின் சிகரத்தில் ஸமத்வ புத்தி, சித்தசுத்தி, ஈஸ்வரார்ப்பண கர்மாநுஷ்டானம், ஐம்பொறி அடக்கம், மன அடக்கம், துக்க நிவ்ருத்தி என்ற திவ்ய ஆத்ம ஸக்திகள் ப்ரகாசிக்கும்.

**நின்றார் வெகுளி**=நின்றவர்களுடைய கோபத்தை.

ஸாந்தியைப் பெற்றவர்களின் கோபம் ஆசையில் நின்று ஜன்யமானதன்று. பரமேஸ்வரனது தண்ட ஸக்தியின் கோலமே என்றறியத்தக்கது. இதுபற்றிக் "காத்தலரிது" என்றார்.

**காத்தல் அரிது**=தம்மிடத்தில் அணுகாதபடி செய்து தன்னை ரக்ஷிக்க முடியாது.

இந்தக் குறளில் ஸத்வ குணவான்களைப் போற்றி வழிபட வேண்டும் என்றும் அவர்களுக்கு ஒருபொழுதும் கோபத்தை மூட்டலாகாதென்றும் கூறி, அடுத்த குறளில் அவர்களது கோபம் ஜீவகாருண்யத்தைத் தழுவியே நிற்குமென்று கூறுகின்றார்.

---

**௧௦. அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்**
**செந்தண்மை பூண்டொழுக லான். [கும்**

பதச்சேதம்: அந்தணர் என்போர் அறவோர், மற்று எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு ஒழுகலான்.

அர்த்தம்: அழகிய ஶாந்தியைப் பெற்றவர்களை அறஞ்செய்என்ற தர்மாநுஷ்டானத்தில் கௌசலம் (பூரணசாமார்த்யம்) பெற்றவர்கள். (ஏனெனில்) ஏனைய உயிர்கள் யாவற்றையும் தழுவித் தாம் சிறந்த ஶாந்தியைத் தரித்து நடப்பதால்

**அந்தணர்**=அழகிய தண்மையை (குளிர்ச்சியை) அடைந்தவர்கள்.

ஸத்வ குணத்தைப் பெற்றவர்களது மனம் அதிக உருக்கம் பெற்றமையாலும், வாக்கு இனிய சொற்களை மொழிந்து வருவதாலும், கண் கை முதலிய அவயவங்களும் மிக ம்ருதுவாயிருப்பதாலும், அவர்கள் குணங்கள் எல்லாம் குளிர்ந்த (தண்ணிய) தன்மையுடையனவாம். அஃதாவது, அகோர (வெப்பமான) நிலையினின்று நீங்கினவாம்.

**அறவோர்**=அறத்தினையுடையவர். விதிவிலக்கு ரூபமான அறத்தைச் சாதித்து அதன் வழியால் மிக ஸாமர்த்யமாக நைஷ்கர்மய ஸித்தியை அடைந்து, பேரறிவையும் பேரன்பையும் பெற்றவர்கள்.

எவன் விதிக்கப்பட்ட கர்மங்களை அனுசரித்தும் விலக்கப்பட்ட கர்மத்தை நிஷேதித்தும் வாழ்வானோ, அவனுக்குச் ஸமத்வபுத்தியும் சித்தசுத்தியும் ஈஶ்வரனால் அருளப்பட்டு, அவ்வழியால் கர்த்ருத்வ போக்த்ருத்வ மோகங்கள் ஜயிக்கப்பட்டு, பேரறிவும் பேரன்பும் க்ரமமாக தலைப்படும் என்பது பற்றி **அந்தணரென்போர் அறவோர்** என்றார்.

**மற்றெவ்வுயிர்க்கும்**=தமக்குவரும் லாபநஷ்டங்களைக் கருதாமல் மற்று எந்த ஜீவர்களுக்கும்.

**செந்தண்மை பூண்டு**=சிறந்த தயாளத் தன்மையைத் தரித்து.

**ஒழுகலான்**=சுகங்களை ஊட்டலால்.

இந்த அதிகாரத்தில் கர்த்ருத்வ போக்த்ருத்வ புத்திகளை விட்டு ஜீவகாருண்யத்தோடு வாழும் மஹான்களின் ஸித்திகளைக் கூறி, வரும் நான்காம் அதிகாரத்தில் அந்த ஸித்திகள் அறத்தின் வலிமையாலேயே வந்தன என்று விளக்குவாராயினர்.

---



**௪ ம். அதிகாரம்,**

## அறன் வலியுறுத்தல்.

மூன்றும் அதிகாரத்தில் "நீத்தல்"—"துறத்தல்"—"கர்மபல த்யாகம்"- என்ற உபாயத்தால் ஆத்மாவைப் பற்றிய கர்த்ருத்வ மோகமும் போக்த்ருத்வ மோகமும் விடும் என்றும், அவற்றை விட்டவர்களே மகாத்மாக்கள் என்றும் விளக்கி, நாலாம் அதிகாரத்தில் அறத்தை அநுசரித்தே அந்த உத்தம நிலை பெறத்தக்கதென்று கூறினமையால், இந்த அதிகாரம் "**அறன் வலி உறுத்தல்**" எனப் பெயர் பெற்றது.

**அறன் வலி**=அறத்தினுடைய வலிமை, பராக்ரமம்.

**உறுத்தல்**=(மாணுக்கன் புத்தியில்) உறும்படி (பொருந்தும்படி) செய்தல்.

ஆத்மாவைப் பற்றிய மலத்தை எது "அற" (அற்றுப் போக, அல்லது அறுக்க)ச் செய்யுமோ, அது **அறம்** எனப்படும்.

தமிழில் **அறம்** என்பது ஸம்ஸ்க்ருதத்தில் **தர்மம்** எனப்படும். மலத்தை ஜயிப்பதற்கு ஆத்மா எதனைக் கவசமாகத் "தரிக்க"த் தக்கதோ, அதனை **தர்மம்** என்று கூறுவர்.

இருள் நிறைந்த அறையில் அகப்பட்டு இருளையும் இருளென்று அறியாமல் வழிகெட்டுத் தடுமாறுகின்றவனுக்கு ஓர் ஒளிக்கிரணம் சுகத்தைக் கொடுக்கும். அதுபோல, ஆசை துஷ்டம் முதலிய பாழான குணங்களால் வாதிக்கப்பட்டு நன்மை எது தீமை எது என்று அறியாமல் மயங்கி நின்றவனுக்குச் சுகத்தைக் கொடுக்கும் பொருட்டு, ஒரு **ஞானரேகையைக்** கருணாநிதியாகிய பரமேஶ்வரன் தனது பேரறிவிலும் பேரன்பிலும் நின்று தோன்றச் செய்தார்.

தன்னையும், தன்னைப்பற்றிய மலத்தை மலம் என்றும், அறியாத ஜீவாத்மாவுக்கு இந்தச் **சச்சிதானந்த ரேகை** சுத்தம் எதுவென்றும், அசுத்தம் எதுவென்றும், காட்டும். **அறம்** ஜீவாத்மாவை மலத்தில் நின்று தூக்கி ஈடேற்றுவதால், அது **ஆத்மோதாரண ஶக்தி** எனப்படும்.

ஆத்மா + உத்தாரணம் = ஆத்மோதாரணம்; உயிர் ஈடேற்றல்.

ஈடேற்றுதல் = ஒப்பாகும்படி (ஸமத்வமாகும்படி) தூக்கி மேல் வைத்தல்.

இந்த ஆத்மோதாரண ஶக்தியை **தேவாத்ம ஶக்தி** என்றும் பெரியோர் கூறுவர்.

எது ஜீவாத்மாவை மலத்தில் நின்று தூக்கி சுகவழியில் நிறுத்துமோ, அது திவ்ய பரமாத்மாவின் உத்தரண ஶக்தி என்றறிக.

இதுவே **அறம்**. அண்டரண்ட கோடிகள் தோறும் ஜீவர்களுடைய மலநீக்கத்தைக் கருதியே இருத்தலினால், நாயனார் இதனை, அதி. ௩, குறள் ௰ இல், **செந்தண்மை** (சிறந்த ஶாந்தியை உடைய பொருள்) என்றும், ௪. ௪ இல் மனசைப் பற்றிய மாசினை (கொடிய மலத்தை) ஒழிக்கும் பொருள் என்றும் கூறினர்.

**அறம்**, விதிவிலக்கு ரூபமாய்த் தோன்றி, ஜீவாத்மாவை ரக்ஷிக்கும்.

எவன் விதிக்கப்பட்ட கர்மங்களை அநுஸரித்தும் விலக்கப்பட்டவையை நிஷேதித்தும் வருவானோ, அவனுக்குச் சித்த சுத்தியும், ஸமத்வ புத்தியும் (ப. 37), ஆத்ம காரியங்களை விசாரிப்பதற்கு விவேகமும், தன்னையும் தனக்குள் வாழும் தலைவனாகிய பரமேஸ்வரனையும் அறியத்தக்க யோகஸாதனங்களும் (ப. 40, 41), பரிசுத்த பரமாநந்த மோக்ஷமும் (ப. 42), அருளப்படும் இவற்றால் **அறத்தின் வலிமை** வெளியாகும்.

இருளிலும் துக்க பய சோர்வுகளிலும் அழுந்திக் கிடக்கும் (ப. 47) ஜீவாத்மாவை உத்தரணம் செய்து சச்சிதாநந்த மயமாக்குவதற்கே ஸ்ருஷ்டியாதி கர்மங்களில் பகவான் ப்ரவேசித்தார். வேதாகமங்களும், அறமும், யஜ்ஞம் தானம் தபஸ் (ப. 67-68) என்ற புண்ய கர்மங்களுக்குரிய கர்மபலன்களும், பாப கர்மங்களுக்குரிய துக்க பலன்களும் (ப. 49, 50), இவற்றை அநுபவிக்கும்படி ஸூக்ஷ்ம ஸ்தூல தேகங்களும் (ப. 52, 72), ப்ரஹ்மாண்டத்துக்குள் அடக்கப்பட்ட ௰௪ லோகங்களும் (ப. 28, 30), ப்ரவ்ருத்தி நிவ்ருத்தி மார்க்கங்களும் (ப. 51), உபாஸநா தேவதைகளும், கல்வி பீடங்களும், குரு ஶிஷ்ய பரம்பரைகளும், படைக்கப்பட்டன. இவற்றாலும் **அறன்வலி** வெளியாகும்.



இந்த ஸ்ருஷ்டியோடு கூடிய **ஸ்திதி** ஸம்ஹார திரோபவ அநுக்ரஹ க்ருத்யங்கள் பரமேஸ்வரனது **கர்ம சக்ரம்** எனப்படும்.

உபநிஷத்களில் ப்ரஸித்திபெற்ற பகவற்கீதை, அத் ௩ மந்த்ரங்கள் ௰-௨௰ இல் இந்த திவ்ய **கர்ம சக்ரம்** பொழிப்பாக கூறப்பட்டிருக்கின்றது. அந்த மந்த்ரங்களையும் அவற்றை விளக்கும் ராமநாதீயம் என்ற தமிழ் விருத்தியிலுள்ள 86 தொட்டு 104 பக்கங்களையும் பார்த்தறிக.

பகவத்கீதை, ௩. ௰௬ இல் இவ்விதம் "நடத்தப்படும் கர்ம சக்கரத்தை எவன் இந்த லோகத்தில் அநுஸரிக்கவில்லையோ, அவன் துன்பத்தையே ஜீவனமாகக் கொண்டும், ஐம்பொறிகளுடைய க்ரீடைக்கு (சேஷ்டைகளுக்கு) அடிமைப்பட்டும், பயனின்றி ஜீவிக்கின்றான்," என்று பகவான் உபதேசித்தார்.

காரண கார்ய ஸம்பந்தமாக இயுற்றப்பட்ட அண்டபிண்ட சராசரங்களைக் க்ரமமாக நடத்திவரும் கர்மசக்ரந்தோறும் **அறத்தின் வலிமை** ப்ரகாசிக்கின்றது.

---

## ௧. சிறப்பீனுஞ் செல்வமு மீனு மறத்தினூஉங்
## காக்க மெவனோ வுயிர்க்கு.

பதச்சேதம்: சிறப்பு ஈனும், செல்வமும் ஈனும், அறத்தின் ஊங்கு ஆக்கம் எவன் ஓ உயிர்க்கு.

அர்த்தம்: அழிவற்ற சிறப்பென்னும் மோக்ஷத்தையும் நாநாவித செல்வத்தையும் அறம் கொடுக்கும். [ஆதலால் மனுஷர்களுக்கு] அறத்துக்கு மேலான பூரிப்பைச் செய்யும் பொருள் என்ன உள்ளது.

சிறப்பு=அழகு. ப்ரக்ருதி வஸ்துக்களாகிய பொன் பெண் மணி முதலியவை அழகு பொருந்தியனவாயிருந்தும், இவை தோன்றி அழியுமாதலால், இவற்றின் அழகு அழகெனப்படாது. மாறாத அழகையுடைய வஸ்து பரிசுத்த ஆத்மாவே என்பது பற்றி, அதன் நிலையாகிய மோக்ஷத்தைச் சிறப்பென்றார்.

செல்வம்=கல்வி, தனம், தான்யம், தைர்யம், வீர்யம், சந்தானம், ஸௌபாக்யம், கீர்த்தி முதலிய ஸம்பத்களாம்.

ஈனும்=கொடுக்கும்.

புண்ய கர்மங்களைச் செய்தால் பகவானது கர்ம சக்ர நடையினால் சுகபலன்கள் வரும். நாநாவிதச் செல்வங்களும் சுகபலன்கள் என்றறிக.

மோக்ஷத்தை அறம் எவ்வாறு கொடுக்குமெனில், யஞ்ஞம், தானம், தபஸ் (அதி. உ, குறள் அ, கூ) என்ற புண்ய கர்மங்களை ஶ்ரத்தையோடு செய்கின்றவன் திருவருளால் சித்த ஶுத்தியைப் பெறுவான். பெறவே, புத்தி விசாலமாகி ஆத்ம கார்யங்களை அறிதற்கு வேண்டிய நன்முயற்சிகளைச் செய்வான். செய்யவே, ஸ்வர்க்காதி சிற்றின்பங்களில் விரகம் தோன்றிப் புண்ய கர்மங்களை ஈஶ்வரார்ப்பண புத்தியோடு அநுஷ்டிப்பான். அநுஷ்டிக்கவே, மெய்யறிவு ப்ரபல்யமாகும். ஆகவே, ப்ரக்ருதி பந்தனங்கள் யாவும் ஒழிந்து, மோக்ஷத்தைப் பெறுவான். ஆகையால், அறம் ஞானத்துக்கும் ஞானத்தால் வரும் மோக்ஷத்துக்கும் (துக்க நிவ்ருத்திக்கும்), இன்றியமையாது ஹேது எனக் காண்க.

ஊங்கு=உவ்விடம். "அங்கும் இல்லை, இங்கும் இல்லை, உங்கே இருக்கின்றது" என்ற நடையில் அங்கெனச் சுட்டிய இடத்திற்கும் இங்கெனச் சுட்டிய இடத்திற்கும் மேலான இடத்தை "உங்கு" என்பது அறிவிக்கும்.

எனவே "அறத்தினூங்கு இல்லை" என்ற பதங்கள் அறம் என்ற பொருளுக்கு மேலான பொருள் இல்லை என்று அர்த்தப்படும்.

ஆக்கம்=நிறைதலை, அல்லது பூர்த்தியைச், செய்யும் பொருள். "ஆகு" (நிறை) என்ற பகுதியினின்று "ஆக்கு" எனப் பிறவினையாகத் திரிந்து, தொழிற்பெயர் விகுதியாகிய "அம்"



பெற்று, ஆக்கம் எனத் தோன்றி, நிறைப்பித்தல் எனப் பொருள்படும்.

குறையுள்ள பொருள் நிறைவைப் பெறுவது லக்ஷ்மியின் ஶக்தி விலாஸத்தால் ஆதலின், ஆக்கம் லக்ஷ்மிக்கும் செல்வத்திற்கும் பர்யாய நாமமாயிற்று.

ஈண்டு, அறத்தினூங்கு ஆக்கம் இல்லை என்ற பதங்கள் அறத்திற்கு மேலான பூர்த்தியைச் செய்யும்ஶக்தி இல்லை எனப் பொருள்படும்.

அறமானது எவ்விஷயத்தில் பூர்த்தியைச் செய்யுமெனில், அன்பிலும் அறிவிலும் என்க. அவா முதலிய மலங்களால் பந்திக்கப்பட்டு அன்பிலும் அறிவிலும் சிறுமையைப் பெற்ற ஆத்மா அறத்தால் மெல்ல மெல்லப் பெருமையை (பூரிப்பை)ப் பெறும்.

உயிர்=ஜீவன். "உய்" (வாழ்) என்ற முதல் நிலையோடு "இர்" என்ற பெயர்விகுதி சேர்ந்து, "உயிர்" எனவாகி, வாழ்தலையுடையது என்று பொருள்படும். இதைப்போலவே "பயிர்" "மயிர்" என்ற மொழிகள் வந்தன. "பை" (பசுமை) உடையது, பயிர்; "மை" (கருமை) உடையது. மயிர். எது உய்தலைப் பெற்றதோ அஃது உயிர் எனப்படும்.

ஸம்ஸ்க்ருதத்திலும் "ஜீவஃ" என்ற பதம் ஜீவித்தலைப் பெற்ற வஸ்து என்று அர்த்தமாகும். மலத்தில் அகப்பட்டு ஒன்றையும் அறியாமல் ஜடப்பொருள் போலிருந்ததற்குப் பகவான் ப்ராணன் (மூச்சு) முதலிய வாயுக்களையும் அந்தஃகரணங்களையும் புறக்கரணங்களையும் கர்மேந்திரியங்களையும் ஸூக்ஷ்ம சரீரம் ஆக அருளியவுடனே, "ஜீவன்" அல்லது "உயிர்" என்ற நாமத்தைப் பெற்றது. ஸூக்ஷ்ம ஶரீரத்தைப் பெற்ற பிறகு, ஜீவாத்மா ஸ்தூல சரீரம் என்ற மாம்ஸ தேகத்தைப் பெறும். அநேகநேக ஸ்தூல ஶரீரங்களைப் பெற்ற ஆத்மாவும் ஸூக்ஷ்ம சரீரமும் அறநெறியில் நின்று மலத்தை ஒழித்தபின், ஆத்மா மோக்ஷத்தை அடையும்.

எவனோ என்பதில் ஓகாரம் அசைநிலை.

எவன் என்ற வினைப்பெயர் ஒன்றுமில்லை என்றதைச் சுட்டும். எவன் "என்" எனவும், "என்னை" எனவும், வரும்.

**௨. அறத்தினூங் காக்கமு மில்லை யதனை**
**மறத்தலி னூங்கில்லை கேடு.**

பதச்சேதம்: அறத்தின் ஊங்கு ஆக்கமும் இல்லை, அதனை மறத்தலின் ஊங்கு இல்லை கேடு

அர்த்தம்: அறத்திலும் மேற்பட்ட பூர்த்தியைச் செய்யும் பொருள் வேறொன்றுமில்லை. அவ்வறத்தை அயர்ந்து இருத்தலினும் மேற்பட்ட அழிவு வேறொன்றுமில்லை.

முதற்குறளில் "அறத்தினூங் காக்கமு மில்லை" என்று உபதேசித்த சொற்களையே இரண்டாங் குறளினும் உபதேசித்தது அறத்தின் வலி தெரியாது வாழும் மாக்கள் தெரிந்து ஈடேறுதற் பொருட்டே. அறனை மறத்தல் எவ்விதம் கேட்டைப்பயக்கும் என்று பகவத்கீதை அத் ௨, மந்த்ரங்கள் 62, 63ல் பின்வருமாறு விளக்கி இருக்கிறது:—

"இந்த்ரியங்கள் கவர்ந்தவிஷயங்களை ஜீவாத்மாவின்மனஸ் பற்றினால், அவ்விஷயங்களுக்கும் மனஸுக்கும் ஒரு ஸங்கம் (புணர்ச்சி) உண்டாகின்றது.

"அந்த ஸங்கத்தின் வழியால் ஆசை தலைப்படுகின்றது.

"ஒருவனுக்கு தோன்றிய ஆசையை இன்னொருவன் தடுத்தால், ஆசையே கோபமாகிப் பரிணமிக்கின்றது.

"கோபத்தில் நின்று அறிவை மறைக்கும் மோகம் பிறக்கின்றது.

"பெருமோகத்தில் நின்று ஸ்ம்ருதிச்சேதம் (தர்மவிதிகளின் சீர்கேடு) உண்டாகின்றது.

"ஸ்ம்ருதிச் சேதத்தால் புத்திநாசம் உண்டாகின்றது.

"புத்திநாசத்தால் ஜீவாத்மா கெடுகின்றான்"(மலத்தில் மிகவும் அழுந்தி அறிவையும் அன்பையும் இழக்கின்றான்)

ஸ்ம்ருதிச் சேதத்தை நாயனார் அறன் மறத்தல் என்றார்.

அறனை மறத்தல் **மறம்** எனப்படும்.

ஒருவனது அறமும் மறமும் (தர்மமும் அதர்மமும்) அவனை விடாது பின் தொடர்ந்து, வரும் பிறப்பிற், பற்றும். அறம் இன்றியமையாத் துணையாகி ஸுக வாழ்வைக் கொடுக்கும். மறம் தடையாகித்துன்பத்தையும்தாழ்வையும் கொடுக்கும்



மஹாபாரதம், அநுஶாஸந பர்வம், அத். 173இல், ப்ரஹஸ்பதி பகவான் தர்மபுத்திர ராஜனுக்கு இவ்வாறு உபதேசித்தார்,—

"மானுடன் ஒருவனாகவே பிறக்கிறான், ஒருவனாகவே இறக்கிறான், ஒருவனாகவே நரகங்களைத் தாண்டுகிறான், ஒருவனாகவே ஸ்வர்கத்திற்குப் போகிறான். தந்தை தாய் ஸஹோதரன் புத்ரன் ஆசாரியன் தாயாதிகள் சுற்றத்தார் ஸ்நேகிதர் முதலிய யாவரும் துணையாகார். மானுட தேகத்தை எடுத்துச் சிலகாலம் உபயோகப் படுத்திய உயிர் தான் போகவேண்டிய பொழுது தேகத்தைக் கோது போல எறிந்துவிட்டு வேறுமுகமாகப் போகும். தர்மம் ஒன்றே பின் தொடர்கிறது. ஆதலால், எப்பொழுதும் தர்மத்தையே துணையாகக் கொள்ள வேண்டும். ஒருவன் தர்மத்தோடு ஸ்வர்க்க லோகம் போவான். அதர்மத்தோடு நரக லோகம் போவான். அறிவாளி நியாயமாக ஸம்பாதிக்கப்பட்ட பொருளால் தர்மத்தைச் செய்யவேண்டும். ஆசையினால் மதிகெட்டவன், விருப்பு வெறுப்பால் ஏவப்பட்டு, தனக்காகவும் பிறருக்காகவும் பாபகர்மங்களைச் செய்து, அநேக துன்பங்களைப் பெறுகிறான்."

இந்த உபதேசத்தைக் கேட்ட யுதிஷ்டிரர், **தர்மமும் அதர்மமும் எவ்விதம் ஒருவனைத் தொடரும்** என்று வினவியதற்கு, ப்ருஹஸ்பதி பகவான் ப்ருத்வி அப்பு தேயு வாயு ஆகாசம் என்ற பஞ்ச பூதங்களின் அதி தேவதைகளும், ஸூக்ஷ்ம ஶரீரம் என்னும் புத்தி முதலிய கரணங்களும் பஞ்ச வாயுக்களும் கர்மேந்த்ரியங்களும் ஒருவன் செய்த தர்மாதர்மங்களில் நின்றுதோன்றிய கர்ம பீஜங்களைத் தாங்கும்எனவும், பரமேஶ்வரனது கர்ம சக்ர நடைப்படி அவை நியமிக்கப்பட்ட காலத்தில் பக்வப்பட்டுப் புசிப்பிற்கு வரும் எனவும், விடை அளித்தார்.

இவ்வாறு தர்மாதர்ம பீஜங்கள் ஜீவாத்மாவைத் தொடர்ந்து பற்றுமென விளக்கிய உண்மையை ஆகம ஶாஸ்த்ரங்கள் பழவினைப் பலன்கள் புசிப்பிற்கு வராத வரையில் ஆறு அத்வாக்களாகிய மந்த்ரம் பதம் வர்ணம் புவனம் தத்வம் பஞ்ச கலைகளில் கட்டுப்பட்டு இருக்குமென்று கூறும். மந்த்ரம் ௰க-ம்,

பதம் ௮௰௧-ம், வர்ணம் ௫௰௧-ம், தொனிரூப ஆகாச அம்சங்கள். புவனங்கள் ௨௱௨௰௪-ம் பஞ்ச பூத அம்சங்கள். தத்வங்கள் பல ஸூக்ஷ்ம சரீரமாகும். பஞ்ச கலைகளாகிய நிவ்ருத்தி முதலியவைகள் கர்ம சக்ரத்தை நடாத்தி வரும் திருவருள் எனக்கொள்க.

இந்தகுறளில் அறத்தின் ஸூக்ஷ்ம கதியை அறிதற்குத் தக்க ஆசானிடம் ஸ்ரவணம் செய்யவேண்டும் என்றும், ஆசை கோபம் பொறாமை முதலிய மலசக்திகள் மனசிலேறாமல் ஜாக்ரதையாகக் காக்கவேண்டும் என்றும், இப்படிக் காவாது போனால் ஜீவாத்மாவின் சிற்றறிவும் சிற்றன்பும் மிகக்குன்றி மானுடப் பிறப்பை இழக்கும் என்றும், இதனினும் பெருங்கேடு வேறில்லை என்றும் உபதேசித்தார்.

---

### ௩. ஒல்லும் வகையா னறவினை யோவாதே செல்லும்வா யெல்லாம் செயல்.

பதச்சேதம்: ஒல்லும் வகையால் அறம் வினை ஓவாதே செல்லும் வாய் எல்லாம் செயல்.

அர்த்தம்: இயன்ற வழிகளால் அன்புநிறைந்த கர்மங்களை இடைவிடாமல், நீ செய்யவேண்டிய இடங்களில் எல்லாம் சென்று, செய்க.

ஒல்லும்=முடியும், இயலும். (ஒல்லுதல்= இயலுதல். ஒல்லாமை=இயலாமை)

அறவினை=அன்பு நிறைந்த கர்மங்களை.

ஓவாது=நீங்காது. (ஓவுதல்=நீங்குதல்)

செல்லும் வாயெல்லாம்=எங்கெங்கு மனம்வாக்குக் காயங்களால் ஹித கர்மங்களைச் செய்யவேண்டுமோ, அங்கங்கு எல்லாம்.

செயல் என்னும் பதம், "செய்" என்னும் பகுதியோடு "அல்" என்னும் வியங்கோள் (ஏவல் கொள்ள வரும் விகுதி) கூடிச், செய்க எனப் பொருள்படும்.



இந்தக் குறளில் இயன்ற வழிகளால் அன்போடும் ஸ்ரத்தையோடும் நற்கர்மங்களைச் செய்யவே வேண்டுமென்று கூறி, அடுத்த குறளில் அறம் பொருள் இன்பம் எனும் புருஷார்த்தங்களுள் அறம் மாத்ரமே சித்தசுத்தியையும் அதற்குரிய சுகத்தையும் அருளுமென்றும், மற்றவையின் பேறு இழவுகளைப்பற்றிக் கவலையும் துன்பமும் வருமென்றும், விளக்குவாராயினார்.

---

### ௪. மனத்துக்கண் மாசில னாதல னைத்தற மாகுல நீர பிற.

அந்வயம்: மனத்துக்கண் மாசு இலன் ஆதல் அனைத்து அறம், பிற ஆகுலம் நீர.

அர்த்தம்: மனசில் மறு இல்லாதவனாகுதலைச் செய்யத் தக்கது எதுவோ, இத்தகுதியை உடையது அறம். ஏனைய பொருளும் இன்பமும் துன்புறுத்தும் தன்மையை உடையன.

மனத்துக்கண் மாசு=மனசிலுள்ள மல காரியங்கள். இவற்றை ஐந்தாவது குறளில் அழுக்காறு அவா வெகுளி இன்னாச் சொல் என்று குறித்திருக்கிறார்.

இலனாதல்= இல்லாதவனாகுதலைச் (செய்யத் தக்கது எதுவோ).

அனைத்து=அத்தன்மைத்து=அந்தத் தன்மையை உடையது.

"அனைத்து" என்ற பதம் "அன்ன" என்ற உவமை வாசகத்தின் திரிபு. அத்தகைய (அந்தத் தகுதியை உடைய) எனப் பொருள்படும்.

அனையது=அத்தகையது (அந்தத் தகுதியை உடையது).

அனைத்து=அத்தகைத்து (அந்தத் தகுதியை உடையது).

அறம் எத்தகைத்து (எத்தன்மையை உடையது) எனில், மாசில்லாதவனாதலைச் செய்யும் தகைத்து (தன்மையை உடையது) என்க. அஃதாவது, எது சித்தஶுத்தியைச் செய்யத் தக்கதோ அது அறம் எனப்படும்.

"அனைத்து" (அத்தகைத்து) என்ற விடைமொழியில் வினமொழியாகிய "எத்தகைத்து" தொக்கி நிற்கின்றது. இது பற்றி, "இலனைதல்" என்ற மொழிக்கு மேல் எழுதப்பட்ட உரையில் மாசில்லாதவனைகுதலைச் செய்யத்தக்கது எதுவோ என்ற வினமொழிகள் நாட்டப்பட்டன.

**பிற**= த்ரிபதார்த்தங்களுள் (முப்பாலுள்) அறமல்லாத ஏனைய பொருளும் இன்பமும் (அர்த்தமும் காமமும்).

**ஆகுலம்** நீர=துக்கத்தைக் கோடுக்கும் தன்மையை உடையன.

**ஆகுலம்**=கவலை, துன்பம்.

நீர=தன்மையை உடையன. (நீரது=தன்மையை உடையது). இவை "நீர்மை" (தன்மை) என்னும் பண்பின் திருபு.

வீடு வயல் தோட்டம், மனைவி மக்கள் சுற்றத்தார். பணம் நகை பண்டி, வேலை நாட்டாமை அரசு, முதலியன **பொருள்** எனப்படும். மாதர் ஆடவர் சேர்க்கையால் வருவது **இன்பம்** எனப்படும். பொருள் இன்பம் என்றவற்றின் பேறுலும் காப்பாலும் கவலை உண்டாகும். அவற்றைப் பெருமையாலும் பெற்று இழத்தலாலும் துக்கம் உண்டாகும். ஆதலால், இவை "ஆகுல நீர" என்றார்.

முப்பால்களில் அறம் அழிவற்ற நன்மையாகியசித்தசுத்தியைக் கொடுக்குமென்றும், பொருளும் இன்பமும் துன்புறுத்துமென்றும் இந்தக் குறளிற் கூறி, அடுத்ததில் அவாமுதலிய மலங்களை விலக்கி ஆத்மோபாய ஜீவனோபாய கர்மங்களைச் செய்தல் அறம் என்று உபதேசித்தார்.

---

## ௫. அழுக்கா றவாவெகுளி யின்னாச்சொன் னான்கு மிழுக்கா வியன்ற தறம்.

பதச்சேதம்: அழுக்காறு அவா வெகுளி இன்னாச்சொல் நான்கும் இழுக்கா இயன்றது அறம்.

அர்த்தம்: ஆணவமலமும் ஆசையும் கோபமும் கொடுஞ்சொல்லும் ஆகிய நான்கையும் விலக்கித் தன் இயல்பில் நின்றது அறம் எனப்படும்.



**அழுக்காறு**=அழுக்காக்கும் பொருள், ஆத்மாவைப் பழுதாக்கும் வஸ்து; மலம் (பக்கம் 47).

கைப்பைச் செய்யும் தன்மை "கையாறு" என்றுவது போல, அழுக்கைச் செய்யும் தன்மை "அழுக்காறு" ஆயது.

ஸம்ஸ்கிருதத்தில் **மலம்** எனப்பட்ட அழுக்காறு ஆணவமலம் (ப. 46-47) மாயாமலம் க்ர்மமலம் (ப. 48) என மூவகைப்படும். இவற்றில், அணு ரூப பீஜமாய் (விதையாய்) நின்று மற்றைய இரண்டு மலங்களுக்கும் ஆதாரமாயிருப்பது **ஆணவமலம்** ஆம்.

ஸ்வபாவம் செய்தலே—தன்னையே பாவனைசெய்து பாராட்டிக் கொண்டிருத்தலே - ஆணவமலத்தின் தன்மை. மனசில் ஏறி நான் வேறு நீ வேறு என்றும், நான் பெரியவன் நீ சிறியவன் என்றும், எனக்கு இது வேண்டும் அது வேண்டாம் என்றும், எனக்கு இன்பங்களும் உனக்குத்துன்பங்களும்பெருகட்டும் என்றும், பலவிபரீத நினைவுகளை உண்டு படுத்தி, எப்பொழுதும் தனது சலனத்தையும், தனது ஆருமையையும், ஆத்மாவில் ஆரோபித்து அதனைத் துன்பப் படுத்தும்.

**அவா**=ஆசை. இது வேண்டுதல் வேண்டாமை (விருப்பு வெறுப்ப) என்ற த்வந்தவங்களைப் பெற்றது. விருப்பில் நின்று மோஹம் மதம் ராகம் விஷாதம் தாபம் சோஷம் வைசித்ரயம் விரிந்தன. வெறுப்பில் நின்று அருவருப்புப் பொருமை பகை ஈயாமை விரிந்தன.

ஆசை தணல் போன்றது. விஷயங்களைப் பற்றி எரியும். ஒன்றைப்பற்றிப் புசித்தபின் வேறொன்றை நாடும். போதும் என்ற தன்மை அதற்கில்லை. ஆசையிற் சிக்குண்ட ஜீவனுக்கு அறிவும் அன்பும் குன்றும். இவை குறைய ஆசை பெருகும். இந்த நிலையில் ஆசையே தான் என்று ஜீவாத்மா மயங்கிக் கெடும்.

அறத்தை மறவாதவர்கள் அந்த தேவாத்மஶக்தியாற் காக்கப்பட்டு மேன்மேலும் அறிவிலும் அன்பிலும் வ்ருத்தி பெறுவார்கள்.

**வெகுளி**=தான் கொண்ட ஆசையை வேறொருவன் தடுத்

தலால் ஜன்ய மாகும் கோபம்.

ஓடுகின்ற தண்ணீர் தடைபெற்ற வுடனே நுரைத்துப் பாய்வது போல, தடைபெற்ற ஆசை கோப ரூபத்தைத் தரிக்கின்றது. இது ப்ராண வாயுவைச் சீறச் செய்யும்; புத்தியைத் தடுமாறச் செய்யும். உடனே அதற்கு ஶாந்தி செய்யாது போனால், தேகத்தில் எரிவையும் நாக்கில் வரட்சியையும் கடைவாயில் நுரையையும் உண்டுபண்ணும். கண்ணிலுள்ளநரம்புகளைச் சிவக்கச் செய்யும். புத்தியை மயக்கிச் கொடிய பாவங்களைச் செய்விக்கும்.

இன்னாச்சொல்=இனிமை யற்ற சொல். கேட்பவர்களது மனசில் துன்பத்தை விளைவிக்கும் சொல்.

அழுக்காற்றைப் பற்றி இந்நூலில் பதினேழாம் அதிகாரத்திலும், வெகுளியைப்பற்றி முப்பத்தோராம் அதிகாரத்திலும், இன்னாச் சொல்லைப்பற்றி முப்பத்திரண்டாம் அதிகாரத்திலும், அவாவைப்பற்றி முப்பத்தெட்டாம் அதிகாரத்திலும் காண்க.

இழுக்கா=இழுக்கி, விலக்கி.

உலக வழக்கில் இழுக்கா என்பது இழுக்காது என்று எதிர் மறைப்பொருளை உணர்த்தும். ஈண்டுச், செய்யுள் வழக்குப்படி, உடன்பாட்டை உணர்த்தும்.

இயன்றது=தனக்கு இயல்பான ஆத்மோபாய ஜீவனோபாய கர்மங்களில் நின்றது.

---

**௬. அன்றறிவா மென்னா தறஞ்செய்க மற்றது**
**பொன்றுங்காற் பொன்றாத் துணை.**

பதச்சேதம்: அன்று அறிவாம் என்னாது அறஞ் செய்க, மற்று அது பொன்றுங்கால் பொன்றாத துணை.

அர்த்தம்: வரும் நாட்கள் ஒன்றில் புண்ய கர்மத்தை ஆராய்ந்து செய்வோம் என்று சொல்லாமல், ஒவ்வொருநாளைக்குரிய கர்மத்தை முன்பே விசாரித்து அன்போடு செய்க. அது இறக்கும்பொழுது இறவாத துணையாகும்.

அன்று=அந்நாளில். வரும் நாற்களுள் வசதிப்படி ஒரு நாளில்.



அறிவாம் என்னாது=ஆராய்வோம் என்று நினையாமல்.

அறஞ்செய்க=(அன்றன்றைக்குரிய) தர்மத்தைச் செய்வாயாக.

"நெருநல் (நேற்றைக்கு) உளனொருவன் இன்றில்லை என்னும் பெருமையுடைத்து இவ்வுலகு" (அதி. ௩௪, கு. ௬) எனவும், "இன்றைக் கிருந்தாரை நாளைக்கிருப்பரென் றெண்ணவோ திடமில்லையே," எனவும் வருந் திருவாக்குகளின் உண்மையை லோகத்தவர் அறிந்திருப்பதால், அவர்கள் செய்ய வேண்டிய தர்மத்தை நாளைக்கு நாளையன்றைக்கு எனத் தவணை குறியாது இன்றைக்கே செய்வது புத்தியென்று அறிக.

மற்று அசை நிலை.

அது=இன்றே செய்யப்பட்ட புண்ய கர்மம்.

பொன்றுங்கால்=இறக்கும் காலத்தில். (பொன்றுதல்=இறத்தல், அழிதல்).

பொன்றாத்துணை=அழியாத துணை.

தேகத்தை விட்டுப் பிரிந்த உயிரோடு புண்ய கர்மத்தின் பலன் அழியாது, தொடர்ந்து வேறொரு பிறப்பு எடுக்கும்வரையிலும், புசிப்புக்கு வருவதால், "பொன்றாத்துணை" என்றார். கர்மபலன் எவ்வாறு ஒருவனைத் தொடர்ந்து பிடிக்கும் என்பதை அதி. ௪. குறள் ௨ க்குரிய உரையிற் காண்க. (ப. 95.)

---

**௭. அறத்தா றிதுவென வேண்டா சிவிகை**
**பொறுத்தானோ டூர்ந்தா னிடை.**

பதச்சேதம்: அறத்து ஆறு இது என வேண்டா சிவிகை பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை.

அர்த்தம்: அறத்தின் வழி இது தான் என்று விரித்து உரைக்க வேண்டியதில்லை. (ஏனெனில்) பல்லக்கைச் சுமப்பவனிடத்திலும் (அதில்) ஏறிச் செலுத்துபவனிடத்திலும் (உள்ள இன்ப துன்பங்களைத் தானே பார்த்து அறியலாமாதலால்).

அறத்தாறு=தர்மத்தின் ஸூக்ஷ்ம கதி.

அறம் விதிவிலக்கு ரூபமாயிருந்து விதிக்கப்பட்ட கர்மங்களை ஶ்ரத்தையோடு செய்தவனுக்கு சுப பலன்களையும், இவற்றை மறந்தவனுக்கும், நிஷேதிக்கப்பட்ட கர்மங்களை அநுசரித்தவனுக்கும், அசுப பலன்களையும், கொடுக்கும் என்ற காரண கார்ய ஸம்பந்தமே அறத்தின் சூக்ஷ்ம கதி.

வேண்டா=(கூற) வேண்டியதில்லை.

ஊர்ந்தான் இடை=செலுத்துபவன் இடத்தில் (காணலாம்). ஊர்தல்=செல்லுதல், செலுத்துதல்.

கர்மமும் கர்மபலனும் காரண கார்ய ஸம்பந்தமாகவே ஸ்ருஷ்டிக்கப்பட்டன என்று இந்தக் குறளிற் கூறி, அடுத்ததில் விருப்பு வெறுப்போடு செய்யப்பட்ட காம்ய கர்மத்தால் பிறப்புப் பேறு இழவு இன்பம் பிணி மூப்பு சாக்காடு என்ற பலன்கள் புசிப்புக்கு வரும் என்றும், இந்தப் பிறவித் துன்ப வழியைத் தடுத்தலுக்கு நிஷ்காம்ய புத்தியோடு செய்யப்பட்ட ஈஸ்வரார்ப்பண கர்மம் இன்றியமையாத உபாயம் என்றும், போதித்தார்.

---

**௮. வீழ்நாள் படாஅமை நன்றாற்றி னஃதொரு**
**வாழ்நாள் வழியடைக்குங் கல். [வன்**

பதச்சேதம்: வீழ்நாள் படாமை நன்று ஆற்றின், அஃது ஒருவன் வாழ்நாள் வழி அடைக்குங் கல்.

அர்த்தம்: [விருப்பு வெறுப்பு என்ற த்வந்தவங்களில்] ஒருவன் விழுந்து ஜீவிக்கின்ற நாட்களில் அகப்படாமல், மேலான நன்மையைத் தரும் நிஷ்காம்ய கர்மத்தைச் செய்தால், அந்த உத்க்ருஷ்ட கர்மம் அவனுக்கு இனி வரும் பிறப்புக்குரிய வாழ்நாள் என்னும் வாய்க்காலைத் தடுக்கும் கல்லாகும்.

வீழ்நாள்=விழுந்து கிடக்கும் நாளில்.

எது எதனில் விழுந்து கிடக்குமெனில், ஆத்மாவானது விருப்பு வெறுப்பென்னும் த்வந்த்வங்களில் (தொந்தங்களில்) விழுந்து ஜீவிக்கும் நாளில் என்பது.

த்வந்தவ புத்தியின் லக்ஷணத்தையும் ஈஸ்வரார்ப்பண



க்ர்மத்தின் லக்ஷணத்தையும் அறியாமல் இந்தக் குறளை விளங்கிக்கொள்ள இயலாது. ஆதலால், ஈண்டு அவற்றை விளக்குதும்.

அறிவும் அன்பும் ஒன்றுபட்ட சொரூபியாகிய ஆத்மாவின் ப்ரகாசத்தைக் கெடுப்பது விருப்பு வெறுப்பு என்ற த்வந்தவங்கள் (விரோத ஸம்பந்தம்பெற்ற இரட்டைப் பொருள்கள் (ப. 37). இவற்றின் குணங்களைப் புத்தியில் ஏறவிட்டால், அந்தப்புத்தி த்வந்த்வப்பட்டு (தொந்தப்பட்டுத்) தனது விசாரிக்குந் தன்மையில் குறைவுபாட்டை அடையும்.

தொந்தப்பட்ட புத்தி, ஸமநிலையில் நின்று விசாரியாது, விருப்புக்கும் வெறுப்புக்கும் மாறிமாறி அடிமைப்பட்டே விசாரிக்கும். தேக சுகங்களையும் மூடர்கள் கொள்கைகளையும் அநுசரித்து, இவற்றைப் பற்றி எனக்கு (என்னுடைய தேகத்துக்கு, அல்லது மனசுக்கு) சுகமா துக்கமா, எனக்கு லாபமா அலாபமா, எனக்கு ஜயமா அபஜயமா, என்ற பேதநினைவுகளை விளைவித்துச், செய்யவேண்டிய கர்மங்களைச் செய்ய விடாமலும், செய்யப்படாதவைவையைச் செய்விக்கவும் செய்யும்.

இவ்வாறு விருப்பு வெறுப்புடன் கர்மங்களைச் செய்யும் ஜீவாத்மா பிறப்பு இறப்பு என்ற ஸம்ஸாரத்தைப் பெற்று அவற்றின் இடையிலுள்ள சுகதுக்கங்களால் வாட்டப்படும். அநேகமுறை இவ்வாறு வாட்டப்பட்ட புத்தி த்வந்தவ மோஹத்தின் கேடுகளை அறிந்து, எவ்விதம் இந்தத் துக்கங்களைத் தீர்க்கலாம் என்று யோசித்து, துக்க நிவிர்த்திக்குரிய உபாயங்களைத் தேடித் திரியும். இந்தப் பக்வகாலத்தில் தக்க குருவாயிலாக ஸமத்வ புத்திப் பழக்கத்தாலும் ஈஸ்வரார்ப்பண கர்மாநுஷ்டானத்தாலும் யோகஸாதனைகளாலும் அதை அடையலாமென்று அறியும் அறிந்து "நான் கர்த்தா, நான்போக்தா" என்ற கர்த்ருத்வ போக்த்ருத்வ மோகங்களை விட்டு, ஈஸ்வரார்ப்பண கர்மமே உத்க்ருஷ்ட கர்மம் என்று நிச்சயித்து, அதனை ஒவ்வொரு சமயத்திலும் அனுஷ்டித்து வரும்.

இது பற்றி "வீழ் நாள் படாமை நன்றாற்றின்" என்பது சுகதுக்கம் என்ற த்வந்த்வ மோகத்தில் ஆத்மா விழுந்து உழலும் நாட்களில் அகப்படாமல், ஈஸ்வரார்ப்பண கர்மத்தைச்

செய்தால், எனப் பொருள்படும்.

படாமை=பொருந்தாமல். படுதல்=பொருந்தல்.

**நன்று ஆற்றின்**=மேலான நன்மையைத் தரும் ஈஸ்வரார்ப்பண கர்மத்தைச் செய்தால்.

பகவத் கீதையில் அர்ஜுநநுக்கு பகவான் கர்மங்களின் முக்ய பிரிவுகளை எடுத்துக் கீழ்வருமாறு விரிவாகக் கூறியிருக்கிறார்.

அத். ௨. மந்த்ரங்கள் ௪௰௯—௫௰௧ இலும், ௩ ௨௰௫ இலும், ௪. ௰௯ இலும் **கர்மம்** பலன்களைப்பற்றி உயர்வு தாழ்வு எனப்படுமென்றும், தாழ்ந்த பலன்களைப் பெற்ற கர்மம் **அவர கர்மம்** என்றும், உயர்ந்த பலன்களைப் பெற்ற கர்மம் **வரகர்மம்** என்றும் பெயர்பெற்றதென்று விளக்கி, இகபர விஷயசுக பலன்களில் விருப்பங்கொண்டு செய்யப்பட்ட **காம்ய கர்மம்** அநித்ய சிற்றின்பங்களிலும் ஆதிவியாதி என்ற துன்பங்களிலும் ஆத்மாவை அழுத்திக் கெடுக்கும் என்றும், விஷயசுகங்களில் பற்றில்லாமல் ஸமத்வபுத்தியோடு செய்யப்பட்ட **நிஷ்காம்ய கர்மம்** ஆத்மாவை அவித்யாவென்னும் மலஇருளில் நின்று உத்தரணம் செய்யும் என்றும், திருவாய் மலர்ந்தருளினர்.

மேலும், அத் ௪ மந்த்ரங்கள் ௨, ௩ இல், இந்த நிஷ்காம்ய கர்மாநுஷ்டாணம் **கர்ம யோகம்** என்று பெரியோரால் பேசப்படும் என்றும், இது கர்மங்களில் **உத்தம கர்மம்** என்றும், **மிகரஹ்ஸ்யமானவித்தை** என்றும், வெகுகாலமாக பூலோகத்தில் அநுஸரிக்கப்படாமல் மஹாபாரத யுத்த காலத்தில் நாஸத்தை அடைந்தது என்றும், மீளவும் அது தர்ம சிந்தனையுள்ள பக்திமான்கள் உய்யும் பொருட்டுக் கர்ண பரம்பரையாக ஸ்தாபிக்கப்பட்டது என்றும் விளக்கி இருக்கின்றது.

தற்காலத்திலும் இந்த நிஷ்காம்ய கர்மாநுஷ்டானம் அழுக்காறு பொருமை வெகுளி இன்னுசொல் பயதுக்க நிவர்த்திக்கு இன்றியமையாத ஸாதனம் என்று கல்விமான்களும் சிலரைத்தவிர அறியாமல் இருக்கிறார்கள்.

ஆகவே, **வீழ்நாள் படாமை** என்ற பதங்கள் காம்ய கர்மத்தையும் அதன் அல்ப பலன்களாகிய சிற்றின்பங்களையும்,—



**நன்றுற்றின்** என்ற பதங்கள் நிஷ்காம்ய கர்மத்தையும் அதன் மேலான பலன்களாகிய ஸமத்வபுத்தி சித்தசுத்தி விவேகம் ஞானதிகரரம் என்றவற்றையும்,—**வாழ் நாள் வழி** என்ற பதங்கள் பிறப்புக்கும் இறப்புக்கும் இடையிலே புசித்தலுக்கு வகுக்கப்பட்ட பேறு இழவு இன்பம் பிணி மூப்பு என்றவற்றையும், சுட்டுகின்றன.

இனி, **வாழ் நாள்** யாதென்று விசாரிப்போம்.

நல்ல வாழ்வாகிய ஆத்ம பரிசுத்திக்காகவே இந்த லோகத்தில் பரமேஸ்வரன் எங்களை வசிக்கச் செய்கின்றார். மலம் என்னும்ஆசையில் அகப்பட்ட ஆத்மாக்களை ஈடேற்றும்பொருட்டு, மலவஸ்துவாகிய ப்ரக்ருதியைக் கொண்டே பூலோகம் முதலிய லோகங்களையும் அவற்றிலுள்ள பொருள்களையும் உண்டாக்கி, உயர்தர ஆத்மாக்களை மனுஷ தேகங்களில் அமைத்தார்.

இவர்களில் பெரும்பாலார், தோன்றி மாறி இறக்கும் த்ருஸ்யப் பொருள்களை மெய்யென்றும், தாங்கள் அநுபவிக்கும் சுகங்களைவிட வேறு சுகங்கள் இல்லையென்றும், தங்களுக்குக் கிடைத்த பொருள்களைப் பத்ரப்படுத்தலும் கிடையாதவைகளை ஆவலோடு தேடுதலுமாகிய “யோக க்ஷேமம்” என்பவைகளை மனம் பற்றியேயிருக்கவேண்டுமென்றும், லோகத்தார் மதிக்கும் பொருள்களை எவ்விதமும் சம்பாதித்து, யஜ்ஞ தான கர்மங்களை மறந்து, மூட்டை மூட்டையாகக் கட்டிவைப்பதே புத்தியென்றும், ஜீவிப்பார்கள். இந்த சிற்றறிவாளிகளுக்கு அழியும் பொருள்களைத் தேடிப் பாதுகாத்தலும் விஷய சுகங்களில் மோகங்கொள்ளுதலும் சிறந்த வாழ்வெனத் தோற்றும்.

ஆனால், ஆத்மாக்களை ஆசையில்நின்று நீக்குவதற்கே பரமேஸ்வரன் லோகங்களைப் படைத்துக் காக்கின்றார் என்ற உண்மையை அறிந்த மஹான்கள், ஐம்பொறி விஷயங்களிற் பற்றில்லாது ஜீவித்துத், தர்மசிந்தனையோடு சம்பாதித்த பொருளை யஜ்ஞம் தானம் தபஸ் என்ற புண்ய கர்மங்களிற் செலுத்தி, சித்த சுத்தியோடு பரமேஸ்வரனை வழிபடுதலே நல்லவாழ்வென்பார்கள்.

இதுபற்றி மாணிக்கவாசகர், பிடித்தபத்து ௧ இல்,

"வாழ்வற வாழ்வித்த மருந்தே" என்றார். அஃதாவது, காம்ய கர்மாநுஷ்டானமே நல்ல வாழ்வென்று நிச்சயித்திருந்த மூட புத்தியைக் கெடுக்குமாறு என்னை ஆட்கொண்டு, முத்திக்கு இன்றியமையாத ஸாதனங்களாகிய ஈஶ்வரார்ப்பண கர்மாநுஷ்டானத்தையும் ஆத்ம ஞானத்தையும் போதித்த சஞ்ஜீவியே, என்க.

ஆகவே, ஈண்டு வாழ்நாள் விருப்பு வெறுப்பு என்ற த்வந்த்வங்களிற் சிக்குண்டு ஜீவிக்கின்றகாலம் என்று அர்த்தப்படும். இத்தகையான காம்ய வாழ்வு அறுபட்டால், நிஷ்காம்ய கர்மாநுஷ்டானம் என்னும் மெய்வாழ்வு ஸித்திக்கும்.

வாழ்நாள் வழி=வாழ்நாளின் வழியை=விருப்பு வெறுப்பைக் காரணமாகக் கொண்ட பிறப்பையும் இறப்பையும் இவற்றிடையிலுள்ள பேறு இழவு இன்பம் பிணி மூப்பு என்ற பலன்களையும் புசிக்கின்ற காலத்தின் வரவை.

அடைக்குங் கல்=தடைசெய்யும் கல்.

காம்ய (விருப்பு வெறுப்புள்ள) வாழ்வுக்குரிய இன்ப துன்பங்களை வாராமற் பண்ணுதலுக்கு நிஷ்காம்ய கர்மாநுஷ்டானம் அத்யாவஶ்யம் என்பதுபற்றி, காம்ய வாழ்வானது சிற்றின்பங்களுக்கும் பிறவித் துன்பங்களுக்கும் "வழி" என்றும், இந்த வழியை அடைப்பதற்கு நிஷ்காம்ய கர்மம் "கல்" என்றும், வர்ணிக்கப்பட்டது.

விருப்பு வெறுப்பென்ற த்வந்த்வங்களை ஒழிப்பதற்கே பிறப்பும் இறப்பும் பகவானால் அருளப்பட்டமையால், அவற்றில் தோஷங்களை ஏற்றலாகாது. தோஷங்கள் த்வந்த்வ புத்தியோடுசெய்யப்பட்ட கர்மங்களில் உள்ளன. தாயுமானஸ்வாமி, தமக்கு வைராக்யம் அருளப்பட்டால், இல்வாழ்க்கையில் இன்னும் புகுந்து அதன் விசேஷ கர்மமாகிய சிவனடியார் தொண்டைச் செய்வார் என்றும்; ஞான நிஷ்டையின் நிமித்தம் துறவையும் பூண்பார் என்றும்; திரிகரண அடக்கம் வாய்த்தால், இன்னம் பிறவியைப்பெற விரும்புவார் என்றும், பகவானைச் சிவன்செயல் ஏ இல் கீழ்வருமாறு போற்றினர்,—

மறமலி உலக வாழ்க்கையே வேண்டும்
வந்துநின் அன்பர்தம் பணியாம்



அறமது கிடைக்கின் நன்றி; ஆனந்த
அற்புத நிஷ்டையின் நிமித்தம்
துறவது வேண்டும்; மௌனியாய் எனக்குத்
தூய நல்லருள்தரின், இன்னம்
பிறவியும் வேண்டும், யானெனது இறக்கப்
பெற்றவர் பெற்றிடும் பேறே.

### ௯. அறத்தான் வருவதே யின்பமற் றெல்லாம்
### புறத்த புகழு மில.

பதச்சேதம்: அறத்தான் வருவது இன்பம், மற்று எல்லாம் புறத்த, புகழும் இல.

அர்த்தம்: அறம் என்ற புருஷார்த்தத்தால் பெறுவதே சுகம். [அறத்தை மறந்து] பொருள் இன்பம் என்ற புருஷார்த்தங்களால் பெறுவது துன்பம். இவற்றால் இகழ்ச்சியும் உண்டு.

அறத்தான் வருவதே இன்பம்=அறம் என்ற புருஷார்த்தத்தை வழுவாது அநுஸரித்துத் தனக்குரிய கர்மங்களை மாசற்ற மனஸோடு செய்கின்றவனுக்கு அநேக சுகபலன்களுடன் அசல புத்தியும் த்ருப்தீகரமும் அமையும்.

ஒருவனுக்கு அருளப்பட்ட செல்வத்தில் போதுமென்ற சித்தம் இல்லையாயின், அவனுக்கு எவ்வளவு செல்வம் இருந்தும் அஃது இனியதாகாது. உள்ளதே போதும் என்றிருப்பவனே பாக்கியவான். இவனுக்கு உரியது உயர்வுதாழ்வற்ற இன்பம். இவன் மனஸில் விளையும் அற்புத சுகாநுபோகத்திற்குக் காரணம் முற்பிறவியில் அதிஶ்ரத்தையோடு சாதிக்கப்பட்ட அறமே.

மற்றெல்லாம்=மூவித புருஷார்த்தங்களில் அறத்தைத் தவிர்த்துத் தேடப்படும் ஏனைய புருஷார்த்தங்களாகிய பொருளும் இன்பமும்.

அறத்தில் ப்ரதிஷ்டை பெறாத பொருட்பேறும் ஆசை கூர்ந்த மாதர்ப்பேறும் துன்பத்தையே தரும். இவ்விஷயங்களில் அறத்தை மறந்து சென்றல்கிவனது மனஸில் ஆசை

நிறைவேற்றத்தால் ஜனிக்கின்ற களிப்பு சுக ஆபாஸமே (போலிச்சுகமே) தவிர மெய்யின்பமன்று. மெய்யான இன்பம் அறத்தைப் பற்றியே விளங்கும்.

பொருளாலும் காமமென்னும் மாதராடவர் சேர்க்கையாலும் பெறப்பட்ட இன்பாபாஸம் மோஹத்தை விளைவித்து ஆத்மாவின் அறிவைக் கெடுக்கும். மேலும், பெறப்பட்ட பொருளுக்கும் பெண்ணுக்கும் தேய்வு அல்லது அழிவு வந்தவுடனே, இன்பாபாஸம் துன்பமாய் மாறி மிகவருத்தும்.

**புறத்த**=மெய் இன்பத்திற்குப் புறம்பான இன்ப ஆபாஸத்தையும் துன்பத்தையும் உடையன.

**புகழும் இல**=அறநெறிகளை மறுத்துப் பொருளையும் பெண்ணையும் பெறுதற்குச் செய்யும் கர்மங்கள் நல்லவர்களால் இகழப்படும்.

---

**௧௦. செயற்பால தோரு மறனே யொருவற்**
**குயற் பால தோரும் பழி.**

அந்வயம்: ஒருவற்குச் செயல்பாலது அறம், உயல்பாலது பழி.

அர்த்தம்: ஒருவனுக்குச் செய்யத்தக்கது புண்ணியகர்மம், விலக்கத்தக்கது பாபகர்மம்.

**செயற்பால்**=செய்யும் பிரிவு (பான்மை)

**செயற்பாலது**=செய்யும் பிரிவை (பான்மையை) உடையது.

எது ஒருவனுக்குச் செய்யும்படி பிரிவுபண்ணி வைக்கப்பட்டதோ, அஃது அவனால் செய்யத்தக்கது.

"ஓரும்"—"ஓரும்" என்ற இரண்டும் அசைநிலை.

**உயல்**=விலக்குதல், விடுதல்.

**பழி**=பழிப்பைப் பெற்ற பாபகர்மம்.

இந்த அதிகாரத்தில், அறன்வலியை உறுத்துமாறு, அறத்தால் வருவது இன்பம், அறத்தைத் தவிர்த்துத் தேடப்பட்ட பொருளாலும் இன்பத்தாலும் வருவது துன்பம், என்றும் (குறள் ௯); அறத்தாறு இதுவென வேண்டாம், சிவிகை பொ



றுத்தானொடு ஊர்ந்தானிடை காண்க என்றும் (கு. ௭); நிஷ்காம்ய கர்மமானது பிறப்பு முதலிய துன்பங்கள் வரும் வழியை அடைக்கும் கல் என்றும் (கு. ௮); பொன்றுங்கால் அறம் பொன்றுத் துணை என்றும் (கு. ௯); செல்வத்தையும் மோக்ஷத்தையும் அறம் தருவதால், ஜீவாத்மாவுக்கு அறத்தினூங்கு ஆக்கம் இல்லை என்றும் (கு. ௧); அறத்தை மறத்தலினூங்கு கேடு இல்லை என்றும் (கு. ௨); ஆதலால், அறத்தை ஓவாதே செய்தல் வேண்டும் என்றும் (கு. ௩); சித்தசுத்தியோடு செய்யப்பட்ட ஆத்மோபாய ஜீவனோபாய கர்மங்களே மனுஷ்யர்களுக்கு அறம் என்றும் (கு. ௪); சித்தசுத்தியைக் கெடுப்பது அழுக்காறு அவா வெகுளி இன்னாச்சொல் என்ற நான்கும் மலவிகாரங்களாதலால், அவற்றை எல்லாம் ஜாக்ரதையாகக் கடிந்து, உரிய கர்மங்களை இடைவிடாமற் செய்யவேண்டும் என்றும் (கு. ௫), நாயனார் பொழிப்பாக உரைத்தார்.

இந்தத் திருவாக்குகள் அறத்தின் வலிமையை மாணவர் புத்தியில் உறும்படி மலர்ந்தருளப்பட்டன.

அறத்தின் வலிமை ஜடப்பொருளிலும் சித்பொருளிலும் ப்ரகாசிக்கின்றது. எப்படியெனில், ஜடமய பஞ்சபூதங்களைக் கொண்டு இயற்றப்பட்ட அகிலாண்ட கோடிகள் அனைத்திலுமுள்ள அணுக்கள் ஒவ்வொன்றும் காரண கார்ய ஸம்பந்தமாகவே தோன்றியும் பெருத்தும் தேய்ந்தும் மறைந்தும், மீளவும் அவ்வாறே இருந்தும், வரும். காரண கார்ய ஸம்பந்தத்தால் அண்ட பிண்டங்கள் யாவும் பரமேஸ்வரனது விதிப்படி காலதேச திக்கில் தோற்றமொடுக்க முறைகளுக்கு அடங்கியே செல்லும்.

சித்மய ஜீவர்களும் காரண கார்ய ஸம்பந்தமாகப் பரமேஸ்வரன் நடத்திவரும் கர்ம சக்ரத்துக்கு அடிமைப்பட்டு நிற்பர்.

**கர்மசக்ரம்** என்றது ஒருவன் செய்யும் கர்மத்துக்குத் தக்கபடி கர்மபலன் ஜனித்து, அவனைப் படிப்படியாக மலத்தில் நின்று உத்தரணம் (ஈடேற்றல்) செய்வதற்கு கருணாநிதியாகிய பரமேஸ்வரன் நடத்திவரும் பஞ்சக்ருத்யங்களாகிய ஸ்ருஷ்டி (படைத்தல்) ஸ்திதி (காத்தல்) ஸம்ஹாரம் (அழித்தல்), திரோபவம் (மறைத்தல்) அநுக்ரஹம் (அருள்தல்) ஆம்.

பக்கம் 91இல் காட்டியபடி பகவத்கீதை அத்யாயம் ௩, ௰௬ இல், ஸ்ரீ க்ருஷ்ண பகவான் அர்ஜுநனுக்கு உபதேசித்த மந்த்ரம் மாணவர்கட்கு இன்றியமையாத போதனையாயிருப்பதால், ஈண்டு மீளவும் எடுத்துரைக்கத் தக்கது.

"இவ்விதம் நடத்தப்படும் கர்ம சக்ரத்தை எவன் இந்த லோகத்தில் அநுஸரிக்கவில்லையோ, அவன் துன்பத்தையே ஜீவனமாகக்கொண்டும், ஐம்பொறிகளுடைய சேஷ்டைகளுக்கு அடிமைப்பட்டும், பயனின்றி ஜீவிக்கின்றான்".

மலத்தால் (அழுக்காற்றால்) பந்திக்கப்பட்ட ஜீவர்களின் அறிவும் அன்பும் மிகக் குன்றிப் ப்ரகாசமற்றிருப்பதைப் பரமேஶ்வரன் கண்டு அவர்களுக்கு தநு கரண புவன போகங்களைக் கொடுத்து, உயர்தரத்தாருக்கு ஶ்ருதிகளையும் குருமாரையும் உபாஸனைக்குரியதேவர்களையும் அருளி, மனம்வாக்குக் காயங்களால் யஜ்ஞம் தானம் தபஸ் என்ற ஆத்மோபாய கர்மங்களையும், உயிருடலுறவு கொண்டிருப்பதற்கு அன்பார்ந்த ஜீவனோபாய கர்மங்களையும், செய்யக்கடவீர் என்றும், ஹிதம் (இன்பம்) செய்வோர்க்கு சுகமும், அஹிதம் (துன்பம்) செய்வோர்க்கு துக்கமும், வரும் என்றும், ஆஜ்ஞாபித்தார். இவ்வாறு கர்மமும் கர்மபலமும் ஸம்பந்தப்பட்டு ஸதாகாலமும் நடைபெறுகின்ற **கர்ம சக்ரத்தின் பராக்ரமமே அறன்வலி** என்றறிக.

**கர்மம்** என்ற பதம் சிந்தனையற்று, அல்லது அகந்தை மமதையற்றுச், செய்த செயலைக் குறிக்காது. எந்தத் தொழில் ஜீவனுக்குப் பிறப்பு முதலிய பலன்களை உண்டு படுத்துமோ, அந்தத் தொழிலே கர்மம் எனப்படும் என்று பெரியோர் கூறுவர். கர்மம் என்ற பதம், "க்ரு" (செய்தல்) என்ற தாதுவில் நின்று ஜனித்து, அவித்யாவில் கட்டுண்ட ஜீவாத்மாக்களுக்கு ஸ்தூல தேகங்களைக் கொடுத்து, புவனங்களில் வெளிவிடும் ஶக்தியாகிய விஸர்க்கம் (வெளிவிடுதல், ஸ்ருஷ்டி) என்ற விசேஷ அர்த்தத்தைப் பெற்று நிற்கின்றது.

புவர் லோக முதலிய மேல் ஆறு லோகங்களில் ஜீவர்கள் செய்யும் கர்மங்கள் பிறப்பு முதலிய பலன்களைக் கொடா. இந்த மனுஷ்ய லோகத்தில் செய்யப்பட்ட கர்மங்கள் மாத்ரம் அப்பலன்களைக் கர்மிக்குக் கொடுக்கும். இதுபற்றி ப்ரஹ்மா இந்த்ரன் முதலிய தேவர்கள் இஷ்டகாம்ய ஸித்திக்காக இங்கு வந்து யாகங்களைச் செய்திருக்கின்றனர்.



**பலன்** என்ற தமிழ்ச்சொல் ஸம்ஸ்க்ருதத்தில் "பல" என வரும். இது "பல" (நிஷ்பத்தி, உத்பத்தி, பிறப்பு) என்ற தாதுவில்நின்று ஜனித்துப் பிறக்கின்ற வஸ்து என்று பொருள்படும்.

கர்மம் செய்தால், அச்செயலில் நின்று ஓர் பீஜம் (வித்து, விதை) உண்டாகும். இந்த பீஜம் அத்ருஷ்டமாய் (காணப்படாமல்) இருப்பதால், **அத்ருஷ்டம்** எனப்படும்.

பீஜத்தில் நின்று வ்ருக்ஷம் வருவதுபோல, புண்ணிய பீஜத்தில் நின்று சுகமும், பாபபீஜத்தில் நின்று துக்கமும், புண்யமும் பாபமும் கலக்கப்பட்ட (மிஶ்ர) பீஜத்தில் நின்று சுகதுக்கங்கள் கலந்த அநுபவங்களும் தோன்றும் (பாயஸம் உண்ணும்பொழுது வயிற்றுவலி வருவது போலவும், கல்யாண மண்டபத்தில் மாப்பிள்ளை இறப்பது போலவும்).

நரக ஸ்வர்க்க அநுபவங்களுக்குப் பின் பூலோகத்தில் இந்த பீஜங்கள் புருஷகாரத்தை (புருஷனுடைய ப்ரயத்தனத்தை) அடைந்து, சுகதுக்கங்களை விளைவிக்கும். உழப்பட்ட க்ஷேத்ரம் (வயல்) பீஜமில்லாமல் நிஷ்பலமாவது போலப், பூர்வ புண்ய பீஜமில்லாமல் புருஷகாரம் (முயற்சி) சித்திக்காது.

ஜனனங்கள் தோறும் அனாதிகாலந்தொட்டு ஆத்மாக்கள் யான் எனது என்ற புத்தியோடு செய்த கர்மங்களின் பீஜங்கள் கணக்கற்றுக் கால தேஶ நியதி தத்வங்களில் கட்டுப்பட்டிருக்கும். இந்தக் கர்ம பீஜங்களின் பெயர் **ஸஞ்சிதம்** (குவிக்கப்பட்ட கர்மம்) எனப்படும்.

ஸஞ்சித கர்மபீஜங்கள் சில, பக்வப்பட்ட காலத்தில், இப்பிறவிக்குரிய தநு கரண புவன போகங்களை ஆரம்பிக்கும். இப்படி இந்த ஜனனத்தில் புசிப்புக்கு வருகின்ற கர்மங்கள் **ப்ராரப்த கர்மம்** எனப்படும். பிறப்பு இறப்பு வரையில் அநுபவிக்கப்பட்டவை எல்லாம் பராரப்தங்கள்.

"ப்ர", "அ", என்ற உபஸர்க்கங்களோடு "ரப்" (ஆரம்பித்தல்) என்ற தாதுகூடி, "ப்ராரப்தம்" (பிறப்பாரம்பம்) ஆயிற்று. இந்தப் பதம் ஓர் பிறவியினிடை ஆரம்பிக்கும் வஸ்துவாகிய

கர்ம பீஜத்தையும், அப்பிறப்புத்தொட்டு இறப்பு வரைக்கும் தொடர்பாக ஸம்பந்தப்பட்ட கர்ம பீஜங்களையும், குறிக்கும்.

ப்ராரப்த கர்ம பீஜங்களைப் புசிக்கும்பொழுது, விருப்பு வெறுப்பால் ஏவப்பட்டு யான்எனது என்றபுத்தியோடு கர்மங்களைச் செய்தால், அவற்றில்நின்று புது பீஜங்கள் உண்டாகிப் பழய ஸஞ்சித பீஜங்களோடு குமிக்கப்பட்டுப், பின் ஒருகாலத்திற் பக்வமடைந்து, புசிப்புக்கு வருமாதலால், இவை ஆகாம்ய (வரப்போகின்ற) கர்மம் எனப்படும்

கர்மங்களின் பலன்கள் ஆறுவகைப்படும். அவையாவன: பேறு (பெற்ற தேகமும், பிதா, மாதா, பிறந்த ஸ்தானம், அதனையடக்கியதேசம், அரசாட்சி,பாஷை, கல்வி, உத்யோகம், தனம், பத்நி, பிள்ளை, ஸ்நேகிதர் முதலியவை); இழவு தன்னை விட்டுப் போகின்றவை); இன்பம் (சுக அநுபவங்கள்); பிணி (துன்ப அநுபவங்கள்); மூப்பு (உடலோடு உயிர் இருக்கும் காலம்); சாக்காடு (மரணம்), என்பவையாம்.

ஶ்ரவண மனன அப்யாசங்களால் சுத்தப்படாத புத்தி ஜீவாத்மாவை மாத்ரம் பாபபுண்ய கர்மங்களுக்குக் காரணமாக அறிகின்றது. ஆனல் உள்ளபடி பிரித்துப் பார்க்கின், கர்ம உத்பத்திக்குப் பஞ்ச காரணங்கள் உண்டு. அவை தநுவும் (ஸ்தூல தேகமும்), கரணமும் (ஸூக்ஷ்ம சரீரமும்), கர்த்ருத்வ மோகம்பெற்ற ஆத்மாவும், துடின ரூப ரஜஸ் குணமும், கர்ம சக்ரத்தை நடத்தி வருகின்ற பரமேஶ்வரனும் என்று உபநிஷத்கள் கூறும்.

விருப்பு வெறுப்புகளால் ஏவப்பட்டு அகங்கார மமகாரத்தோடு விஷயசுகத்தைத் தேடும் ஜீவர்களுக்குப் ப்ரவ்ருத்தி மார்க்கத்தையும், விருப்பு வெறுப்புகளை ஸமப்படுத்தி சித்த சுத்தியோடு கர்மங்களைச் செய்வோர்க்கு நிவ்ருத்தி மார்க்கத்தையும், பரமேஶ்வரன் தமது கர்ம சக்ரத்தில் அமைத்தார்.

ப்ரவ்ருத்தி மார்க்கம் என்பது தோன்றி அழியும். சிற்றின்பங்களையும் பலவித துன்பங்களையும் தரத்தக்க த்ரிலோக ஸஞ்சாரம் அல்லது புநர் ஆவ்ருத்தி (திரும்பிவருதல்) ஆம்.

பூலோகத்தில் வாழும்பொழுது செய்த கொடிய பாவங்களுக்கு ஏற்ற நரகலோகங்களுக்குச் சென்று கடுந்துன்பங்



களை அனுபவித்தபிறகு மிகுந்த புண்யங்களுக்கேற்ற ஸ்வர்க்க லோகங்களில் ஒன்றைப்பெற்று, அற்புதமான சுகங்களை அனுபவித்து மீளவும் பூலோகத்திற்குத் திரும்பிவந்து, சிற்றின்பங்களையும் மாறி மாறி அருந்தி, ஐம்புலவிஷயங்களைப் பற்றிவரும் சுகங்கள் துன்பங்களே என்று நிச்சயிப்பார்கள்.

சிற்றின்பங்கள் யாவும் துன்பங்கள் என்று நிச்சயித்தவர்களுக்கு நிவ்ருத்திமார்க்கம் அருளப்படும். அஃதாவது, காமம் குரோதம் துக்கம் என்றவற்றில்நின்று விடுவிக்கும் வழியிற் செலுத்தப்படுவார்கள். இந்த முக்திநெறியில் பொய்யொழுக்கத்தை (பக். 53) மறுத்து, ஐம்பொறியடக்கம் ஸமத்வபுத்தி சித்த சுத்தி ஞானஶாஸ்த்ர விசாரணை மனோநிக்ரஹகம் ஏகாக்ர சித்தம் ப்ராணாயாமம் த்யானம் ஈஶ்வரார்ப்பண கர்மானுஷ்டானம் ஸமாதி என்ற யோகஸித்திகளைத் தக்கபடி பெறுவார்கள்.

இவற்றை விரும்பியும் ஸாதித்தும் வருகின்ற யோகாப்பியாஸிகள் மானஸ தேக சுகக்குறைவினால் தம் நிலைகளில்நின்று வழுவினால் பரமேஶ்வரன் அவர்களைக் கைவிடார்.

யோகத்தில்நின்று வழுவின யோகப்ரஷ்டன் புண்யவான்களுக்குரிய ஸ்வர்க்கலோகங்களில் ஒன்றை அடைந்து, அதனில் வெகுகாலம் வஸித்து, பூலோகத்தில் சித்தசுத்தியுள்ள ஒரு ஸ்ரீமானுடைய வீட்டிற் பிறப்பான் என்றும்,—முற்பிறவியில் அருளப்பட்ட யோகஸம்பந்த புத்தி இப்பிறவியில் மோக்ஷத்துக்கே ப்ரயத்தனம் செய்யும் என்றும்,—யோகத்திலேற மிக விருப்பங்கொண்டவனாகிய யோகருருக்ஷு இன்னும் சில பிறவிகளில்யோகாரூடன் (யோகாப்யாசங்களில் ஸ்திரமாக ஏறினவன்) ஆகிக், கடைசியில் யோகயுக்தன் (பரப்ர்ஹ்ம சொரூப ஜீவன்முக்தன்) ஆவன் என்றும்,—யோகாரூடர்களில் சிலர் பூலோகத்திலேயே ஜீவன்முக்தியைப் பெறுகிறார்கள்என்றும்,—இன்னும் சிலர் மனுஷ்ய தேகத்தை விட்டபின்னர், ஸ்வர்க்க லோகத்திற்கு மேற்பட்ட மஹ ஜன தப ஸத்ய லோகங்களிற் சென்று மீளவும் பூலோகத்திற்குத் திரும்பிவராமல், அங்கேயே யோகயுக்தராகின்றார்கள் என்றும்,—ஞான ஶாஸ்த்ரங்கள் கூறுகின்றன.

நற்குணப்பேறும் உயர்தர சரீரப்பேறும், ஜீவர்களின் மல ஸம்பந்த நீக்கத்திற்கு எற்றபடியே, பரமேஸ்வரனால் அருளப் படும். மலஸம்பந்தம் குறையக் குறைய நற்குணப்பேறும் உயர் தர சரீரப்பேறும் ஸித்திக்கும்.

**மலம்** என்றது **அழுக்கு**; தீயவஸ்து; ஆத்மாவின் அறிவையும் அன்பையும் கெடுக்கும் பொருள். இதனை **ப்ரக்ருதி** என்பார்கள். இது தனது ஸ்வரூபத்தையாவது ஆத்மாவின் ஸ்வரூபத்தை யாவது அறியாது. ஆத்மாவைப் பற்றித், தனது மலஸ்வரூபத் தை அதனில் எற்றி, அதன் ஸ்வரூபத்தை மறைக்கும். ஓரே நிலையில் ஒருபொழுதும் நிற்காமல், துடினக் கோலங்களையே உடையது. தோன்றுதலும், மாறுதலும், விரிதலும், ஒடுங்கி மறைதலும், தான் பற்றின வஸ்துவைப் பாழாக்குதலுமே இதன் தன்மைகளாம்.

இதற்கு அறியாமையே முக்ய தன்மையாயிருப்பதால்,பெரி யோர் இதனை **ஜடப்பொருள்** என்பார்கள். ஆத்மாவாகிய சித் பொருளைப் பற்றிநிற்குங் காலமெல்லாம் ஆத்மா தன்னைத் தெரி யாமல் ப்ரக்ருதிரூபதேகத்தையே "நான்" என்று ஸாதிக்கும்

வாளை அதன் உறை மறைப்பதுபோல ஆத்மாவைப் ப்ரக்ருதி மறைப்பதால், ப்ரக்ருதியைக் **கோஶம்** (case, cell) என் பார்கள். ஸகல கோஶங்களுக்கும் (உறைகளுக்கும், தேகங்க ளுக்கும்) காரணகோஶமாயிருக்கின்றது ப்ரக்ருதி. ஸம்ஹார காலமுடிவில் இது அணுரூபமாய் ஒடுக்கப்பட்டு நிற்பதால், **ஆணவமலம்** என்றும், மூலப் ப்ரக்ருதி என்றும், **காரணதேகம்** என்றும் கூறப்பட்டது.

திமிரும் துடினமும் உள்ள இந்த **மூல அணுவில்** பரமேஶ் வரன் தமது விதி விலக்கு ரூபமான **தர்மஸக்தி** என்னும் **அறன் வலியைச்** செலுத்தி, அதன் அடங்காத் தன்மைகளை நியமப் படுத்தி, மூவகையாகப் பிரித்தார். இந்த மூவித பிரிவுபாடு **முக் குண விபாகம்** எனப்படும்.

இருள் அறியாமை மோகம் மறதி என்ற தன்மைகள் ப்ர பலப்பட்டநிலை **தமஸ்குணம்** எனப்படும். சிவந்த ஒளி, இச்சித் தல், செல்லல், செய்தல், என்ற தன்மைகள் ப்ரபலப்பட்டநிலை



**ரஜஸ்குணம்** எனப்படும். தங்கமய ஒளி, பிரித்தறிதல், தெளிவு, ஒப்வு (சுகம்), என்றதன்மைகள் ப்ரபலப்பட்டநிலை **ஸத்வகுணம்** எனப்படும்.

ஜீவர்களின் மலநீக்கத்தைக் கருதி ப்ரக்ருதியை முக்குண விபாகம் செய்து, பின்னர் அவ்வொவ்வொன்றிலுமிருந்து தோ ற்றுவிக்கப்பட்ட குணங்களை வெவ்வேறு விதமாகப் பிரித்துக் கூட்டி, ஜீவர்களுக்கு வேண்டிய ஞானஸாதனங்களாகிய அந் தஃகரணங்களையும் ஐம்பொறிகளையும் கர்மஸாதனங்களாகிய ப்ராணாதி வாயுக்களையும் கர்மேந்திரியங்களையும்—ப்ரஹ்மாண் டத்துக்குள் அடக்கப்பட்ட அநேக புவனங்களையும்—அநுபவ ங்களாகிய இன்பதுன்பங்களையும்—பகவான் படைத்தும் காத் தும் துடைத்தும், மீளவும் வரிசையாகப் படைத்தும் காத்தும் துடைத்தும், வருகின்றார். இம்மூன்று தொழில்களுடன் ஜீவர் களின் பக்குவத்தை அறிந்து அவர்களுக்கு வேண்டியவற்றை ஆங்காங்கு அறிவிப்பதாலும், நன்மைகளை அருளுவதாலும், பரமேஶ்வரனுக்கு **பஞ்சக்ருத்யம்** உண்டென்றும், இந்தப் பஞ் சக்ருத்யமே அவரது **கர்மசக்ரம்** என்றும், பெரியோர் கூறுவர்.

எனவே, ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரம் திரோபவம் அநுக் ரஹம் என்ற **கர்மசக்ரம்** லக்ஷக்கணக்கான குணப்ரவாஹங்க ளால் இயற்றப்பட்டு நடைபெறுமென்று நிதானிக்கவேண்டும்.

குண ப்ரவாஹங்கள்(ஓட்டங்கள்) **குணகதிகள்** எனப்படும்.

இவற்றை எல்லாம் ஆணவமலத்தில்நின்று பரமேஶ்வரன் தனது விதிவிலக்கு ரூபமான **தர்மஶக்தியால்** (அறன்வலியால்), விரித்தார்.

இந்த விரிவின் வரிசை எப்படியெனில், இருள்மய ஆணவ மலம் நினைவுரூப மாயாமலமாகி, மாயாமலம் செயல்ரூப கர்ம மலமாகி, ஆணவ மாயா கர்மரூபப் பெருக்கில்நின்று **குணகதி கள்** விபாகப்பட்டன.

**குணம்** என்ற பதம் "குண்" (ஆவ்ருத்தி, திருப்புதல் முறுக்குதல், பின்னுதல்) என்ற தாதுவில்நின்று ஜனித்து, கயி றுபோல ஆவ்ருத்தி பெற்று, **பந்தனத்தைச் செய்யும் வஸ்து** என்று பொருள்படும்.

எனவே, **குணங்கள்=பாஶங்கள்**, மும்மலமுறுக்குப் பெற்ற நார்கள், கயிறுகள்.

ஆத்ம ப்ரகாசமாகிய அன்பையும் அறிவையும் எது சுருக்குமோ, சிறுகப்பண்ணுமோ, பந்திக்குமோ, அது **பாஶம்** அல்லது **குணம்** எனப்படும். இதுபற்றி ஜீவாத்மா **குணஸங்கன்** எனப்படுவன். தன்னைக்கட்டும் குணங்களை விட்டு நிற்பவன் **குணாதீதன்** (குணங்களுக்கு அப்பாற்பட்டவன்) எனப்படுவன். பகவத்கீதை அத்யாயம் ௰௪, ஶ்லோகங்கள் ௨௰௪, ௨௰௫, க்குரிய ராமநாத பாஷ்யத்தைப் பார்த்தறிக.

குணங்களால் பந்திக்கப்பட்ட ஜீவாத்மா **பத்தன்** என்றும், இக்குணங்கள் வேறு நான் வேறு என்றறிந்து, இவற்றின் சலனங்களில்நின்று விலகினவன் **முக்தன்** என்றும், கூறப்படுவன்.

ஸ்ருஷ்டி ஸ்திதி காலத்தில் தோன்றி வளர்ந்து நிற்கும் **பாஶங்கள்** (குணங்கள்) யாவும் ஸம்ஹார காலத்தில் ஒடுக்கப்பட்டு அணுரூப**மூலபாஶம்** என்னும் ஆணவமலத்தில் லயிக்கும்.

மீளவும், ஸ்ருஷ்டி ஆரம்பத்தில் இந்தமூலபாஶத்தில்நின்று தமஸ் ரஜஸ் ஸத்வம் என்ற முக்குணங்கள் விபாகப்பட்டு, தமஸில் தமஸும், தமஸில் ரஜஸும், தமஸில் ஸத்வமும் தோன்றின. அவ்வாறே, ரஜஸில் தமஸும், ரஜஸில் ரஜஸும், ரஜஸில்ஸத்வமும்,—ஸத்வத்தில் தமஸும், ஸத்வத்தில் ரஜஸும், ஸத்வத்தில் ஸத்வமும்,—தோன்றின.

எனவே, மூலமலம் மும்மலமாகி, மும்மல அவஸ்தையில், (பருத்தியில்நின்று நூல்நூற்றதுபோல) முக்குணகதிகளை உண்டாக்கி, இப்படிப்புணர்ந்த முக்குணநூல், அல்லது நார், ஒவ்வொன்றையும் மும்மூன்றாகப் பிரித்து, ஒன்பதாகப் பகவான் வகுத்தார்.

திரிபாகத்தில் நின்று நவபாகம் (3×3) வந்ததுபோல, நவபாகத்தில்நின்று இருபத்தேழுபாகம் (9×3) வந்தது.

மூலபாஶமாகிய ஆணவமலத்தில்நின்று நினைவுரூப மாயாமலம் தோன்றி, மாயாமலத்தில்நின்று செயல்ரூப கர்ம மலந்தோன்றி, ஆணவ மாயா கர்ம மலக் கலப்பில்நின்று முக்குணங்கள் விபாகப்பட்டு, முக்குணங்களில்நின்று நவகுணங்கள் தோன்றி, நவகுணங்களில் நின்று இருபத்தேழு குணங்கள் விரியும். விரியுமுறை படத்திற் காண்க. இருபத்தேழு குணங்களில் நின்று (27×3) எண்பத்தொரு பாகம் வந்து, இவற்றில் நின்று (81×3) இருநூற்று நாற்பத்து மூன்று பாகம் வந்து, இவற்றில் நின்று (243×3) எழுநூற்றிருபத்தொன்பதுபாகம் வந்து, இவ்வாறே **கணக்கற்ற குணகதிகள்** உண்டாயின. இந்தக் குணகதிகள் யாவும் அத்ருஶ்யப்பொருள் (ஐம்பொறிகளால் அறியப்படாதவை); அவற்றின் காரியங்களாலேயே அறியத்தக்கவை.



குணகதிகளுக்கேற்றபடி, ஸ்ருஷ்டியாதி காரியங்கள் தோன்றும்.

லோக ஸ்ருஷ்டிக்கு குணகதிகள் ஒருவிதமாயும்,—ஜீவர்களின் அந்தஃகரணங்கள் முதலிய ஸூக்ஷ்ம சரீர ஸ்ருஷ்டிக்கு இன்னொருவிதமான கலவைக் கணக்குடனும்,—அவர்களின் ஸ்தூல சரீர ஸ்ருஷ்டிக்கு வேறொருவிதமான கலவைக்கணக்குடனும்,—அவர்களுடைய போகஸ்ருஷ்டிக்கு இன்னும்வேறொருவிதமான கலவைக்கணக்குடனும்,—தமஸ் ரஜஸ் ஸத்வ குணங்கள் பிரிக்கப்பட்டிருக்கும். இந்தப் பலவிதக் கலவைகள் **குணகதிகள்** என்றும், **குணப்ரவாகங்கள்** என்றும், **குணவியாபாரங்கள்** என்றும் கூறப்படும்.

ப்ருதுவி தத்துவங்கள் ப்ரபலப்பட்டு உண்டான **பூலோக ஸ்ருஷ்டிக்கு** குணகதிகள் ஒருபோங்காயிருக்கும். ஜலதத்துவங்கள் ப்ரபலப்பட்டு உண்டான **பிதுர்லோக ஸருஷ்டிக்கு** குணகதிகள் இன்னொரு போங்காயிருக்கும். அக்நி தத்துவங்கள் ப்ரபலப்பட்டு உண்டான **கந்தர்வலோக ஸ்ருஷ்டிக்கு** குணகதிகள் இன்னொரு போங்காயிருக்கும். வாயுதத்வங்கள் ப்ரபலப்பட்டு உண்டான **ஸவர்க்கலோக** ஸ்ருஷ்டிக்கு குணகதிகள் வேறொரு போங்காயிருக்கும். ஆகாசதத்துவங்கள் ப்ரபலப்பட்டு உண்டான **ஸித்தலோக ஸ்ருஷ்டிக்கு** குணகதிகள் வேறொரு போங்காயிருக்கும். பகவானது ஆஞ்ஞைப்படி நடைபெற்றுவரும் குணகதிகள் கணக்கற்றவை எனல் திண்ணம்.

பூலோக, பிதுர்லோக, கந்தர்வலோக, தேவலோக, ஸித்த

லோக, ஸ்ருஷ்டிகள் வெவ்வேறு குணகதிகளைப்பெற்றன போல, இவற்றிலுள்ள நாநாவித ஸ்தூலதேகங்களும் வெவ்வேறு குணகதிகளைப் பெற்றுநிற்கும். அநேக தேகங்கள் வித்தில் (பீஜத்தில்) நின்று தோன்றும். இன்னும் அநேக தேகங்கள் வெயர்வை (ஸ்வேதம்) அல்லது வெள்ளாவியில் நின்று தோன்றும். இன்னும் அநேக தேகங்கள் முட்டையில் (அண்டத்தில்) நின்று தோன்றும். இன்னும் அநேக தேகங்கள் தோற்பையில் (ஜராயுவில்) நின்று தோன்றும். இந்த நால்வகைத் தோற்றங்கள் (தேகங்கள்)—அழியும் பிறவிகள்—உத்பீஜம், ஸ்வேதஜம், அண்டஜம், ஜராயுஜம் எனப்படும். இவைகளுக்கெல்லாம் குணகதிகள் வெவ்வேறுயிருக்கும்.

தேகங்களுக்கு அமைக்கப்பட்ட குணகதிகள் விவிதமாயிருப்பன போல, மனம் புத்தி முதலிய அந்தஃகரணங்களும்,—மெய் வாய் முதலிய ஐம்பொறிகளும்,—ப்ராணன் அபானன் முதலிய வாயுக்களும்,—வாக்கு பாணி முதலிய கர்மேந்திரியங்களும்,—வெவ்வேறு குணகதிகளைப் பெற்றுநிற்கும்.

குணகதிகளால் புத்தியென்ற அந்தஃகரணம் உத்தம ஜாதி (உயர்தரப்பிறவி) என்றும், மத்தியம ஜாதி என்றும், அதமஜாதி என்றும்,—பிரிக்கப்படும். இந்த லோகத்தைப் பற்றியும் மேல்லோகத்தைப் பற்றியும் அறியத்தக்க புத்தி உத்தம ஜாதி என்றும்,—இந்த லோகத்தைப் பற்றி மாத்திரம் அறியத்தக்க புத்தி மத்யம ஜாதி என்றும்;—இந்த லோகத்தைத்தானும் அறியக்கூடாத புத்தி அதம ஜாதி என்றும்,—கூறப்படும். இந்த ஜடமய புத்தியும், இகலோக புத்தியும், இகபரலோக புத்தியும் வெவ்வேறு குணகதிகளால் உண்டாக்கப்பட்டு ஜீவர்களுக்கு அருளப்பட்டன.

மேகங்களால் மறைக்கப்பட்ட சூர்யன் தனது ப்ரகாசத்தை இழக்காதிருப்பினும் மேகமண்டலத்திற்குக் கீழிருப்பவர் எப்படி அதன் ப்ரகாசத்தை இழந்திருப்பரோ, அதுபோல புத்திதத்துவத்தின் விசாரத்தையும் விளக்கத்தையும் ஜீவர்கள், தங்கள் கர்மத்துக்கேற்றபடியே, உத்தம மாகவும் மத்யம மாகவும் அதமம மாகவும் பெறுவர். அகலிகை கல்லாகி மீளவும் பெண்ணானள். சிலந்திப்பூச்சித் தேகத்தோடு பிறந்த ஜீவன்



மீளவும் மனுஷனானன்.

மனுஷதேகத்தைத் தக்க ஜீவர்களுக்கு அருளவும், அவர்களைப் புண்ய கர்மானுஷ்டானங்களால் மேலான பதவிகளைப் பெறச்செய்யவும், பூலோகம் ஸ்ருஷ்டிக்கப்பட்டது. ஆகாசத்தில்நின்று வாயுவும், வாயுவில்நின்று அக்நியும், அக்நியில்நின்று ஜலமும், ஜலத்தில்நின்று ப்ருதிவியும் (மண்ணும்), வரிசையாக முதல் ஸூக்ஷ்ம மாகவும் பின்னர் ஸ்தூலமாகவும், தோன்றின. கடலும் நிலமும் மலையும் நதியும் குளமும் உண்டாகி, நீரில் நீர்வாழ் தேகங்களைப் பெற்ற ஜீவர்கள் தோன்றினர். நிலத்தில் புல் பூடு கொடி செடி மரம் என்னும் வேரூன்றிவளரும் ஸ்தாவர தேகங்களுடன் ஜீவர்கள் தோன்றினர். இந்த ஸ்தாவர ஸ்ருஷ்டிக்குப் பின் ஊர்ந்தும் நடந்தும் பறந்தும் வாழத்தக்க ஜங்கம் (இயக்கம்பெற்ற) தேகங்களுடன் ஜீவர்கள் தோன்றினர். அப்பால், ஸ்தாவர ஜங்கம ஜாதிகள் கொடுக்கும் காய் பழம் பால் தேன் முதலிய உணவுகளைப்புசிக்கும் மனிதர்தோன்றினர்.

இகபரலோக புத்தியுடன் பிறக்கும் மனிதரின் சரித்ரம் மிகவிநோதமாக எங்கள் பெரியோர் கூறுவர்.

ஆதியில் எல்லா மனிதர்களும் ப்ரஹ்மத்தைப் பற்றிய புத்தியோடு பிறந்தார்கள் என்றும்,—இந்தப் ப்ராஹ்ம புத்திக்கு லக்ஷணம் ஐம்பொறி அடக்கம், மன அடக்கம், விருப்புவெறுப்புக்களால் வரும் இன்பதுன்பங்களை ஸமமாக்கிப் பொறுத்தல், சித்தசுத்தி, தேகசுத்தி, ஆத்மா உண்டென்ற நிச்சயம், ஆத்மாவைபற்றிய கல்வியிலும் ஸதாசாரத்திலும் ப்ரீதி என்றும்,—இந்த ப்ராஹ்மபுத்தியை, ஜாக்கிரதைக்குறைவாலும் சுற்றத்தாரிலும் விஷயசுகங்களிலும் பற்றுவைத்ததாலும், யஜ்ஞும் தானம் தபஸ்களை நழுவவிட்டதாலும், மாம்ஸபக்ஷணத்தையும் மதுபானத்தையும் அநுஸரித்ததாலும், மனிதர் இழந்தனர் என்றும்,—அதறகப்பால் மண் பெண் பொன் முதலியவற்றை விதிநிஷேதமற்று ஸம்பாதிக்கத் தொடங்கினர் என்றும்,—தங்கள் தங்கள் புத்திக்கேற்றபடியே மனிதர்களுக்கு ஜாதிபேதங்கள் உண்டாயின என்றும்,—அநேக மஹான்கள் ஞானஶாஸ்த்ரங்களிலும் ஸ்மிருதிகளிலும் புராணங்களிலும்

இதிகாஸங்களிலும் உபதேஸித்திருக்கின்றனர்.

[illegible] சர்த்தாவாகிய புத்தியின் ப்ரகாசம் சில மனிதரில் அகண்டமாயும், பலரில் அல்பமாயும் இருக்கும். ஞானவான்களின் பேரறிவு அகண்டத்வத்தால் ஒரேவிதமாயிருக்கும். அஞ்ஞானிகளின் சிற்றறிவு பலவிதமாயிருக்கும்.

விதிவிலக்குகளை விசாரிக்காமல் ஐம்பொறிகளோடும் துராசைகளோடும் செல்லுகின்ற புத்தி **கெட்டபுத்தி** என்றும், விதிவிலக்குகளை விசாரித்து, விலக்கினவற்றை விட்டும் விதித்தனவற்றைப் பற்றியும் நிற்கின்ற புத்தி **நல்லபுத்தி** என்றும் கூறப்படும்.

நற்கர்மங்களை அநுஸரிக்கும் புத்தியே நல்லபுத்தி. ஆதியில் மனிதர் நற்புத்தியோடிருந்தனர். துஷ்டகர்மத்தால் இதனைப் பழுதாக்கினவர்கள் எல்லோரும் மறுபிறவிகளில் கெட்டபுத்தியைப் பெற்றனர். இன்னும் புத்திகெட, மனுஷ்யதேகத்தை இழந்து வேறு தாழ்ந்த தேகங்களைத் தரித்தனர்.

நினைக்கத்தகாதவற்றை நினைத்தும், பேசத்தகாதவற்றைப் பேசியும், செய்யத்தகாதவற்றைச் செய்துமே பாப பலன்களுக்கு ஆளாகி, கொடிய பாபங்களாற் பெறப்பட்ட நரகலோகங்களிற் சென்று கொடிய வேதனைகளை அநுபவித்தபின், ஏனைய பாபங்களால் உத்பிஜங்களாகியும், (நிலத்தைப் பீறிக்கொண்டு முளைக்கும் புல் பூண்டு கொடி செடி மரஜாதிகளாயும்), கிருமிகளாயும், பக்ஷிகளாயும், ம்ருகங்களாயும், பிறந்து மீளவும் மனுஷ்ய தேகத்தைப் பெறுகின்றனர்.

இவ்வித தேகங்களையும் இவற்றிற்குரிய அதம மத்யம உத்தம புத்திகளையும் தாம் பெற்றார் என்று மாணிக்கவாசகசுவாமிகள் தமது சிவபுராண பதிகத்திற் கீழ்வருமாறு கூறினார்.

“புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத்தாவர ஜங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன், எம்பெருமான்,
மெய்யே உன்பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்.”



திருக்குறட் பாயிர ராமநாதபாஷ்யத்திலுள்ள

## அரும்பதமுதலியவற்றின் அகராதி க்ரமம்.

### அ

அகங்காரம்—47, 112
அகண்டகார அருட்சக்தி—22
அகத்திலுள்ள லோகம்—29
அகர்த்தா—71
அகஸ்தியமஹாமுனிவர்—8
அகிலாண்டகோடி—23
அக்நிஸூர்யசந்த்ரமண்டலங்கள்-40
அங்கவியல்—10
அங்கார்கன்—30
அங்கிரஸ்—15
அசலபுத்தி—107
அசுத்தமாயை—27
அசுபபலன்கள்—102
அடி—35
அடிசிற்கினியாள்—5
அடியார்க்குநல்லார்—8
அணுரூபமூலபாசம்—116
அண்டகோடிகள—27
அண்டபிண்டங்கள்—29
அண்டபிண்டசராசரங்கள்—91
அண்டஜம்—118
அண்டாண்டகோடிகள்—90
அதமஜாதி—118
அதர்மம்—17
அதர்வணம்—13, 32
அதலம்—29
அதிகமான்—2
அதிசூக்ஷ்மசுத்தமாயை—26
அதிஸூக்ஷ்மப்பொருள்—
அதீதஅவ்யயவஸ்து—22
அதோமுகம்—27
அத்திரி—15
அத்வாக்கள்—49, 95
அத்வைதநிலை--31
அத்ருஸ்யப்பொருள்கள்—117
அத்ருஸ்யஸப்தமேகம்—67
அத்ருஷ்டம்—111
அநந்தஸக்தி—58
அநந்நியபக்தி—31
அநாதி—49
அநித்யஸுகம்—51
அநிஷ்டம்—85
அநுக்ரஹஸக்தி—49
அநுஸாஸநபர்வம்—95
அந்தஃகரணுதிபௌதிகாதிகள்—
அந்தணன்—57
அந்தர்யாமி ஈஸ்வரன்—22
அபரஜ்ஞானம்—33
அபிவாதனம்—38
அப்யாஸங்கள்—24
அமைச்சியல்—10
அரங்கேற்றல்—8
அரசியல்—10
அரணி—30
அரணியல்—10
அருட்கோலம்—35
அருட்சக்தி—24
அருட்பூமி—39
அரூபநாதம்—27
அர்த்தம்—12
அர்ஹத்—3
அல்பஅறிவு—80
அவரகர்மம்—104
அவா—97
அவித்யா—47
அழுக்காறு—97, 99
அறத்தின்சூக்ஷ்மகதி—102
அறத்தின்வலிமை—109
அறத்துப்பால்—9
அறப்பால்—1
அறம்—1, 3, 90
அறன்வலி—89, 110
அறிவுநூல்—32
அறுவகைப்பலன்கள்—50
அற்புதசுகாநுபோகம்—107
அனுகதம்—40

அன்புநிலை—57
அஞ்ஞானம்—33, 47
அஹந்தை—13
அஹல்யை—78
அஹிதம்—110

---

## ஆ

ஆகமம்—14
ஆகாசம்—30
ஆகாம்யகர்மம்—49
ஆக்ஞா—40
ஆக்ஞாசக்ரம்—59
ஆசமனம்—37
ஆணவமலம்—99
ஆணவமாயாகர்மரூபம்—115
ஆண்பாற்கூற்றியல்—10
ஆதாரஶக்திகள்—58
ஆதி—2
ஆதிபகவன்—27
ஆதிதேவன்—27
ஆதிவ்யாதி—104
ஆதீனங்கள்—21
ஆத்மகாரியங்கள்—90
ஆத்மகுணங்கள்—58
ஆத்மதர்ஶனம்—33
ஆத்மலக்ஷணங்கள்—3
ஆத்மஜ்ஞானம்—106
ஆத்மார்த்தபூசை—39
ஆத்மோத்தாரணம்—90
ஆத்மோத்தாரணஶக்தி—89
ஆத்ரேயகோத்ரப்பேராசிரியர்—2
ஆபஸ்தம்பர்—15
ஆரம்பஶக்தி—18
ஆலங்குடிவங்கனார்—10
ஆரூதாரம்—40
ஆறுஅத்வாக்கள்—95
ஆறுசகோதரர்கள்—2
ஆற்றல்—79
ஆனந்தஅற்புதநிஷ்டை—107
ஆனந்தம்—58
ஆநந்தலஹரி—40

---

## இ

இசை—9
இச்சாஶக்தி—58
இடை—32
இடையாயஓத்து—32
இதிஹாசங்கள்—12
இதிஹாசம்—15
இந்த்ரன்—30
இந்த்ரியநிக்ரஹகம்—76
இயல்—9
இருபாற்கூற்றியல்—10, 11
இருமை—74
இருவினைச்சேர்க்கை—50
இருள்—47
இருள்மயஆணவம்—115
இல்லறவியல்—10, 11
இழவு—97
இளங்கோவடிகள்—5, 6
இறத்தல்—81
இறையனாரகப்பொருள்—6
இன்பம்—50
இன்பாபாஶம்—108
இன்னாச்சொல்—97, 100
இஷ்டகாம்யஸித்தி—1:1
இஹபரலோகபுத்தி—118
இஹலோகபுத்தி—118

## ஈ

ஈஶ்வரார்ப்பணகர்மம்-46, 47, 102

## உ

உக்கிரப்பெருவழுதி—6
உத்கருஷ்டகர்மம்—102, 103
உத்தமகர்மம்—104
உத்தமஜாதி—118
உத்தரமதுரை—4
உத்பத்தி—45
உத்பீஜம்—118, 120
உபநிஷத்—12
உபஶாந்தம்—2, 57
உபாஸநம்—68
உபாஸநாகாண்டம்—67
உபாஸநாதேவதைகள்—91



உப்பை—2
உயர்தரப்பிறவி—118
உயர்ந்தஜாதியார்—20
உயிர்—93
உயிர்ஈடேற்றல்—90
உயிருடலுறவு—110
உலகநூல்—32
உலகநூற்பொருள்—33
உலகம்—25
உலகு—69, 81
உறழ்ச்சிநூல்கள்—32
உறுவை—2

## ஊ

ஊழ்—10

## எ

எட்டுத்தொகை—16
எண்குணத்தான்—57, 58
எழுபத்தீராயிரம்நாடி—61

## ஏ

ஏகாக்ரசித்தம்—113
ஏகாக்ரசித்தன்—68
ஏகாக்ஷரம்—26
ஏறச்செய்தல்—8

## ஐ

ஐந்தாம்வேதம்—32
ஐம்புலவேடர்—53
ஐம்பொறியடக்கம்—53

## ஒ

ஒருபோங்கு—117

## ஓ

ஓஷதிகள்—63

## ஔ

ஔவை—2

## க

கடவுள்—22, 30
கடவுள்வாழ்த்து—22
கடாகம்—30
கடாக்ஷம்—25
கடை—32
கடைச்சங்கம்—6
கடையாயஓத்து—32
கந்தர்வலோகம்—117
கந்யாகுமரி—8
கபாடபுரம்—8
கபிலரகவல்—2
கபிலர்—2
கம்பராமாயணம்—3
கருணாநிதி—89
கருவூர்—9
கருவூர்ப்புலைச்சி—2
கர்த்ருத்வபோக்த்ருத்வபுத்தி—41
கர்த்ருத்வமோஹம்—71
காணபரம்பரை —
கர்ணோபதேசவஸ்து —14
கர்மஉத்பத்தி —
கர்மசக்ரம் —91, 115, 110
கர்மபலத்யாகம்—71, 89
கர்மபலஸங்கம் —71
கர்மமலம் —48 97
கர்மம் —110
கர்மயோகம் —104
கர்மஸாதனங்கள் —115
கல்பம் —32
கல்யாணமண்டபம் —111
கல்லாடனார் —10
கல்வி —31
கல்விமதம் —33
கல்விபீடம் 91
கவலை —55
களத்தூர்க்கிழார் —10
களவியல் —10
கண் —52
கற்றல் —31
கற்றும் அறியாதவர் —34
கனவட்டம் —9
கஜபாகு —6

## கா

காச்யபர் —15
காத்யாயனர் —15
காமத்துப்பால் —10
காமந்தகன் —15
காமம் —12
காம்யகர்மங்கள்—45, 48

காம்யவாழ்வு —I06
காயகல்பம் —7
காயத்ரி —37, 38
காயத்ரிஜபம் —37
காயத்ரிஹ்ருதயபடனம் —38
காயம் —49
காய்சினவழுதி —8
காரணகாரியஸம்பந்தம் —102
காரணகோஶம் —114
காரணப்பொருள் —25
காரணம் —28
கார்ஹஸ்த்யம் —21
காலதேசதிக்கு —109
காலதேசந்யதிதத்வங்கள் —111
காவிரி —9
காற்குறவர்பாவை—2

கி

கிரியாஶக்தி—58

கீ

கீரந்தையார்—13
கீழ்லோகங்கள்—29

கு

குடியியல்—10
குணகதிகள்—115, 117
குணசங்கன்—116
குணப்ரவாஹங்கள்—115
குணம்—115
குணவ்யாபாரங்கள்—117
குணுதீதன்—110
குருகுலவாஸம்—21
குருஶிஷ்யபரம்பரை—91
குறள்வெண்பா—7
குஸம்—30

கூ

கூட்டிமுடிக்கிறஶக்தி—18
கூலவாணிகன்சாத்தனுர்—4

கெ

கெட்டபுத்தி—120

கே

கேட்டல்—54

கை

கைவல்யம்—22

கொ

கொல்லி—9

கோ

கோதமனுர்—10
கோமேதகம்—30
கோயிற்றிருப்பதிகம்—23
கோஶம்—114

கௌ

கௌதமருஷி—78

க்

க்ரவுஞ்சம்—30
க்ருஷி—65

ச

சங்கங்கள்—6
சங்கப்புலவர்கள்—10
சச்சிதானந்தமயம்—90
சச்சிதானந்தரேகை—89
சஞ்சிதகர்மம்—49
சதுர்ஆச்ரமங்கள்—21
சதுர்வர்ணங்களின்சூக்ஷ்மகதி—17
சதுர்வர்ணங்கள்—87
சதுர்வர்ணத்தார்—20
சதுர்வர்ணிகள்—17
சதுர்விதகர்மங்கள்—18
சதுர்விதகுணங்கள்—18
சதுர்வேதங்கள்—13
சந்தஸ்—32, 38
சந்த்யாவந்தனம்—38
சந்த்ரசூர்யநக்ஷத்ரமண்டலம்—30
சந்த்ரமண்டலம்—59
சமயகோடிகள்—23
சம்வர்த்தர்—15
சரித்ரம்—15
சரியை—35

சா

சாக்காடு—50
சாணக்யம்—15
சாதல்—82
சாந்திபர்வம்—15
சாந்த்ராயணம்—68
சாற்றுகவி—8



சி

சிதாகாஶம்—60
சிதாகாஶஸ்வரூபி—60
சித்—57
சித்தசுத்தி—2, 57
சிந்மயஜீவர்கள்—109
சிலப்பதிகாரம்—3
சிவபுராணபதிகம்—120
சிவஞானபோதம்—26
சிவஞானமுனிவர்—3
சிவகாமங்கள்—14
சிறியர்—80
சிற்றறிவாளி—45
சிற்றறிவு—45

சு

சுத்தபூரணவஸ்து—43
சுத்தமாயை—26
சுத்தவெட்டவெளி—62
சுத்தாத்மா—1

சூ

சூத்ரகுணம்—17
சூத்ரகுணவான்—18
சூத்ரத்வம்—87
சூத்ரன்—18
சூக்ஷ்மநீர்—63

செ

செங்குட்டுவன்—6
செத்திடல்—82
செந்தண்மை—90
செந்நாப்போதார்—4
செயல்ரூபக்ர்மம்—115
செய்யுள்வழக்கு—100
செவி—52
செற்றல் —82

சே

சேரன்செங்குட்டுவன் —6

சோ

சோபானம்—17
சோமேசர்முதுமொழிவெண்பா—3

சௌ

சௌகர்யஅழைப்புவார்த்தை —58

ஜ

ஜங்கமஜாதி —67
ஜங்கம் —119
ஜடப்பொருள்—114
ஜடமயபஞ்சபூதங்கள்—109
ஜடமயபுத்தி —118
ஜந்யகுணம்—17
ஜமபுத்வீபம்—30
ஜராயு —118
ஜராயுஜம்—118
ஜனபரிபாலனம்—19
ஜனலோகம் —30

ஜா

ஜாக்ரஅவஸ்தை—59
ஜாதிப்பிரிவு—20
ஜாதேஷ்டி—68

ஜீ

ஜீவஅஹங்காரம்—47
ஜீவகசிந்தாமணி—9
ஜீவகலை—26
ஜீவகாருண்யம்—57
ஜீவபரஶிவசொரூபம்—26
ஜீவரஸம்—62
ஜீவனுேபாயஆத்மனுேபாய
கர்மம்—30
ஜீவன்பத்தன்—42
ஜீவன்முக்தன்—41, 42
ஜீவன்முக்தி—18
ஜீவஸம்ரக்ஷணே—67
ஜீவாத்மா—99

ஜ்

ஜ்யோதிஷம்—32

ஞா

ஞானகாண்டம் —14
ஞானகுரு—24
ஞானசாஸ்த்ரம்—33
ஞானதாதா—3
ஞானநிஷ்டை—106
ஞானப்பால்—1
ஞானம்—3

ஞானரேகை—89
ஞானேந்த்ரியங்கள்—52

த

தண்டஶக்தி—87
தத்வம்—95
தத்வஶாஸ்த்ரம்—26
தனுகரணபுவனபோகங்கள்—110
தப—29
தபலோகம்—30
தமம்—53
தமஸில் சத்வம்—86
தமஸில்தமஸ் 86
தமஸில்ரஜஸ் 86
தமோகுணத்தின்கார்யம்—85
தர்மம்—89
தர்மவிபாகங்கள் –16
தர்மஶக்தி–114
தர்மஶாஸ்த்ரகர்த்தாக்கள்–15
தர்மஶாஸ்த்ரங்கள்—17
தர்மஶாஸ்த்ரிகள்–16
தர்மச்ரமங்கள்—21
தர்மாதர்மவிவேகம்—
தலாதல—29
தலை—32
தலையாயஒத்து–32

தா

தாயுமானஸ்வாமிகள்—14
தாழ்ந்தஜாதியார்—20
தானம் –68
தான்யலக்ஷ்மி –65
தாஸமார்க்கம் --35

தி

திருக்குறளின்விஷயம்–11
திருக்கோவை –8
திருச்செந்தூர்–8
திருமந்த்ரம்–26
திருமூலர்–26
திருமெழுக்கிடுதல்–36
திருமேனி –1
திருவருள்விலாசப்பரசிவ வணக்கம்–22
திருவலகிடுதல்–36
திருவள்ளுவர்சரித்ரமும் நூற்பெயரும்–1
திருவள்ளுவர்திருக்குறள்–1
திருவள்ளுவர்மாலை –2
திருவள்ளுவர் ஸ்தூலதேகத்தின் பிறப்பு–1
திருவாக்கு–1

தீ

தீவினை –48

து

துக்கபயசோர்வு–90
துக்கநிவர்த்தி –13
துக்கவிமோசனம் –24
துடினதூக்கக்கோலம் –47
துடினரூபரஜோகுணம் –112
துணைக்காரணம்–28
துறவி –71
துஷ்டநிக்ரஹம்–19

தெ

தென்மதுரை –4

தே

தேகவான்–47
தேவதாஸ்வரூவபங்கள் –26
தேவலோகம் –117
தேவாத்மகஶக்தி –90
தேனீக்குடிக்கீரனுர் –10

தொ

தொல்காப்பியம்–2, 83
தொனிரூபஆகாஸஅம்சங்கள்–96

த்

த்ரிமூர்த்தி–22
த்ரிலோகஸஞ்சாரம் –25,
த்ரிவர்க்கம் –15
த்ரிவிதஶக்திகள்—
த்ருப்திகரம் –107
த்வந்த்வபுத்தி–102
த்வாபரயுகம்–13

ந

நக்கீரர் –6
நச்சினார்க்கினியர் –4, 32





நட்பியல்—10
நரிவெருத்தலையனுர்–13
நலங்கிள்ளி–6
நல்கூர்வேள்வியார்–4
நல்லபுத்தி–
நல்வழி–20
நற்குணப்பேறு --114
நற்ருள் –35
நற்றிணை –16

நா

நாகன்றேவனுர் –10
நாடகம்–9
நாநாவிதமந்த்ரங்கள்–27
நாலடியார்–16
நான்குவிதநற்கர்மங்கள் --17

நி

நிதித்யாஸநம்–24, 54
நித்யசுகம்–24
நித்யம்–67
நிமித்தகாரணம்–28
நிம்ருஜி–37
நியமகுணங்கள்–17
நியமகுணவிபாகங்கள் --17
நிர்க்குணவஸ்து–13
நிறைமொழிமாந்தர்–84
நினைவுரூபமாயாமலம்–115
நிஷ்களசொரூபம்–43
நிஷ்களதர்ஶனம்–43
நிஷ்காம்யகர்மம்–45, 47
நிஷ்காம்யகர்மானுஷ்டானி–71
நிஷ்பலம்–111

நீ

நீத்தார்–70
நீத்தார்பெருமை–73
நீத்தான்–71

நூ

நூல்கள் –32

நெ

நெடுஞ்செழியன் –

நே

நேரி–9
நைமித்திகம்–67

ந்

ந்ருக்தம்–32

ப

பகம்--27
பகவன்–2
பகவான்–27
பகவற்கீதா–27
பகவத்ப்ரிதி–46, 47
பக்திநெறி–36, 37
பஞ்சகாரணங்கள் –112
பஞ்சக்ருத்யம்--115
பட்டாங்கு--20
பதமுக்தி–43
பதம் –95
பதிபசுபாசலக்ஷணங்கள்–32
பதிவ்ரதம்–5
பதினெட்டுத்தர்மஸாஸ்த்ரம்–32
பதினெண்கீழ்க்கணக்கு –16
பத்ததசை–48
பத்தன்–116
பத்மாஸநம்—77
பத்ரப்படுத்தல்—105
பயதுக்கநிவ்ருத்தி—104
பரஞானம்–33
பரம்ஜோதி –23
பரதர்மம் –16, 17
பரப்ரஹ்மசொரூப ஜீவன்முக்தன்–113
பரமாத்மசொரூபம்–43,
பரமாத்மா—26
பரமுக்தி—43
பரம்—33
பராஶக்தி—26
பராசக்தியைத்தொழுதல்—38
பராசரருஷி—27
பரிசாரககுணங்கள்—86
பரிசுத்தபரமானந்தமோக்ஷம்—90
பல்லக்கு—101
பழவினை –49
பஸ்மதாரணம்—37
பக்ஷபக்ஷபாரம் 41

பா

பாகுதந்தம் 15
பாக்யவான் 107
பாடலம் 9
பாண்டிப்பெருமாள்விருத்தியுரை 26
பாதாலம் 29
பாபகர்மம் 108
பாபபீஜம் 111
பாயஸம் 111
பாயிரம் 10
பார்ஹஸ்பத்யம் 15
பாலனகுணங்கள் 86
பால்இயல்அதிகாரங்கள் 9
பாஹ்யேந்த்ரியநிக்ரஹம் 53

பி

பிணி 50
பிதுர்தேவதைகள் 30
பிதிர்லோகஸ்ருஷ்டி 117
பிம்பங்கள் 28
பிரித்துப்பார்க்கிறஸக்தி 18
பிறந்தவூர் 2
பிறவித்துன்பங்கள் 15

பீ

பீஜங்கள் 112
பீஷ்மாசாரியர் 15

பு

புண்யகர்மங்கள் 92, 108
புண்யபீஜம் 111
புதன் 30
புதுவினை 49
புத்தி 38
புத்திநாசம் 94
புத்ரமார்க்கம் 36
புநர்ஜன்மம் 51
புநராவ்ருத்தி—112
புராணங்கள்—12
புராணபுருஷன்—27
புருஷகாரம்—112
புருஷார்த்தங்கள்—1, 12, 107
புருஷார்த்தங்களைவிளக்கும் மூல நூல்கள்—13
புருஷார்த்த நூல்களின்சரித்திரம்—16
புலிமுரசு—9
புலைச்சி—2
புவர்—29
புவனம்—95, 96
புறக்கரணங்கள்—52
புறத்திலுள்ளலோகங்கள்—29
புறநானூறு—2
புஷ்கரம்—30

பூ

பூதாகாஶம்—60
பூலோகஸ்ருஷ்டி 117

பெ

பெண்பாற்கூற்றியல் 10
பெரியர்—80

பே

பேறு 50, 97
பேரறிவாளிகள் 3
பேரறிவு 3
பேரன்பு 3

பொ

பொதியமலை 9
பொய்நீரொழுக்கம் 53
பொய்வாழ்வு 42
பொருட்பால் 10
பொருளதிகாரம் 83
பொருளியல் 10
பொருள் 117

போ

போகஸ்ருஷ்டி 117
பேூாகியார் 10
போக்தா 108
போக்த்ருத்வமோஹம் 72
போதனுஸக்தி 1
போலிச்சுகம் 108
போலித்துறவி 53

ப்

ப்ரக்ருதி 114
ப்ரக்ருதிபந்தனங்கள் 92
ப்ரக்ருதிரூபதேஹம் 114





ப்ரணவநாதவடிவம் 31
ப்ரணவபேதபடலம் 26
ப்ரணவம் 26
ப்ரதிபிம்பங்கள்—28
ப்ரபஞ்சஞானம்—33
ப்ரபஞ்சம் —27
ப்ரலயகாலம்—42
ப்ரவிருத்திமார்க்கம்—51, 112
ப்ரஜாபதி—
ப்ரஹஸ்பதி—30, 95
ப்ரஹ்ம கலை—26
ப்ரஹ்ம சர்யம்—21
ப்ரஹ்மஞானம் –13
ப்ரஹ்மயோகி 38
ப்ரஹ்ம ரந்த்ரம்
ப்ரஹ்மவித் 78
ப்ரஹ்மவித்துக்கள் 77
ப்ரஹ்மவித்வரீயர்கள் 77
ப்ரஹ்மஸ்வரூபம் 3
ப்ரஹ்மாணி—38
ப்ரஹ்மாண்டம் 29, 30
ப்ரஹ்மார்ப்பணம்
ப்ராசேதஸர். 15
ப்ராணஅபானவாயுக்கள் 36
ப்ராணலயயோகம் 1, 61
ப்ராணாயாமம் 113
ப்ராரப்த கர்மபலன் 112
ப்ராரப்த கர்மம் 49, 111
ப்ராஹ்மபுத்தி 119
ப்ராஹ்மணகுணம் 17, 19
ப்ராஹ்மணத்வம். 87
ப்ராஹ்மணன் 9

ம

மகர் 29
மகாதலம் 29
மடங்கள் 21
மணிபூரகம் 40
மணிமேகலை 3
மண்டலம் 30
மதுரை 8, 9
மத்யமஜாதி 118
மநு 32
மந்த்ரம் 95
மமகாரம் 47
மமதை 41
மயிலாப்பூர் 4
மருத்துவன்தாமோதரனார் 10
மலகார்யங்கள் 41
மலம் 114
மலவிகாரங்கள் 109
மலஶக்திகள் 41
மலாடனார் 10
மறம் 94
மறைமொழி 84
மனனம் 24, 54
மனோகாசம் 26, 60
மனிதரின்சரித்ரம் 119
மனோநிக்ரஹம் 53, 113
மனோலயம் 41
மனோலயயோகம் 1, 61
மஜ்ஜை 66
மஹர்லோகம் 30
மஹாதேவி 38
மஹாபாரதம் 15, 32, 95
மஹாபாரதயுத்தம் 7
மஹாவம்ஶம் 6
மஹாவிநோதஜீவகலைக்கூட்டம் 26
மஹேஶ்வரன் 22

மா

மாணிக்கவாசக ஸ்வாமி 8
மாதாநுபங்கி 4
மாமூலனார் 2, 13
மாயாமலம் 99
மாயை 26
மானஸதேகசுகக்குறைவு 113
மானஸபுத்ரர்கள் 14
மானஸரூபங்கள் 29

மி

மித்யாசார ஸங்யாவி 54
மிஶ்ரபீஜம் 59
மிஶ்ரமலஶக்திகள் 59

மீ
மீன்முரசு 9
மு
முக்கொடி—9
முக்திதசை---48
முக்தன்--116
முக்திநெறி--37
முக்திமார்க்கம் 51
முடத்திருமாறன் 6
முதல் 28
முதற்று 28
முதற்காரணம் 28
முத்தமிழ் 9
முந்நதி 9
முந்நாடு 9
முப்பால் 9
முமுக்ஷுத்வம் 74
மும்மலை 9
மும்மா 9
மும்முரசு 9
முறுவை. 2
மூ
மூக்கு 52
மூப்பு 50
மூலஅணு 114
மூலநூல்கள் 13
மூலம் 40
மூலாதாரம் 40
மெ
மெய் 52
மெய்ஞ்ஞானம் 33
மெய்யறிவு 1
மெய்வாழ்வு 42
மே
மேதை 38
மேல்லோகங்கள் 29
மேற்கோள் 2
மை
மைத்ராயண்ய உபநிஷத் 26
மோ
மோசிகீரனார் 11
மோக்ஷபாதை 40, 41
மோக்ஷமார்க்கம் 51
மோக்ஷம் 13
மோஹம் 72
ய
யஜுர் 13, 32
யஜ்ஞ கர்மம் 67
யஜ்ஞ தான கர்மங்கள் 105
யா
யாளிதத்தன் 2
யாஜ்ஞவல்கியர் 18
யு
யுதிஷ்டிர மஹாராஜன் 15
யோ
யோக ப்ரஷ்டன் 113
யோகம் 41
யோகயுக்தன் 113
யோகருருக்ஷு 113
யோகஸம்பந்தபுத்தி 113
யோகஸாதனைகள் 41
யோகஸித்தி—113
யோகக்ஷேமம் 105
யோகாப்யாஸிகள் 113
யோகாரூடன் 113
ர
ரஜஸ்குணத்தின்காரியம் 85
ரஜஸ்குணம் 115
ரஜஸில்தமஸ்—116
ரஜஸில்ரஜஸ்—116
ரஜஸில்ஸத்வம்—116
ரஸதந்மாத்ரை 61
ரஸாதலம் 29
ரஹஸ்யமானவித்தை 103
ரா
ராகத்வேஷங்கள் 41
ராகம் 44
ராமநாதபாஷ்யம் 116
ராமநாதீயம் 91
ராமாயணம் 15, 32
ராஜயோகம் 41



ரு
ருக் 13, 32
ருத்ரகலை 26
ருத்ரன் 22
ருஷிகள் 38
லோ
லோகத்தின்லக்ஷணம் 28
லோபமில்லாமை 16
வ
வண்மை 1
வயலூற்றுக்காட்டிலுப்பை 2
வரகர்மம் 104
வரன் 77
வர்ணபேதபடலம்—26
வர்ணம்—16
வளர்ந்தவூர் 2
வள்ளுவஜாதி 3
வஸிஷ்டர் 15
வா
வாசுகி 4
வாதுலசுத்தம் 26
வாய் 52
வாழ்நாள் 105
வாழ்வு 42
வாஸநா ரூபங்கள் 29
வி
விக்ரஹம் 36
விக்ரஹஆராதனை 36
விசுத்தி 40
விசேஷதர்மம் 16
விதிநிஷேதம் 119
விதேஹமுக்தி 42
வித்யாமார்க்கம் 51
விநாயக ப்ரார்த்தனை
விமூடபுத்தி 54
விராஹம் 92
விருப்பு 43
விநோதஸம்பந்தம்பெற்றஇரட்டைகள் 103
வில்முரசு 9
விவர்த்தம் 67
விவேகம் 105
வினைப்பயன்சேர்தல் 71
விஜ்ஞானஶக்தி 58
விஶாலஅறிவு 80
விஷாதம் 44
விஷ்ணுகலை 26
விஷ்ணுபுராணம் 27
வீ
வீடு 1
வீர்யம் 27
வெ
வெண்டேர்ச்செழியன் 5
வெறுப்பின்பெருக்கு 45
வெறுப்பு 43
வே
வேண்டுதல்வேண்டாமை 43
வேதம் 13
வேதாகமசாஸ்த்ரம் 31
வேத்யம் 13
வை
வைகையாறு.
வைசாலாக்ஷ்யம் 15
வைசித்ரியம் 44
வைசியகுணம் 17
வைஶ்யத்வம் 87
வ்
வ்யாகரணம் 32
வ்யாப்தி 30
வ்யாப்திவ்யாபக ஸம்பந்தம் 31
ஶ
ஶங்கராசாரியஸ்வாமி 39
ஶப்தசொரூபம் 31
ஶமம் 53
ஶா
ஶாகம் 30
ஶால்மலி 30
ஶாஸநங்கள் 33
ஶி
ஶிக்ஷா 32
ஶிவாநுபூதி 33

ஶை

ஶைவவைஷ்ணவபுராணம் 32

ஶோ

ஶோஷம் 44

ஶ்ர

ஶ்ரத்தை 38
ஶ்ரவணஞ்செய்தல். 54
ஶ்ரவண மநந அப்யாஸங்கள் 112
ஶ்ரவணம் 54
ஸ்ரீ. 27

ஸ

ஸகமார்க்கம் 36
ஸகளசொரூபம் 43
ஸங்கல்பவிகல்பம் 41
ஸஞ்சிதகர்மபீஜங்கள் 111
ஸஞ்சிதம் 111
ஸதாசாரம் 54, 119
ஸதாசார ஸந்ந்யாஸி 54
ஸதாதபர் 15
ஸதேஹமுக்தி 1
ஸத் 58
ஸத்குரு 41
ஸத்யம் 29, 30
ஸத்வகுணத்தின்கார்யம் 85
ஸத்வகுணம் 115, 119
ஸத்வத்தில்தமஸ் 86
ஸத்வத்தில்ரஜஸ் 86
ஸத்வத்தில்ஸத்வம் 86
ஸநகர் 30
ஸந்தானலக்ஷ்மி 65
ஸந்த்யா 37
ஸந்த்யாவந்தனம் 37
ஸந்த்யாவந்தன ஸங்கல்பம் 35
ஸந்ந்யாஸி 71
ஸந்மார்க்கம் 36
ஸமத்வபுத்தி 37
ஸமத்வபுத்திப்பழக்கம் 24
ஸமாதி 1, 54
ஸம்ஶயவிபரீதபுத்தி 54
ஸம்ஹாரம் 109
ஸரஸ்வதி 38
ஸஹஸ்ரதளம் 24, 39
ஸஹஸ்ராரசக்ரம் 40

ஸா

ஸாதுஸங்கப்பழக்கம் 70
ஸாமம் 13, 32
ஸாமாந்யதர்மங்கள் 16
ஸாயுஜ்யமுக்தி 43

ஸி

ஸித்தலோகம் 117
ஸித்தாந்தஶாஸ்த்ரம் 2

ஸு

ஸுகபாவனை 86
ஸுதலம் 29
ஸுப்ரஹ்மணியர் 30
ஸுஷும்நா 40

ஸூ

ஸூக்ஷ்மஅக்ஷரத்தொனிகள் 26
ஸூக்ஷ்மஶரீரம் 1, 42, 93
ஸூக்ஷ்மஶரீரஸ்ருஷ்டி 117

ஸோ

ஸோபானமார்க்கம் 35

ஸௌ

ஸௌபாக்யம் 92

ஸ்

ஸ்காந்தம்
ஸ்திதி
ஸ்தூலதேஹம் 3, 42
ஸ்தூலதேஹலக்ஷணம் 3
ஸ்தூலஶரீரம் 1, 2
ஸ்மரணங்கள் 15
ஸ்ம்ருதிகள் 12, 15
ஸம்ருதிச்சேதம் 94
ஸ்ருஷ்டி 109
ஸ்ருஷ்டிக்ரமம் 27
ஸ்ருஷ்டிதத்வம் 26
ஸ்ருஷ்டிலயக்ரமங்கள் 26
ஸ்வகர்மம் 17
ஸ்வகுணம் 17



ஸ்வதந்த்ரம் 58
ஸ்வதர்மம் 16
ஸ்வர்க்கலோக ஸ்ருஷ்டி 17
ஸ்வர் 29
ஸ்வர்லோகம் 30
ஸ்வஸ்தி 38
ஸ்வாநுபூதிமான்கள் 13

ஹ

ஹடயோகம் 4

ஹி

ஹிதகர்மம் 96
ஹிதம் 110

க்ஷ

க்ஷத்ரியகுணம் 17

# அணிந்துரை.

(1)

## திருவள்ளுவ ஞாபக மஹாஸபையில்,

ஸ்ரீமான் கௌரவ பொன். ராமநாததுரை, K. C, C. M. G,

அவர்களைப்பற்றி

ஸ்ரீமான் V. V. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் B. A., B. L.

அவர்கள் கூறியது.

[திருவள்ளுவநாயனாரது மான்மியத்தை விளக்கும்பொருட்டுத் திருவள்ளுவ ஞாபக மண்டபம் என்பதொன்று அமைக்கவும், ஞான சாஸ்த்ரங்களையும் தர்ம சாஸ்த்ரங்களையும் ஏனைய தமிழ்நூல்களையும் பலா ஆராய்ச்சி செய்யும்படி ஒரு புஸ்தகசாலை ஸ்தாபிக்கவும், இதுவரையிற் பிரசுரப்படாத அரிய தமிழ்நூல்களை அச்சிட்டு வெளிப்படுத்தவும், ஆலோசனை செய்யும்படி சென்னைக்குச் சமீபமாகவுள்ள திருமயிலாப்பூரில் திருவள்ளுவரது திருக்கோயிற் ப்ரகாரத்தில் 1917ம் ௵ ஜூன் ௴ 5உ ஒரு மஹாஸபை கூட்டப்பட்டது]

இந்தத் திருவள்ளுவ ஞாபக மஹாஸபைக்கு ஸ்ரீமான் V. V. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் B. A., B. L. அவர்கள் கௌரவ ராமநாதன் அவர்களை அக்ராஸநாதிபதியாகும் வண்ணம் பின்வருமாறு எடுத்துரைப்பாராயினர்:—

"எங்கள் நடுவிலே ஸ்ரீராமநாதப்ரபு அவர்கள் விஜயமாகி வீற்றிருத்தல் இந்த உத்ஸவத்தின் ப்ரகாசமகுடமாக விளங்குகின்றது. திருவள்ளுவரது ஞாபகமாக முதன்முறை கூடும் கூட்டம் இதுவேயாம். இக்கொண்டாட்டத்தினை நன்கு நடாத்த வல்ல நாயகரொருவரை வரிக்கும்படி சபையார் என்னைக் கேட்டபொழுது எனது மனசானது செந்தமிழுக்கு சரணமாகிய ஸ்ரீராமநாத வள்ளலாரை நாடி இலங்கைக்குப் பாய்ந்தது.

"இத்தகைய வித்வத்ஸபைக்கு நாயகமாக நின்று அலங்கரிக்கவல்ல உத்தம புருஷர் அவரொருவரே என்பது எனது



அபிப்பிராயம். தமிழிலக்கண இலக்கியங்களில் அபிமானம் பெரிதுடையராதலின் இச்சபைக்கு நாயகராகுக என்னும் நமது இரப்புரையை மறுக்கற்பாலரல்லர். அஷ்டதிக்குகளினும் பரந்த தமது கீர்த்திப்ரதாபத்தினாலும் இலங்கையின்கண் இடையறாது செய்து கொண்டிருக்கும் தேசகைங்கரிய முழக்கத்தினாலும், முன்னரேயே எம்மனோரால் நன்கு அறியப்பட்டவர். அவரது நாமத்தின் ஆகர்ஷண சக்தியும், அவர் செய்யுங்கர்மங்களின் மந்த்ரத்வமும் இலங்கைசென்று நேரே காணின் நன்கு விளங்கும். இலங்கை ராஜாங்க சட்டநிரூபண ஸபையில் அங்கத்தவராக இருக்க விரும்பின ஸிம்ஹளகனவான் ஒருவனை வெறுத்து ஸிம்ஹளமஹாஜனங்களே அச்சபைக்கண் தமக்குப் பிரதிநிதியாக இந்தத் தமிழ்ப்ரபுவைத் தெரிந்துகொண்டமையானே இவர்பால் ஸ்வஜாதியினராகிய இலங்கைத் தமிழர்க்கேயன்றி இதரஜாதியினராகிய சிம்ஹளவர்க்குமுள்ள அன்பும் அபிமானமும் எத்துணைய வென்று ஊஹிக்கலாம். அவர்களது மதிப்பே சரி. செயற்கரிய செய்து முடிக்கவல்ல ஜயவீரர்களென்று கார்லயில் (Carlyle) என்னும் ஆங்கிலநூலாசிரியர் கூறிய கூற்றுக்கு த்ருஷ்டாந்தமாகும் அரியபெரிய புருஷர்களில் இவரொருவராவர். ஏகராஜாதிபத்யத்தை அனுஸரியாது ஸர்வஜனாதிபத்யத்தை அனுஸரித்து வரும் தற்காலத்தவராகிய நாம் இந்நாளினும் ஜயவீரர்களைப் பற்றியே வாழ்கின்றோம்.

"இலங்கையின்கண் இவர்ப்ரஜைகளின் சீர்திருத்த விஷயமாகச் செய்துவந்த கைங்கரியம் அங்கு வாழ்பவரது உடைநடை பாவனைகளை உன்னதமாக்கிற்று.

"யாழ்ப்பாணத்திலே இவர் அலங்காரமாக ஸ்தாபித்த கந்யாமஹாவித்யாலயம் இவரது விசேஷ பரோபகாரத்திற்கு அழியாததோர் ஞாபகசின்னமாகப் ப்ரகாசிக்கின்றது.

"தமிழகத்தில் இக்கரையினும் அக்கரையினும் உள்ள நாமனைவரும் இந்தத் திருவள்ளுவர் ஞாபகத் திருவிழாவால் ஐக்கியப்பட்டமையால், தமிழிலக்கணத்திலும் இலக்கியத்திலுமுள்ள அபிமானமும் ஶ்ரத்தையும் நமக்கு மேன்மேலும் வ்ருத்தியாகுமென்று நம்புகின்றேன்."

(2)

## திருவள்ளுவ ஞாபக மஹாஸபையின்கண்,

### ஸ்ரீமான் கௌரவ பொன். ராமநாததுரை, K C, C. M. G.,

அவர்களது நல்வரவு

மேரி ராணியார் கலாசாலைத் தமிழ்ப் பண்டிதர்

**ஸ்ரீமான் கா. நமச்சிவாய முதலியார் பாடியது.**

நேரிசை ஆசிரியப்பா.

அறிவுறு செல்வர் அவைதரு முலகில்
செறிதரு பொருளெலாஞ் செழிதரக் காட்டிப்
புலமிகு மாந்தர் புத்துல கென்ன
நலவுரை மிழற்று நயனமர் கொழும்பு
வளநகர் வைகும் வண்மைசா லறிஞன்
முத்தமிழ் வாழ்வும் முழுதொருங் குற்றவன்
வித்தக விழுப்பொருள் விழைவிற் பெற்றவன்
ஆங்கில மொழியின் பாங்கெலா முணரும்
ஓங்குறு புலவன் உறுபுக ழாளன்
தனக்கென வாழாத் தனிப்பெரும் பூட்கையன்
மனக்கண் மாசிலன் வாக்கி லின்சொலன்
எல்லார் தமக்கு மினிதே யியற்றும்
நல்லான் ராம நாத னென்பொன்
பெருமை பிறக்கும் பேரறி வாள!
உரிமையில் வள்ளுவர்க் குற்றிடு விழாவைக்
களிதரக் குயிற்றிக் காட்சி மேவ
அளிதரு நின்னை அணுகினெம் நீயும்
"பயன்மர முள்ளூர்ப் பழுத்தற்" றென்னும்
நயன்மிகு பாவின் நன்சுவை தேற்ற
அன்புடன் உள்ளத் தமர்ந்தே யிவ்விடை
இன்புடன் போதற் கிசைந்தனை அண்ணல்
கைம்மாறு வேண்டாக் கடப்பா டுடையோய்!



எம்மாறு செய்வேம் செய்ம்மா றறியேம்
தீது நீங்கத் திருவெலாம் ஓங்க
எதமில் லிராம னெய்தினன் றென்பால்
ஆங்கவன் பேர்புனை அரும்பெறல் நண்ப!
நீங்கிவண் ஒழியத் தென்பால் நின்றும்
வடபாற் போந்தனை வள்ளுவர் பொருட்டே
சைவந் தழையத் தனிப்பெருந் தலைமை
மையறப் பூண்ட மணியே வண்டமிழ்
செழுந்திரு தழைய விழைந்திடு தலைமையில்
பொய்யில் புலவர் புகன்ற அறமெலாம்
மெய்யினிற் கொண்டியாம் உய்வினை நாடச்
சீரிய ஒழுக்கினிற் சிறக்கக் காட்டிப்
பூரியோய் எம்மைப் புகல்வின் நோக்க
வேண்டி நின்றனம் ஆண்டாண் டாகப்
பேரெலா மெய்திப் பேருல கதனில்
வீறிய இன்பினில் விளங்கி
வாழிய மாதோ வாழிய மாதோ.

---

(3)

### ஸ்ரீமான் கௌரவ பொன். ராமநாததுரை, K C., C. M. G.,

அவர்களைப்பற்றி

மதுரை

**ஸ்ரீமத் மு. ரா. கந்தசாமிக் கவிராயர் அவர்கள்**

இயற்றியது.

கற்றுழ்ந்தா ராய்ந்தாராங் காவலரைப் பூவிலெண்ணி
னிற்றுழ்ந்தா ரன்றியுன்முன் னிற்பவர்யார்—முற்றுய்
திருவள் ளுவரோர் திருவுருக்கொண் டானோ
தருபுகழாய் ராம நாதா.

---

(4)

## ஸ்ரீமான் கௌரவ பொன். ராமநாததுரை, K. C., C. M. G., அவர்களைப்பற்றி சோழவந்தானூர் மஹாவித்வான் அரசஞ்சண்முகம்பிள்ளை அவர்கள் பாடிய வாழ்த்துக் கவிகள்.

கல்வியினாற் செல்வத்தா லீகையினா லோகையினாற்
கருணை தன்னால்
நல்வினையால் யோகத்தான் ஞானத்தான் மோனத்தா
னலஞ்சேர் மாட்சி
சொல்வகையிற் பல்லோர்பாற் கேட்டதன்றி நின்வயிற் போற்
றொகக்கண்டார் யார்
செல்வமலி யிலங்கையில்வாழ் சயராம நாதனெனுந்
திருப்பே ரோனே. ௧

திருப்பேராத் தவமுடைய செம்மலே சனகனுழைத்
தெய்வ ஞானம்
விருப்பேரார் கல்வியொடு செல்வமுமிக் குளவெனினு
மெய்த்த வத்துக்
கருப்பேரா சயங்கடந்த சுகன்முதலோர் சில்லோரே
கண்டின் புற்றார்
பொருப்பேரா தரத்தானீ பல்லோரை யுய்வித்துப்
புகழ்பெற் றாயே. ௨

புகழ்பெற்ற சங்கரரும் பரதகண்டத் தார்க்கன்றிப்
புகன்ற தில்லை
அகல்வானத் தாதவனும் நம்பகலிற் பார்த்தறியா
அமெரிக் காவும்
தகவுடைய பிறநாடு நீசென்று ஞானமழை
தழைப்பப் பெய்தாய்
மிகவுடைய நின்சீர்த்தி யெம்மனோ ரொருநாவால்
விளம்பற் பாற்றோ. ௩



விளம்புவதென் னாதிநரர் மொழியாய தென்மொழியில்
விண்ணோர் போற்றும்
வளம்படைத்த வடமொழியி லாங்கிலத்திற் புலமைநிறை
மாண்பு பெற்றே
உளம்படைத்த மும்மொழிக்கும் வரம்பாகி யாழியென
வுற்ற நின்பாற்
குளம்படைத்த நீரன்றோ யாம்படைத்த கல்வியெலாங்
கூறுங் காலே. ௪

கூறுவர் பொய்யுலகமெனப் பிறர்பொருளைக் கொள்ளைகொளக்
கூசா ரீகைக்
கேறுகரு முகிலென்பர் கடுகளவு மிரந்தார்க்கொன்
றீயார் வஞ்ச
வீறுகொடு பலர்திரியக் கண்டுமனம் வெறுத்துன்னை
மேவி நின்பால்
மாறுபடா வாக்குமுயர் வண்மையுந்தண் மையுங்கண்டு
மகிழ்ந்திட் டேனே. ௫

மகிழ்வொடுதே வாலயபா லனமுதலாப் பலவறமும்
வயங்கக் கண்டேன்
முகிலனைய கொடைகண்டேன் முராரியென யோகநிலை
முயங்கக் கண்டேன்
மகிதலத்தோர் விருப்புவெறுப் பிவைநினைக்கில் லெனக்குறை
வகையுங் கண்டேன் [சொல்
விகிதமுட னவ்விரண்டும் சமமெனக்கொள் மேன்மையினா
மிக்கோ னீயே. ௬

மிக்கநினைப் பிரிந்தென்னூர் செலவஞ்சி யானிருந்தும்
விடாதா லூழும்
பக்கலுறு கற்றோரைத் தீர்தலினும் தீப்புகுதல்
பார்க்கி னன்றென்
றக்கழகத் துறுபுலவர் சொன்மொழியு மென்மனத்தை
யலைத்த தையா
இக்கணமே நினைப்பிரியா வென்னுளத்தை நீபிரியா
வியல்பீ வாயே. ௭

வாய்மைநிறை கற்பிலருந் ததியுபூயர் கல்வியில்வெண்
மலர்வாழ் மாதுஞ்
சேய்மையுறு புகழ்குணத்தி லன்பினில்வா சுகியுமெனச்
சிறந்து வாழும்
தூய்மையுறு மம்மைலீ லாவதியா நன்மனைசேய்
சுற்றத் தோடும்
வாய்மைபுகல் பெருவள்ளால் பல்லாண்டு நீடூழி
வாழி வாழி.

அ

---

(5)

ஸ்ரீமான் கௌரவ பொன் ராமநாததுரை, K. C. C., M. G.,
அவர்களைப்பற்றி
ஸ்ரீராமநாத வித்யாலயத் தலைமைத் தமிழ்ப் புலவராகிய
திருவாநூர் ஸ்ரீமத். நவநீத கிருஷ்ண பாரதி
இயற்றியது.

சதுர்மறையுட். சாரத்தைச் சதுர்முகத்தோன் முப்பாலாச்
சாற்றினனென்
பதுகருதாப் புலவோர்கள் தமதுகல்வி வன்மை யொன்றே
பரக்கக் காட்டி
யதன்மைநிறை யுரைதனையே மெய்யுரையா யெல்லாரு
மறிந்து போற்றும்
உதையறிந்த அவன்கரு ா கொண்டுலகைக் காத்தலுக்கே
உற்று னென்ன

வரும்ராம நாதமன்னன் வாய்மைநிறை போதனெண்பா
வாணர்க் கென்றும்
தரும்போஜன் தமிழ்நாட்டு மங்கையரைச் சரஸ்வதியாய்த்
தழைக்கச் செய்தோன்
பெரும்பூபா லர்க்கிருகண் ணேபோன்றோன் சிவபணியிற்
பெட்புக் கொண்டோன்
இரும்பாரு நெஞ்சேமைக் கனியவைக்கு மினியசொல்லோன்
இணைய நல்லோன்.



சொற்பொருளைக் கற்பனையை அலங்காரச் சுவைமுதலாத்
துதைந்த வற்றை
விற்பனரு மதித்திடுமா றினிதாக விரித்துண்மை
விளங்கக் காட்டிச்
சற்பொருளாஞ் சாரத்தை இதயத்தி லூற்றிநன்மை
தழைக்கச் செய்யும்
அற்புதஞ்சேர் தமிழ்விருத்தி யந்நூலுக் கணிந்துபுகழ்
அடைந்தா னம்மா.

---

(6)

ஸ்ரீமான் கௌரவ பொன் ராமநாததுரை, K. C., C. M. G.,
அவர்களைப்பற்றி
ஸ்ரீராமநாத வித்யாலயத் தமிழ்ப் பண்டிதர்
மட்டுவில் ஸ்ரீமத் வே. மஹாலிங்கசிவம்
இயற்றியது.

போற்றிருக்கு முதனூன்கும் புவனமெலா மீடேறப்
புகன்ற பைந்தேன்
ஊற்றிருக்கு நறுங்கமலப் பொகுட்டமருந் திசைமுகன்போ
லுண்மைத் தெய்வம்
வீற்றிருக்குங் குறளெனச்சீர் வள்ளுவனார் வாய்மலர்ந்த
மெய்ந்நூற் காய்வோர்
ஏற்றிருக்க இயற்புலவ ரியம்புமுரை பலஇசைபெற்
றிலகு மாதோ. 1

திருக்குறளிற் கிலக்கணத்தின் றிறங்காட்டிச் சொற்பொருள்க
டெளிவு செய்தே
உருக்கமொடு பயில்வாருக் கிலக்கணலக் கியஞான
முதவு மேன்மைப்
பெருக்கினஅவ் வுரையேனுங் குறணூன்மெய்ப் பொருள்விளக்
பெற்றி யின்கட் [கும்
சுருக்கமுற லாற்பயில்வார் தமிழ்வேதப் பயன்சிறிதே
துய்ப்பா ராக, 2

அன்னதுகண் டமிழ்தனைய தமிழ்வேதத் திருக்குறணூ
லயனார் முன்னாட்
பன்னுவட மொழிவேத நிகர்ஞான நூலெனவே
பயில்வார் கண்டு
மன்னுமன விருடுமித்துச் சிவஞான வாழ்வுபெறும்
வகையுண் ணாடிப்
பொன்னனைய சிவயோகப் பேரொளியா லந்நூலின்
பொருண்முற் றோர்ந்தே. 3

துலங்காத இருடுரந்து பொருண்முழுதும் வெளிசெய்யும்
சுடரோன் போல
இலங்காது குறணூலின் மறைதருமெய்ப் பொருண்முழுது
மெளிதி னோர
நிலங்காணு மொழியெவற்று முதன்மைபெறு தமிழ்மொழியி
னிலைபெற் றோங்க
அலங்கார மாயியற்றித் தனதுபெய ரான்விருத்தி
யருளி னானல் 4

மற்றவன்யா ரெனினவில்வன் வளம்பெறுநம் மிலங்கைநல
மருவ வந்தோன்
உற்றஉயர் மதிநலத்தான் மலைமுனிபோற் கலைக்கடன்முற்
றுண்ட தீரன்
பற்றலரு மனமுருகி வசமிழந்து பகைமறந்து
பரவா நிற்பக்
கொற்றமொடு சபையேறி மதுரவாக் கமிர்து பொழி
கொண்ட லானோன். 5

நீரிலங்கை ராஜாங்க சட்டநிரு பணசபையி
னின்றே யாள்வோர்க்
கேரிலங்கு நீதிமுறையெடுத்துரைப்போன் றடுத்துரைப்போர்க்
கிடிபோல் வாதப்
போரிலங்கைச் சரமனைய சொல்வலிகொண் டடர்த்தவரைப்
புறங்காண் வீரன்
சீரிலங்கு தருமமளப் பிலபுரியும் பிரபுசிகா
மணியா யுள்ளோன். 6



கருமபந்த மணுகாமற் சிவார்ப்பணமா வினைநடத்துங்
கரும யோகி
பரசவருஞ் சிவயோகம் பழுத்தகில முஞ்சிவமே
பார்க்கு ஞானி
வருமெனது வினையகலக் கடைக்கணித்தென் புன்றலைமேல்
மலர்த்தாள் சூட்டும்
குருமணி யானந்தமணி சிவமணியெ னுளங்கோயில்
கொண்ட சோதி. 7

வலம்புரியீன் றிடுங்கதிர்வெண் முத்தெனப் பொன்
னம்பலப்பேர் வள்ளலார்பால்
நிலம்புரியுந் தவப்பயனா யவதரித்தே நடுவிசும்பி
னின்று கோடி
வலம்புரியுங் கிரணமுல கெங்குமுமிழ் பானுவென
வயங்கா நின்ற
நலம்புரியுந் துரைராம நாதனெனச் சகம்பரவு
நாமத் தோனே. 8

## குருஸ்தோத்திரம்.

ஆவேறு பாடார் வினைவழி யேயென் மனமலையக்
காவேன் வலியின்மை யாலது நோக்கிக்கை தூக்கவரும்
தேவே சரணந் சிவமே சரணஞ் சிவக்கொழுந்தாங்
கோவே சரணந் துரைராம நாத குருமணியே. 9